சக்தி மலர்

3470

## மு. அருணசலம், எம்.ஏ.

# யான் பெற்ற இன்பம்

3470

அன்பர் மு. அருணசலம், இலக்கியத்தை 'கவிஞன் கண்' கொண்டு பார்த்து ஆனந்திப்பவர். இலக்கியத்திலே தாம் கண்ட இன்பத்தை இக் கட்டுரைகளிலே கூறுகிறார்

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISW... CHETTIAR

3470

Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVI... ...CHETTIAR

# யான் பெற்ற இன்பம்

3470

Y.M.C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

ஆசிரியர் :

மு. அருணாசலம், எம். ஏ.

திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள்
அணிந்துரையுடன் கூடியது

சக்தி காரியாலயம்
வடக்குவெளி வீதி :: மதுரை

முதற் பதிப்பு : பிப்ரவரி 1943

சகல உரிமைகளும்
சக்தி காரியாலயத்தாருக்கு

விலை ரூ. 1—8—0

சக்தி பிரஸ் லிமிடெட், காரைக்குடி

3470

## பதிப்புரை

இலக்கியம் ஒரு கலை. கவிஞன், தான் உணர்ந்து அனுபவித்த உண்மைகளைச் சொல்லிலே அமைக்கிறான்; இவை இலக்கியமாகின்றன. இலக்கியத்தைக் கவிஞன் உள்ளத்தோடு ஒன்றி அனுபவித்தால் ஆனந்த மேற்படுகிறது; உள்ளம் தூய்மை பெறுகிறது, வாழ்க்கையும் திருந்துகிறது.

அன்பர் மு. அருணாசலம், இலக்கியத்தைக் கவிஞன்கண் கொண்டு பார்த்து ஆனந்திப்பவர். இலக்கியத்திலே தாம் கண்ட இன்பத்தை இக் கட்டுரைகளிலே கூறுகிறார். இலக்கிய உணர்ச்சி வளர இவை துணைபுரியும் என்பது எங்கள் நம்பிக்கை.

பொருள் செறிந்ததோர் அணிந்துரை யளித்த திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களுக்கு எங்கள் நன்றி உரியது.

சக்தி காரியாலயத்தார்.

# அணிந்துரை

தமிழ் எது? மொழியா? அன்று; நாடா? அன்று. பின்னை எது? வாழ்க்கை. தமிழ் வாழ்க்கை இயற்கையோடியைந்து ஒழுகுவது.

இயற்கையோடியைந்து ஒழுகுவோர் எவராயினுமாக. அவர் தமிழ் வாழ்க்கையினரே ஆவர். திருவள்ளுவர், ஷெல்லி, தாகூர் முதலியோர் தமிழ் வாழ்க்கையினர் என்று கூறல் மிகையாகாது.

தமிழ் வாழ்க்கையர்க்கு இயற்கை நிகழ்ச்சியிலே பொலிதரும் பாடல் புலனாகும். சிலர் தமக்குப் புலனாகிய இயற்கைப் பாடலை எழுத்தோவியமாக்கி இன்புறுவர். அவ்வோவியமே செய்யுள் என்பது.

பனித்துளி ஒன்று தன்னிடத்தே ஒரு பெரிய மரத்தைத் தாங்கி நிற்றல் வெள்ளிடைமலை. அதே போல, எழுத்தோவியமும் தன்னகத்தே இயற்கைக் கோலத்தைத் தாங்கி நிற்கிறது. எழுத்தோவியம் ஒரு பாலம் போன்றது. அப்பாலம், உள்ளம் இயற்கைப்பாட்டை அடைதற்குத் துணைபுரிவது. இஃது அனுபவத்தில் உணரத்தக்கது.

இந்நூலாசிரியர் கற்பன கற்றுக் கேட்பன கேட்டுச் சிதம்பரநாதன் ஓவியப்பள்ளியில் பயின்று தமிழ் வாழ்க்கையரானவர். அத்தகைய ஒருவர்க்கு எழுத்தோவியத்தின் உள்ளம் காட்சி யளித்தல்

இயல்பன்றோ? அக்காட்சியில் அவர் பெற்ற இன்பம் இந்நூலில் தேங்குகிறது. "நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்பது திருமூலர் திருவாக்கு.

இந்நூல், சில எழுத்தோவியங்களின் விரிவைக் காட்டுவது. எழுத்தோவியம் சுருக்கம்; விரிவுரை அதன் பெருக்கம். பெருக்கம்பற்றினால் அது தன்னைப் பற்றுவோரைத் தனது முதலாகிய சுருக்கத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கும். இந்நூலில் அப்பெற்றியைக் காணலாம். இந்நூலை யான் படிக்கப் புகுந்தபோது, என் கருத்து அதன் சொல்லிலோ சொற்றொடரிலோ பிற அமைப்புக்களிலோ செல்லவில்லை. பொருளே என்னை விழுங்கிற்று. இது நூலாசிரியரின் திறம். எழுத்தோவியர்க்கு இந்நூல் விருந்தாகும் என்று நம்புகிறேன்.

இத்தகைய இன்பத் தமிழ் நூலை நாட்டுக்கு வழங்கிய ஆசிரியர் மு. அருணாசலம் பிள்ளை. அவர் வாயிலாக இன்னும் பன்னூல் தோன்றுமாறு ஆண்டவன் அருள் செய்வானாக.

இந்நூலை வெளியிட்ட காரைக்குடி 'சக்தி' காரியாலயத்தார்க்கும் எனது வாழ்த்து உரியதாக.

**திரு. வி. கலியாணசுந்தரன்.**

அருங்கலை விநோதன்
செல்லையாவை
நினைவு கூர்வது

# பொருளடக்கம்


| கட்டுரை | பக்கம் |
| --- | --- |
| 1. கன்னி மான் | 1 |
| 2. நடந்த காவேரி | 9 |
| 3. சாதிப் பலாப்பழம் | 17 |
| 4. சீகாழிப் பள்ளு | 25 |
| 5. ஒரு தும்மல் | 37 |
| 6. சிறு நெருஞ்சில் | 44 |
| 7. சாட்டையிலாப் பம்பரம் | 53 |
| 8. காதல் | 61 |
| 9. ஆராரோ | 71 |
| 10. யாவரே காராளர் | 79 |
| 11. மறுமை யுலகம் | 87 |

# யான் பெற்ற இன்பம்

## 1. கன்னி மான்

கவி ரவீந்திரநாத தாகூர் இளமையில் பெரும்பாலும் கல்கத்தா நகரத்திலேயே வாழ்ந்தவர். ஒரு முறை, நகரத்தை விட்டுத் தம் கிராமத்துக்குப் போய் அங்கே சிறிது காலம் வசித்தார். கிராமத்துக்கு அவர் போன போது, அங்குள்ள அவருடைய பண்ணை யாட்களெல்லாம் வந்து அவரை வணங்கினார்கள். அவர்களில் பலர் அவரைவிட வயதில் மூத்தவர்கள். அவர்களுடைய எளிய சுபாவத்தையும் அடக்கமான அன்பையும் கண்டபோது, தாகூருடைய உள்ளம் உருகி விட்டது.

"பரம்பரையாக எங்களிடம் வேலை செய்து வரும் இந்தக் குடியானவர்களின் இதயத்தில் அன்பும் விசுவாசமும் நிறைந்திருக்கின்றன. இவர்களுடைய இதய பூர்வமான வணக்கத்தையும், ஆடம்பரமற்ற தூய உள்ளத்தையும் கண்டு, இவர்கள் என்னிலும் மிகச் சிறந்தவர்கள் என்றே கருதுகிறேன். முதுமையினாலும் உழைப்பினாலும், இவர்களுடைய சரீரம் தளர்ந்துபோ யிருக்கிறது; தோலெல்லாம் சுருக்கம் விழுந்திருக்கிறது. ஆயினும், தளர்ந்துபோன இந்த உடலுக்குள்ளே, கவர்ச்சிமிக்க எளிய சுபாவமும் உண்மையான பணிவும் நிறைந்த ஓர் ஆன்மா பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் காண்கிறேன்" என்று அவர் தம்முடைய கடிதமொன்றில் எழுதுகிறார்.

நாட்டுப் புறத்திலுள்ள எளிய மக்களுடைய அரிய உள்ளப்பண்புகளிலே ஈடுபட்டு, கவிஞர் தாகூர்

உளங்குழைவது ஒருபுற மிருக்கட்டும். நகரத்திலே வாழ்பவர்களும் சொற்பக் கல்வி யறிவு படைத்தவர்களும், தங்களை நாகரிகம் பெற்ற மக்களென்று மதித்துக்கொண்டிருக்கிறார்கள்; 'நாகரிகமற்ற' அந்த நாட்டுப்புற மக்களைப்பற்றி இவர்கள் என்ன கருத்துக் கொண்டிருக்கிறார்கள்? நாட்டுப்புறத்தார் என்றால் 'காட்டு மிராண்டிகள்'; அவர்களுக்கு உணர்ச்சியே இல்லை; அழகுணர்ச்சி கிடையாது; அன்பு, இரக்கம், சிறந்த உள்ளப் பண்பாடு முதலியன ஒன்றும் கிடையாது; காதலுணர்ச்சி, இல்லவே யில்லை; அவர்கள் காதல் இலக்கியம் படித்தார்களா? அல்லது காதல் இலக்கணத்தையாவது கண்டார்களா? இல்லையே! ஆகவே, அவர்களை மனிதரென்று மதிப்பானேன்?—இதுவே நாகரிகம் பெற்ற மக்களுடைய மனப்பாங்கு, ஆனால் உண்மை என்ன?

பட்டணங்களிலே குறவன் குறத்திகள் வருவதைப் பார்க்கிறோம். இவர்கள் பச்சை குத்துவார்கள்; கூடை, முறம் கட்டி விற்றுப் பிழைக்கிறார்கள். இவர்களுக்கென்று இருப்பிட மேதுவும் கிடையாது; வேண்டு மென்று இவர்கள் விரும்பவுமில்லை. வருஷம் முழுவதும் நாடெங்கும் சுற்றிக்கொண்டே வருகிறார்கள். கோரையால் பின்னிய ஒரு சிறு கூண்டு தான் இவர்களுடைய இருக்கை. இந்தக் கூண்டும், இவர்களுக்காக அன்று; இவர்களுடைய சட்டி பானை, கூடை முறம் முதலியவற்றைப் போட்டு வைத்திருப்பதற்காகத் தான். இரவிலும் பகலிலும் இவர்களுடைய வாழ்க்கை முழுவதும் திறந்த வெளியிலேயே நடைபெறுகிறது.

எத்தனையோ தலைமுறைகளாக, எத்தனையோ நூற்றாண்டுகளாக, இந்த மக்கள் இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையை நடத்திவருகிறார்கள். இது சாத்தியமா என்ற சந்தேகம் நமக்கு எழக்கூடும். இந்த வாழ்க்கைக்கு அடிப்படையான தத்துவம் ஏதேனும் உண்டா என்று பார்த்தோமானால், ஒன்று இருப்பது தெரியும். அதுவே, இக்குறவன் குறத்தியின் காதல். இவ்விருவ

ரும் ஒருவர்மேல் ஒருவர் கொண்ட காதல் அவ்வளவு உண்மையானதாகவும் ஆழ்ந்ததாகவும் இருப்பதனாலே, இவர்களுக்கு வாழ்க்கையில் வேறெதுவும் வேண்டியிருக்கவில்லை. குறவனுடைய உள்ளத்திலே குறத்தியைத் தவிர வேறு எதற்கும் இடமில்லை; குறத்தியின் மனத்திலே குறவன் ஒருவனையே காணலாம். ஆகவே, இவர்களுடைய வாழ்க்கை இவ்வளவோடு அமைந்து நிறைவு பெறுகிறது.

பழம் புலவர்கள் பலர் இந்தக் காதல் வாழ்க்கையின் நயத்தில் ஈடுபட்டு, இதைக் குறவஞ்சிப் பாட்டுக்களாகப் பாடியிருக்கிறார்கள். இந்தப் பாட்டுக்களில் சொல்லப்படுகிற குறத்தியானவள், பேச்சிலே அதிக சாமர்த்தியம் வாய்ந்தவளாக இருக்கிறாள்; கூடை முறம் கட்டுவதோடு கூட, காதல் வயப்பட்டு மனம் மயங்கி யிருக்கும் பெண்களுக்குக் குறியும் சொல்லுகிறாள். காடுகளிலும் மலைகளிலும், குறவனோடு கூடிக் கவலையற்றுச் சஞ்சரிக்கிறாள். இப்படிப்பட்ட செய்திகளை யெல்லாம் புலவர்கள் அழகுபடப் பாட்டுக்களிலே அமைத்துக் காட்டும்போது, நமதுள்ளம் இவற்றிலே பெரிதும் ஈடுபடுகிறது.

நக்கீரதேவ நாயனார் என்ற கவிஞரொருவர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்தார். திரு ஈங்கோய்மலை என்ற ஸ்தலத்தில் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானை வழிபடுவதற்காக ஒரு சமயம் போயிருந்தார். மலையிலும் மலைச் சாரல்களிலும் பெரிய மரங்க ளடர்ந்து ஒரே காடாயிருந்தது. அங்கு வாழ்ந்துவந்த மலைக்குறவர்கள் இந்த அடியவருக்குத் தேன், தினை மா முதலியன கொடுத்து உபசரித்தார்கள். மலைவளத்தைக் கண்டு அனுபவித்து, சிவபெருமான் மலைமேல் எழுந்தருளி யிருந்த திருக்கோலத்தைக் கண்ணாரக் கண்டு வணங்கி விட்டுத் திரும்பிவந்த நக்கீரதேவர், மலைக்குறவர்கள் செய்த உபசாரத்தால் பெரிதும் மனமகிழ்ந்தார். குறவர்களுடைய எளிய வாழ்க்கையிலும் சிறந்த நயமிருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டார். ஈங்கோய்

மலை சம்பந்தமாகத் தாம் பாடிய 'திரு ஈங்கோய்மலை எழுபது' என்ற சிறு நூலில் இந்தக் குறவர்களுடைய வாழ்க்கை நயத்தையும் இதயப் போக்கையும் தாம் கண்டவாறு கூறுகிறார். அந்நூலிலுள்ள இரண்டு பாடல்களை இங்கே பார்க்கலாம்.

மலைச்சாரலில் வாழும் குறவர்களுக்கு, காடுகளில் எளிதில் கிடைக்கிற தேனும், தரையிலே வெடிக்கிற கிழங்கும், சில சமயம் புனங்களில் விளைந்து கிடக்கிற தினையுமே உணவாகின்றன. இவற்றைத் தவிர, வேறு வகைத் தானிய உணவுகள் இவர்களுக்குக் கிடைக்க மாட்டா. காட்டு மிருகங்களாகிய மான் முதலியவற்றைத் தம் வில் வலியாலே இவர்கள் அடிப்பதும் உண்டு. மானை எய்து குறவன் கொண்டு வந்து குறத்தியிடம் தர, அவள் அதை நெருப்பில் வாட்டி வைப்பாள். இருவரும் மகிழ்ச்சியோடு அதை உண்பார்கள். இவ்விதமாக இவர்களுடைய தினசரி வாழ்க்கை நடந்து வருகிறது.

ஒரு நாள், குறவனொருவன் வில்லைக் கையிலேந்தியவனாய், காட்டிலே ஏதாவது பிராணி தென்பட்டால் அடித்துக் கொண்டுவரலாம் என்று எண்ணித் திரிந்து வந்தான். தூரத்திலே இரண்டு மான்கள், ஆணும் பெண்ணுமாக மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றை வேட்டையாடத் தீர்மானித்தான் குறவன். ஆண் மானானது, மேய்ந்து கொண்டே சற்றுத் தூரம் தள்ளிப் போய் விட்டது. பெண் மான் மட்டும், தனியே நின்று மேய்ந்துகொண் டிருந்தது. இது தான் தருணமென் றெண்ணிய குறவன், தன் வில்லை நாணேற்றி அதில் அம்பை வைத்துத் தொடுத்துக் குறி பார்த்தான். மானின் உடலிலே எந்தப் பாகத்தில் அம்பு தைத்தாலும், அது சுருண்டு விழாமல் தப்பி ஓடி விடும் என்று எண்ணி, அவன், அந்த மானின் தலையை இலக்கு வைத்து எய்யக் கருதி, ஒரு கண்ணை மூடிக்கொண்டு, மற்றொரு கண்ணால் உற்று நோக்கினான்.

அப்படி நோக்கிய போது, அப் பெண்மானின் தலையில் ஒரு பாகமும் ஒரு கண்ணும் மட்டுமே இவன் கண்ணுக்குத் தோன்றின. இரண்டொரு விநாடிகள் மட்டுமே இவன் அக் கண்ணைக் கூர்ந்து நோக்கினான்; நோக்கின மாத்திரத்திலே, இவனது கண் கலங்கி, உள்ளமும் கலங்கி, கையும் நடுங்கி, வில்லும் அம்பும் நழுவி விட்டனவாம். ஏன் நழுவி விட்டன? அப்படி என்ன கண்டான்? அந்தப் பெண்மானின் மருண்ட நோக்கானது, குடிசையிலே தனித்திருக்கிற இவனுடைய நாயகியாகிய குறத்தியின் கண்களிலே பிரகாசிக்கும் மருண்ட பார்வையை இவனுக்கு நினைவூட்டிற்றும். பெண்ணின் நோக்கு, மான் நோக்கு என்பார்கள் அல்லவா? தன் காதற் குறத்தியை நினைவூட்டிய கண்களை யுடைய மானை எய்யக் குறவனுக்கு மனந்தான் துணியுமா, அல்லது கை தான் எழுமா?

> எய்யத் தொடுத்தோன்,
> குறத்திநோக்(கு) ஏற்றதெனக்
> கையிற் கணைகளைந்து,
> 'கன்னிமான் - பையப்போ'
> என்கின்ற பாவனைசெய்
> ஈங்கோயே!

கவிஞர், குறவனுடைய இதயத்துக் குள்ளே புகுந்து, மானின் கண்ணைக் கண்டு எவ்வாறு தாமும் உருகுகிறார் என்பதைப் பாட்டு செவ்வையாகக் காட்டுகிறது. குறவனுடைய உள்ளம், 'கன்னி மானே! உனக்கு நான் ஒருவிதத் தீங்கும் செய்ய மாட்டேன். நீ மெல்லச் செல்வாயாக!' என்று சொல்வது, அவருடைய காதுக்கு மட்டுமல்ல, பாட்டில் நம்முடைய காதுக்குமே கேட்கிறது. ஈங்கோய்மலை இவ்வளவு அருள் நிறைந்த இயல்புடையது என்றார் நம் கவிஞர்.

மலையினுடைய இந்த அருள் இயல்பை நினைத்த மாத்திரத்திலே, அம் மலையில் வீற்றிருக்கும் இறைவ

னுடைய உக்கிர சொரூப மொன்று அவருக்குக் காட்சி யளிக்கிறது. உலகத்தாருக்குப் பெருந் துன்பம் விளைவித்துக் கொண்டிருந்த மூன்று புரங்களும் நீருகும்படி எரித்துவிட்ட சிவபெருமானது ஈங்கோய் மலை இத்தகைய தண்ணருள் வாய்ந்த இயல்புடையது என்று அரியதொரு சமயக் கருத்தையும் கடைசி வரியில் அமைத்துச் சொல்லுகிருர் :

**எய்யத் தொடுத்தோன்**
**குறத்திநோக்(கு) ஏற்றதெனக்**
**கையிற் கணைகளைந்து,**
**'கன்னிமான் - பையப்போ'**
**என்கின்ற பாவனைசெய்**
**ஈங்கோயே! ஓங்கெயில்கள்**
**சென்றன்று வென்ருன்**
**சிலம்பு.**

நக்கீரதேவர் கண்ட மற்ருெரு குறவன் இவ்வளவு கருணையுடைய நெஞ்சினன் அல்லன். அவன் சற்று முரடன். வில்லுங் கையுமாகக் காட்டுக்குப் போனுன். மான்களைக் கண்டான். குறிபார்த்து அம்பு விட்டான். பெண்மான் அடிபட்டு வீழ்ந்தது; கலைமான் கதறிக்கொண்டு ஓடி விட்டது. வீழ்ந்த மானை எடுத்துத் தோளிலே போட்டுக்கொண்டு தன் குடிசைக்கு வந்தான் குறவன். வந்து, தன் காதற் குறத்தியி னிடத்திலே அதைக் கொடுத்தான். பார்த்தாள் குறத்தி. சிலை போன்ற அவளுடைய புருவம் ஏறும்படியாக அதிகச் சீற்ற முண்டாகி விட்டது. 'இவ்வளவு தானு நம் குறவனுடைய இயல்பு?' என்று பட்டுவிட்டது அவளுக்கு. அப்போது அவனைக் கேட்கிருள் :

"என் மீது நீ எவ்வளவோ அன்புடையவன் என்று எண்ணி மகிழ்ந்திருந்தேன், இத்தனை நாளாக. இன்றல்லவா தெரிகிறது, நீ சற்றும் அன்

பில்லாதவனென்பது! உன்னைப் பிரிந்த ஒவ்வொரு கணமும் எவ்வளவு துயர மடைந்திருக்கிறேன் நான்! நீயோ, பிரிவினால் விளையும் துயரத்தைச் சற்றேனும் அறியாதவனாயிருக்கிறாய். உண்மையான காதல் உன்னகத்தே இருக்குமானால், பெண்மான் பிரிந்தபோது ஆண்மான் என்ன துயரமடையும் என்பதை நீ உணர்ந்திருப்பாய். இந்தப் பெண்மானை அம்பினால் எய்தபோது, இதைப் பிரிந்த கலைக்கு உண்டான துயரத்தை எண்ணிப் பார்த்தாயா? எண்ணிப் பார்த்திருந்தால், மானை அதன் காதலனிடமிருந்து பிரித்திருப்பாயா? இவ்வளவு கொடியவனாகிய நீ என்னிடம் எவ்வாறு காதல் கொள்ளக்கூடும்? நீ பிரிந்து போகும் காலங்களிலே, நான் எப்படி வருந்துவேன் என்பதை நீ எவ்வாறு அறியக்கூடும்? ஒரு தீங்கும் அறியாத இந்த மான்களின் காதலுக்கு முடிவு தேடிய நீ, என்னிடத்துக் காதலுள்ளவனாக இருத்தல் எப்படி முடியும்?'' என்ற பாவத்தில் குறத்தி குறவனைக் கோபிக்கிறாள் :

மலைதிரிந்த மாக்குறவன்
　　மான்கொணர, நோக்கிச்
சிலைநுதலி சீறிச்
　　சிலைத்து - 'கலைபிரிய
இம்மான் கொணர்தல்
　　இழுக்(கு)' என்னும் ஈங்கோயே!
மெய்ம்மான் புணர்ந்தகையான்
　　வெற்பு.

தம்மைக் கொல்லவந்த மானுக்குக்கூட யாதொரு துன்பமும் செய்யாமல் அதைத் தமது கையிலே ஏந்தியிருக்கிறார் சிவபெருமான். அவ்வளவு கருணைவாய்ந்த சிவபெருமானுடைய மலைச் சாரலில், ஒரு குறவன் மானைக் கொல்வது கொடிய செயலாகக் கவிஞருக்குத் தோற்றுகிறது. இக் கொடுமையைக் குறத்தி வாய்மொழியாக அழகுபட வெளிப்படுத்துகிறார்.

இந்தப் பாடல்களிலே, நாம் இரண்டு குறவர்களைக் கண்டோம். இவர்களுடைய செயல்கள் மூலமாக, காதல் தத்துவமானது எவ்வளவு அழகிய உருவத்தோடு எளிய மக்கள் உள்ளத்திலும் குடிகொண்டிருக்கிறது என்பதையும் கண்டோம். வெளித்தோற்றம் மட்டுமே மக்களிடத்து அமைந்துள்ள மனிதப்பண்பை எடுத்து விளக்கவல்லதன்று. உண்மையானது, உள்ளத்திலே உறைகிறது. அதை எல்லோரும் கண்டுகொள்ள முடியாது. அழகுணர்ச்சியும் கலைப் பண்பும் நிறைந்த ஓர் உள்ளந்தான், மற்றோர் உள்ளத்தை மறைத்து நிற்கிற வெளிப் போர்வைகளை நீக்கி விட்டு, இதயத்தில் அமைந்திருக்கிற உண்மையான மனிதப் பண்பைக் காண வல்லது.

மகான்களுடைய கருத்து எப்போதும் ஒத்திருக்கும் என்பது ஒரு பழமொழி. இது கவிதை விஷயத்திலும் உண்மையானது. பல நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்த ஒரு கவிஞர் எளிய மக்களின் ஏழ்மை வாழ்க்கையிலுங்கூட அழகிய இதயதத்துவத்தைக் கண்டு மகிழ்ந்தார். அவருக்குப் பின் தோன்றி, இக் காலத்தே, வேறு தேசத்திலே வாழ்ந்த பெருங் கவிஞராகிய ரவீந்திரநாத தாகூரும், அக் கவிஞர் கண்ட இதயதத்துவத்தையே தாமும் கண்டு வியந்து பாராட்டுகிறார்.

இதயத்தோடு ஒட்டிய உண்மையானது எல்லா நாடுகளுக்கும், எல்லாக் காலத்துக்கும், எல்லா மொழிகளுக்கும் பொது அல்லவா?

# 2. நடந்த காவேரி

**ப**ழைய காலத்திலே ரோம் நகரமானது கல்வியிலும் செல்வத்திலும் நாகரிகத்திலும் சிறந்திருந்தது. அதன் ஆதிக்கம் ஐரோப்பா முழுமையும் பரவியிருந் தது. அக் காலத்தில் ஒரு சமயம், பராக்கிரமம் மிகுந்த பகைவனொருவன் பெருஞ் சேனையோடு அந் நகர்மீது படையெடுத்து வந்தான். சென்ற இட மெங்கும் அவனுக்கு வெற்றியே ஏற்பட்டிருந்தது. அவன் சேனைப் பெருக்கையும் வீரத்தையும் கேட்டு, ரோம் நகர மக்கள் பெரிதும் கலங்கினார்கள். நகரி னுள்ளே பகைவன் புகாதபடி காப்பதற்கு என்ன செய்யலாமென்று சிந்திக்கலானார்கள்.

நகரருகே தைபர் என்ற பெரிய நதி ஓடிற்று. அதைக் கடந்துதான் அந்நகருக்குள் பிரவேசிக்க வேண்டும். தைபர் நதி மிக்க ஆழமும் அகலமும் வேகமும் உடையது. நகரருகிலிருந்த ஒரு பாலத்தின் வழியாக அதைக் கடக்கலாமே யொழிய, யாரும் நீரி லிறங்கிக் கடந்துவிட முடியாது.

இக்காலத்துப் போர் முறையிலே ஒரு தந்திரத் தைப் பார்க்கிறோம். பகைவனுக்குப் பயன்படக் கூடா தென்பதற்காகவும், பகைவனுடைய படை விரைந்து வருவதைத் தடுப்பதற்காகவும், பெரிய பெரிய பாலங்களை - கோடிக் கணக்கான பொன்னைச் செலவிட்டுக் கட்டிய பாலங்களை - கட்டினவர்களே தகர்த் தெறிகிறார்கள். இதேபோல அக்காலத்திலும், ரோம் நகர மக்கள் தைபர் பாலத்தைத் தகர்த் தெறி வது அவசியமென உணர்ந்தார்கள். இந்த நிலையில், பகைவனும் ஆற்றின் எதிர்க்கரையை நெருங்கி விட்டான்.

பாலத்தின் வாயிலோ மிகக் குறுகியது. அதனுடைய மறுகரையின் வாயிலில் மூன்று ரோம வீரர்களை நிறுத்தி, எதிரியின் வீரர் வருவதைத் தடுக்கச் செய்து, ரோம் நகர மக்கள் பாலத்தை உடைக்க ஆரம்பித்தார்கள். எதிரிகள் பாலத்தருகே வந்ததும், இந்த வீரர் மூவரையும் கண்டார்கள். வாயிலில் ஒரே சமயத்திலே மூவர் மட்டுமே நுழைய முடியும். ஆகவே, பகைவரில் மூவர் மாத்திரம் தனியே வந்து, இவர்களோடு போர்புரிந்தார்கள். இவர்கள் அவர்களை எதிர்த்துச் சண்டையிட்டு வீழ்த்தினார்கள். இவ்வண்ணம், எதிரியின் வீரர் வரவர, மூவர் மூவராகக் கொன்று குவித்தார்கள்.

இதற்கிடையில் பாலம் உடைபட்டது. விழப் போகுந் தருணம். திரும்பி வந்துவிடுமாறு இவ்வீரர் மூவரையும் நகர மக்கள் கூவியழைத்தனர். இருவர் உடனே திரும்பிவிட்டனர். மூன்றாவது வீரனாகிய ஹொரேஷியஸ் என்பவன் திரும்புமுன்னமே, பாலம் சாய்ந்து நொறுங்கி வீழ்ந்து, பிரவாகத்தில் மறைந்து விட்டது. இந்த வீரன் மட்டும் தனியனாக அக்கரையிலேயே நிற்கவேண்டியதாயிற்று. பகைவர் இவனைச் சிறைப்படுத்த முயன்றனர். இவனோ, அவர்களைப் பார்த்துச் சிரித்துவிட்டு, உருவிய வாளை உறைக்குள் செருகிக் கொண்டு, நதியின் வெள்ளத்திலே குதித்தான். மேலெல்லாம், சண்டையினாலேற்பட்ட பல காயங்கள். அணிந்திருந்த கனமான இருப்புக் கவசங்களும் வாளும் அப்படியே இருந்தன. இக்காயங்களையும் பளுவையும் ஹொரேஷியஸ் சற்றும் பொருட்படுத்தவே யில்லை.

இந்தச் சரித்திரத்தை, மெக்காலே என்ற ஆங்கில ஆசிரியர் பாட்டாகப் பாடியிருக்கிறார். தைபர் நதியில் குதித்த தருணத்தில், ஹொரேஷியஸ் என்ன சொன்னான் என்பதைச் சொல்லுகிறார் :

"தைபர் நதியே! ரோமர்களாகிய எங்கள் வழிபாட்டுக்குரிய எந்தையே! ரோம் நகரத்தானாகிய யான், என் உயிரையும் உடலையும் வீரத்தையும்

இப்போது உன்னிடம் ஒப்புவிக்கிறேன். பெற்றுக் காப்பாயாக!''

இவ்வாறு சொல்லிக் குதித்து, அந்த வீரன், நதியின் பிரவாகத்தையும் பகைவர் விட்ட அம்பு மழையையும் பொருட்படுத்தாமல் நீந்திச் சென்று, தன் படையிருந்த ரோம் நகரக் கரையை யடைகிருன் என்று முடிகிறது, மேலே சொன்ன பாட்டு.

மெக்காலே எழுதிய இந்தப் பாட்டை ஆங்கிலம் கற்ற யாவரும் படித்தே யிருப்பார்கள். நான்கு, ஐந்து, ஆருவது பாரங்களில் ஏதாவதொன்றில் இது கட்டாயம் பாடமாக இருந்திருக்கும். ஐந்தாவது பாரத்தில் நான் இதைப் படித்தாக ஞாபகம். கதை அருமையான கதை; வீரமும் தியாக உணர்ச்சியும் நிறைந்தது. ஆனுல், மாணவர்களாகிய எங்களை அக்காலத்தில் மயக்கியது, கதையின் சுவையன்று; பாட்டிலுள்ள சொற்களிலேயே எங்களுக்கு அளவு கடந்த மோகம் பிறந்துவிட்டது. ஹொரேஷியஸ் சொன்னதாக மேலே காட்டப்பட்ட வரிகளிலே எங்களுக்கிருந்த ஈடுபாட்டை என்னவென்றே சொல்ல முடியாது. அந்த வார்த்தைகளையே எல்லோரும் சதா ஸ்மரித்துக் கொண்டிருந்தோம். தைபர் நதியை, அதுவும் தந்தையாகிய தைபர் நதியை, பாட்டில் பார்த்துப் பார்த்து வியந்துகொண்டே யிருந்தோம்.

நாட்டுப்புறப் பள்ளிக்கூடத்தில் படித்த காரணத்தினுல், நதியென்ருல் எங்களுக்கு ஏதோ கொஞ்சம் தெரியும். தினந்தோறும் காலையில் இரண்டு மணிநேரம் ஆற்றில் கும்மாளம் போட்டுக் கொண்டிருந்து விட்டு, ஆற்றைப்பற்றித் தெரியாதென்று சொல்ல முடியாதல்லவா? ஆனுல், நாங்கள் கும்மாளம்போட்டது, தைபர் நதியிலன்று, காவேரியாற்றில் தான். இருந்தாலும், காவேரியாறு சிறு பிள்ளைகள் கும்மாளம் போடுவதற்கு ஏற்றதேயொழிய, கவிக்கு விஷயமாக அமைய முடியுமா? காவேரியாறு பாட்டுக்குள்ளே யெல்லாம் ஓடி மீளுமா? இதுபற்றி எங்களுக்குச் சந்தேகந்தான். இந்தத் திறமை யெல்லாம்

தைபர் நதிக்குத்தான் உரியது என்று நாங்கள் எண்ணி யிருந்தோம்.

மாணவனு யிருந்த காலமெல்லாம் போய் வெகு காலங்கழித்து இப்போதுதான் தெரிகிறது, காவேரி போன்ற நம் நாட்டு நதிகள் மட்டுமே பாட்டுக்குப் பொருத்தமானவை என்பது. தவிர, 'தந்தையாகிய தைபர் நதி' என்று யாரேனும் சொன்னுல், கேட்டுக் கொஞ்சம் சிரிக்கவும் தெரிகிறது.

பொதுவாக நமக்கெல்லாம், நதி என்பது ஒரு பெண் உருவத்தோடேயே நினைவுக்கு வருகிறது. கங்கை யாற்றினிடத்துள்ள மன ஈடுபாடு காரண மாக, அதற்கு ஒரு பெண் உருவம் கொடுத்து, சிவ பெருமானுடைய தலையின்மேலே ஏற்றி வைத்திருக் கிறோம்.

கருணை என்ற உயர்ந்த மனிதப் பண்பையும் பெண்ணுகவே உருவகம் செய்து பார்க்கிறோம். இறை வன் உயிர்களிடத்து வைத்துள்ள கருணையை அவனு டைய திருவருள் என்று சொல்லுகிறோம். இந்தத் திருவருளே சக்தி என்றும், உமாதேவி என்றும் பாவித்து, அந்தச் சக்திக்குச் சிவனுடைய திருவுருவத் தில் பாதியையும் வாங்கிக் கொடுத்திருக்கிறோம்.

நதியை நினைக்கும்போது, அதனிடம் அமைந்த இந்தக் கருணையைத்தான் முதன்முதலாகக் குறிப் பிட வேண்டி யிருக்கிறது. யாதொரு பிரதி யுபகா ரத்தையும் எதிர்பாராமலே, உலகத்துக்கு வேண்டிய நன்மையை விரும்பிச் செய்கிறது மழை. அந்த மழை தானே, நதி? மழையினுலுண்டாகிற வளமனைத்தை யும் நமக்கு ஊட்டுவது நதி. ஆயிரக்கணக்கான வருஷங்களாக, தான் செல்லும் நெறியெல்லாம் வள மும் சுகமும் பெருகும்படி செய்து வருகிறது; சிறு கைக் குழந்தைக்குத் தானே வலியவந்து பாலூட்டும் தாயைப் போல உதவுகிறது. ஆகவே, நதியைப் பெண் என்று மட்டும் சொல்வதைவிட, அதைத் தாயாகவே கொண்டு, அத் தாயின் கருணையில் பெரி

தும் மனம் ஈடுபட்டு, அத் தாயை வழிபடுவது மிக்க பொருத்தமே யாகும்.

இதயத்தோ டொட்டிய ஈடுபாடு மக்களுக்குத் தாயினிடத்து உண்டாகுமே யொழிய, தந்தையினிடத்து அவ்வளவாக உண்டாவதில்லை. ஆகவே, நதியைத் தந்தையாகப் பாவிப்பது குற்றமில்லை யென்றாலும், உணர்ச்சியின் மிகுதி அதில் வெளிப்படவில்லை.

தைபர் நதியினிடத்து ஹொரேஷியஸ் கொண்ருந்த அன்பைக் கண்டு ஒரு காலத்தில் வியந்தோம், அதே போல, பழைய ஆசிரிய ரொருவர் காவேரி யாற்றினிடத்து எவ்வளவு ஈடுபடுகிறார் என்பதையும், தமதுள்ளத்தி லெழுந்த உவகையை எப்படி எப்படி யெல்லாம் வெளியிடுகிறார் என்பதையும் அவருடைய கவி மூலமாகப் பார்க்கலாம்.

ஆடி ஆவணி மாதங்களிலே காவேரி யாற்றில் புதுவெள்ளம் கரை புரண்டு போய்க் கொண்டிருக்கும். நீரின் மேற்பரப்பிலே செங்கடம்பின் மலர்கள் ஏராளமாக மிதக்கும். இதன் இதழ்கள், நுண்மையான செம்பட்டின் இழைகளைப் போன்றவை. ஆற்றிலே, மேற்கிலும் கிழக்கிலும், கண்ணுக்கெட்டிய தூரம் வரை இந்தப் பூக்கள் மிதந்து போவது, ஆறு முழுவதும் போர்வை போர்த்தி யிருப்பதுபோலத் தோன்றும் இக்காட்சியைப் பல வருஷங்களுக்கு முன் பல முறை நான் பார்த்திருக்கிறேன். இன்றும் இதைக் காணலாம்.

தவிர, காவேரியின் இருமருங்கிலுமுள்ள கரைகளில் பூஞ்சோலைகள் அடர்ந்திருக்கின்றன. அவற்றில் எத்தனையோ விதமான மரங்களும் செடிகளுமுள்ளன. அவற்றின் மலர்களும் மலர்களின் வடிவமும் நிறமும் எத்தனையோ வகை. இம் மலர்கள் நீர்ப் பரப்பிலே மிதந்துவருகிற காட்சி, அலங்காரமான பலநிறப் பூம்போர்வைபோலத் தோன்றும். சோலைகளில் பூத்திருக்கும் பூக்களிலுள்ள தேனை உண்ண வந்த வண்டுகளின் ரீங்காரமானது எந்நேரமும் கேட்டுக்கொண்டே யிருக்கிறது.

**மருங்கு வண்டு சிறந்தார்ப்ப**
**மணிப்பூ ஆடை யதுபோர்த்துக்**
**கருங்க யற்கண் விழித்தொல்கி**
**நடந்தாய் வாழி காவேரி !**

பூக்கள் மிதந்துவந்த காட்சியானது, நதியாகிய பெண் ஒரு மணிப் பூவாடை போர்த்துள்ள தோற்றத்தைக் கொடுத்தது. ஆற்றிலே கயல்மீன்கள் ஓடுவதையும் துள்ளுவதையும் நெளிவதையும் காண, அப் பெண்ணின் கண்கள் இங்குமங்கும் பிறழ்வது போலிருந்தது. இந்தத் தோற்றத்தோடு ஆறு ஓடுகிறது. அது ஓடுவதை ஆசிரியர், 'நடந்தாய் வாழி காவேரி' என்றுர். 'நடந்தாய்' என்ற சொல் சற்றுக் கவனிததற்குரியது. எத்தனையோ நதிகளில், மழை பெய்தவுடனே வெள்ளம் பெருக்கெடுத்துக் கரை புரண்டு வரும். உடனே கடகட வென்று வேகமாய் ஓடி, அவ்வளவு நீரையும் கொண்டுபோய்க் கடலில் கொட்டிவிட்டு, மறுநாளே வறண்டு போய்விடும். வேகமாக ஓடுகிற ஆறுகளின் நீர் முழுவதும் பயிர்களுக்குப் பயன்படாது. ஆனல், காவேரியாறு அப்படியன்று. மழை நீரை மெதுவாகத் தாங்கிவந்து, நாடெங்குமுள்ள வயல்களுக்கும் சோலைகளுக்கும் பாய்ச்சுகிறது. இந்த இயல்பையே, ஆசிரியர், மேலே பெண் என்று குறிப்பிட்டதற்குப் பொருத்தமாக, மென்மையான நடையுடையவள் என்பது தொனிக்கும்படி, 'நடந்தாய்' என்று கூறினர்.

இனி, காவேரி மெல்ல நடந்ததனுல் என்ன ஏற்பட்டது? காவேரியினுலே நீர்வளம் மிகுதி; அதனுல் விளைவும் மிகுதி; நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோலுயரும் என்பது பழமொழி யல்லவா? இவளுடைய நாயகன், புனல் நாடனுகிய சோழன். சோழனுடைய செங்கோல் நேர்மையாகவே இருந்தது. காவேரி தந்த வளத்தினுல், நாடு செழித்தது, மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்ந்தார்கள். எனவே, மன்னன் அரசுமுறையும் செம்மையா யிருந்தது என்பதற்குக் கேட்பானேன்?

*கருங்க யற்கண் விழித்தொல்கி*
*நடந்த எல்லாம், நின்கணவன்*
*திருந்து செங்கோல் வளையாமை*
*அறிந்தேன், வாழி காவேரி !*

காவேரி நதியின் அழகையும், அதன் இருபுறத்திலும் செறிந்துள்ள சோலைகளின் வளத்தையும், சோழநாடு முழுவதையும் ஊட்டிச் செல்கின்ற அதன் கருணையையும் கண்டு அனுபவித்தவர் ஆசிரியர். இந்த அழகு, வளம், கருணை என்பவற்றின் பயனாக விளைந்தது மன்னன் செங்கோல் என்று அவர் முடிவு கட்டுகிறார். மாரி பொய்ப்பினும் தான் பொய்யாமல், காவேரியாறு பருவந்தோறும் புது வெள்ளத்தைக் கொண்டுவந்து சோழநாட்டுக்கு உதவி, பயிரைச் செழிக்கச் செய்தமையாலே, அந்நாடு எக்காலத்தும் எல்லா வளமும் நிரம்பப் பெற்றிருந்தது. அவ்வளத்தையும் அதன் பயனாய் விளைந்த மன்னன் செங்கோற் சிறப்பையும் பாட்டின் மூலமாய்க் காணும்போது, நாமும் ஆசியரோடு சேர்ந்து காவேரியாற்றை வாழ்த்தவே எண்ணுகிறோம். பயிர்த்தொழில் செய்கிற மக்களோடு சேர்ந்து நதிக்குப் பொங்கலிட்டுப் படைத்து அதன் மூலமாக நமது நன்றியறிதலை வெளிப்படுத்தவும் துணிகிறோம்.

*மருங்கு வண்டு சிறந்தார்ப்ப*
*மணிப்பூ ஆடை யதுபோர்த்துக்*
*கருங்க யற்கண் விழித்தொல்கி*
*நடந்தாய், வாழி காவேரி !*

*கருங்க யற்கண் விழித்தொல்கி*
*நடந்த எல்லாம், நின்கணவன்*
*திருந்து செங்கோல் வளையாமை*
*அறிந்தேன், வாழி காவேரி !*

பூவார் சோலை மயிலால,
புரிந்து குயில்கள் இசைபாட,
காமர் மாலை அருகசைய
நடந்தாய், வாழி காவேரி!

காமர் மாலை அருகசைய
நடந்த எல்லாம், நின் கணவன்
நாம வேலின் திறங்கண்டே
அறிந்தேன், வாழி காவேரி!

இப்படியாக ஆசிரியர் பாடும்போது, பாட்டிலே உண்மை யனுபவத்தைக் காண்கிறோம். நம்முடைய நாகரிகத்திலே, அதாவது, தமிழர்களுடைய கலைப் பண்பாட்டிலே, ஆற்றை எவ்வளவாக மதித்திருக்கிறோம் என்பது தெரிகிறது. காவேரியம்மன் என்றெல்லாம் நம்மவர்கள் சொல்லிப் போற்றுவதிலுள்ள பொருளும் புலப்படுகிறது. இந்த உயர்ந்த நிலையை அனுபவிக்கத் தெரிந்த பிறகுதான், ஆசிரியர் மெக்காலே, ஹொரேஷியஸ் வாயிலாகத் தைபர் நதிக்குத் தருகிற பெருமையும் இன்னதென ஒரு வகையாக விளங்கக் கூடும்.

வாழி அவன்றன் வளநாடு
மகவாய் வளர்க்குந் தாயாகி,
ஊழி உய்க்கும் பேருதவி
ஒழியாய், வாழி காவேரி! *

---

* சிலப்பதிகாரப் பாடல்கள்.

## 3. சாதிப் பலாப்பழம்

உயிர்களுக்குத் தம் இனத்தைப் பெருக்க வேண்டு மென்ற உணர்ச்சியும் இனத்தைப் பெருக்குவதில் ஓர் ஆனந்தமும் எந்தக் காலத்திலுமே இருந்து வந் திருக்கின்றன. ஆதியில் உயிர்கள் தோன்றியபோது, அவயவம், உருவம், இந்திரியங்கள் முதலியன ஒன் றும் இல்லாத நிலையோடு தோன்றின; பிறகு காலக் கிரமத்தில் வளர்ச்சி பெற்றன; உருவ முண் டாயிற்று, அவயவங்கள் தோன்றின, இந்திரியங்களும் ஏற்பட்டன; உணர்ச்சித் தத்துவத்தையும் பெற்று, சிறு புழு, பூச்சி என்பதாக வளர்ந்து வந்தன; இவற் றிலிருந்து, ஊர்கின்ற பெரிய பிராணிகளாக அபி விருத்தி யடைந்தன; பறக்கும் பறவைகள் தோன் றின; விலங்குகள் தோன்றின; முடிவிலே, இவை யனைத்தினும் மேலாக மனிதனும் வளர்ந்துவிட்டான். இது இக்காலத்திய உடற்கூற்றுக் கலைவல்லார் கண்ட உண்மை.

இந்த வளர்ச்சி ஏற்படுவதற்குப் பல்லாயிரம் நூற்றாண்டுகள் சென்றன. ஆதியிலிருந்த, உருவமும் உணர்ச்சியும் அற்ற ஓர் அற்ப உயிரிலிருந்து இத்தனை நூற்றாண்டுகளாக முறைப்படி வளர்ந்து, இன்றைய மனிதனாக மாறிவந்த வளர்ச்சியிலுள்ள படிக்கிரமங்களைப் பார்ப்போமானால், அந்த உயிரா னது தன் இனத்தைப் பெருக்குவதற்காக நெடுகிலும் மிகப் பாடுபட்டிருக்கிறது என்பது புலனாகிறது. இனத்தைப் பெருக்குவதற்காகவே உயிர்கள் உணவை உண்டு வளர்ந்தன. ஆதியில் தோன்றிய நுண்ணிய உயிருக்கு இவ்வுணர்ச்சி பூரணமாக இருந்தமையால் தான், இவ்வளவு வளர்ச்சியும் கிரமமாக ஏற்பட முடிந்தது.

இனத்தைப் பெருக்குவதிலே உயிர்களுக்கு ஆனந்தமும் இருக்கிறது. இதையும் நாம் பார்க்கலாம். சில அற்ப உயிர்கள் இதற்காக எவ்வளவு பாடு படுகின்றன என்பதைக் கவனித்தால் போதும். மழை ஒரு துளி தூறிவிட்டால், எங்கெல்லாமோ உள்ள எறும்புகள் அத்தனையும், தலைக்கொரு முட்டையாகத் தூக்கிக்கொண்டு, தண்ணீர் படாத இடத்துக்குப் போகின்றன. அவை ஒழுங்காகப் போகும் அழகை நாம் பார்த்துக்கொண்டேயிருக்கலாம்.

ஒரு குஞ்சுக்காக அற்பக் குளவி எவ்வளவு சிரமப்படுகிறது! சிறு சிறு உருண்டையாக மண்ணை உருட்டித் தூக்கிக்கொண்டு வந்து சிறிய கூடொன்று கட்டி, அதனுள் முட்டையிடுகிறது. இவ்வளவோடு நிற்கவில்லை. முட்டையிலிருந்து வெளிப்படும் குஞ்சுக்குத் தீனி வேண்டுமென்பதற்காக, சிறிய புழுக்களைப் பிடித்துத் தன் கொடுக்கினுல் அவற்றைக் கொட்டி, முட்டையோடு கூடக் கூட்டினுள் வைத்து மூடிவிடுகிறது. முட்டை பொரிந்து குளவிக் குஞ்சு வெளிப்பட்டபின், இந்தப் புழுவைத் தின்று சிறிது காலம் வளர்ந்து, இறக்கை முளைத்த பிறகு கூட்டை உடைத்துக்கொண்டு வெளியே பறந்து போய் விடுகிறது.

பறவைகளோ, முட்டையிட்டு, முட்டை பொரிகிற வரையில் அடைகாத்து, உரிய காலத்தில் முட்டை பொரியச் செய்கின்றன. வெளிப்பட்ட குஞ்சுகளுக்கு உணவூட்ட இவை எவ்வளவு கவலைப் படுகின்றன என்பதை நாம் பார்க்கிறோம். தாய்ப் பறவையானது பூமியில் சிந்திக்கிடக்கும் தானிய மணிகளைத் தன் அலகினுல் பொறுக்கி எடுத்துச்சென்று, குஞ்சின் வாயிலே ஊட்டுகிறது.

மிருகங்களிடத்திலும் இந்த உணர்ச்சியைக் காண்கிறோம். நாய், பூனை, பசு முதலிய நாட்டு மிருகங்கள் எவ்வளவு ஆசையோடு தம் குட்டிகளையும் கன்றுகளையும் பாதுகாக்கின்றன! இளம் நாய்க் குட்டி அல்லது பூனைக்குட்டியை அதன் தாயிட

மிருந்து எளிதில் பிரித்துவிட முடியுமா? காட்டு மிருகங்களைப் பற்றியோ சொல்ல வேண்டுவதில்லை. குட்டிகளைப் பிற விலங்குகளோ அன்றி மனிதரோ தொடுவதைக்கூட, அவை சகிக்க மாட்டா.

இவை ஒரு புற மிருக்க, இந்தத் தத்துவத்தைத் தாவரங்களிடையிலும் காணலாம். பலவேறு மரஞ் செடிகொடிகள் பலவேறு வகைகளில் தம்மினத்தைப் பெருக்குவதற்கான வழியைத் தேடி வைத்திருக்கின் றன. சிலவற்றின் விதைகள், பறவைகள் மூலமாகப் பரவுகின்றன. சில, காற்றிலே பறந்து வேறிடங் களுக்குப் போகின்றன. சில விதைகள், ஆற்று நீரி லும் வெள்ளத்திலும் மிதந்துசென்று முளைத்து வளரு கின்றன. இப்படி விதைகளைப் பரப்புவதோடன்றி, விதை யில்லாமல் பயிராவதற்கு வேண்டிய புதிய வழிகளையும் இந்தத் தாவரங்கள் - உணர்ச்சியில்லா தவை என்று நாம் கருதிக்கொண்டிருக்கும் இந்தத் தாவரங்கள் - தாமே தேடி அமைத்துக் கொள்கின் றன. வாழைக்கு விதை கிடையாது என்பது இப் போது அனைவரும் அறிந்த உண்மை. ஆனால், ஒரு காலத்தில் வாழைக்கு விதை இருந்தது; அந்த விதை யும் முளைத்து வந்தது. காட்டிலுள்ள வாழைகளில் இன்றும் விதைகளிருக்கின்றன. வாழையின் பழத் தைப் பறித்துத் தின்று ருசி கண்ட மனிதன் வாழை யைத் தோட்டம் போட்டுப் பயிரிட ஆரம்பித்தான். பழமே யன்றிக் காயையும் பறித்து உண்ணத் தொடங்கிவிட்டான். பிறகு வாழையில் விதைக்கு வழியில்லாமல் போயிற்று. இப்படியே தொடர்ந்து நடந்து வந்தால், வாழையினமே இல்லாமல் அழிந்து போய்விடுமே! அதற்காக, வாழையானது, விதையை உற்பத்தி செய்து அதன் மூலம் தன் இனத்தைப் பெருக்கும் பழைய முறையைக் காலக்கிரமத்தில் விட்டுவிட்டு, தன் வேரிலுள்ள கிழங்கிலிருந்து புதிது புதிதாகக் கன்றுகளை வெடிக்கச் செய்து, இவற்றின் மூலம் தன் இனத்தை விருத்தி செய்யக் கற்றுக் கொண்டது.

ஆகவே, தம்மினத்தைப் பெருக்க வேண்டும் என்ற உணர்ச்சி உயிர்களுக்கு இயல்பாகவே அமைந்திருக்கிறது என்பதையும், உயிர்கள் தம்மினத்தை விருத்தி செய்வதில் இயற்கையே எல்லா உதவியும் செய்கிறது என்பதையும், மேலே காட்டிய உதாரணங்களிலிருந்து அறிகிறோம்.

இந்த உணர்ச்சி மனிதனிடத்தும் பண்டுதொட்டு இன்றுவரை இருந்து வருகிறது. இதிலொன்றும் ஆச்சரியமில்லை. மனித சிருஷ்டியைக் குறித்துச் சொல்லும்போது, கடவுள் மனிதனைத் தம்முடைய வடிவமுள்ளவனாகப் படைத்தார் என்று பைபில் கூறுகிறது. கடவுள் ஏன் மனிதனுக்குத் தம் வடிவத்தைத் தந்தார் என்று பார்ப்போமானால், தமது வடிவம் பெருகியிருக்கக் காண்பதில் கடவுளுக்குள்ள ஆனந்தந்தான் காரணம் என்று சொல்லத் தோன்றுகிறது. கடவுளுக்கே இப்படியாக ஓர் உணர்ச்சி உண்டு என்று நாம் கற்பனை செய்யும்போது, மனிதனுக்கும் தன் இனத்தை விருத்தி செய்வதில் தனித்த ஆசையுண்டென்று சொல்வதில் குற்றமில்லை.

எனவே, மனிதன் தன் சந்ததியை விருத்தி செய்வதில் ஆசையுடையவனாகிறான். சந்ததி விருத்திக்குரிய பிள்ளை இல்லை என்றால், அது ஒரு பெருங்குறை. பிள்ளை யில்லாமல் வெகு காலம் வருந்தியவர்களுடைய கதைகள் நம் நாட்டில் பல உண்டு. தசரத சக்கரவர்த்தி நெடுங்காலம் புத்திரனில்லாமலிருந்து, பின் புத்திர காமேட்டி யாகம் செய்து இராமனைப் பெற்றார் என்பதை நாம் அறிவோம். இவருடைய பாட்டனாராகிய திலீப மன்னர், பிள்ளை யில்லாத குறையை நீக்கவேண்டி, தாமும் தம் மனைவியுமாக ஒரு பசுவைப் பூசித்தும் வழிபட்டும் வந்தாரென்பதும் மற்றொரு கதை. இவை வடநாட்டுக் கதைகள். தமிழ் நாட்டிலும் இங்ஙனமே பல கதைகள் உண்டு. சைவ சமயத்துக்கு முதல் ஆசாரியராகிய மெய்கண்ட தேவருடைய பெற்றோர் புத்திரப் பேறின்றி வருந்திப் பின் திருவெண்காட்டிலே ஆலய வழிபாடு செய்து அனுக்

கிரகம் பெற்ருர்கள் என்பது ஓர் அழகிய சரித்திரம். இப்படிப்பட்ட வரலாறுகளுக்கு அளவேயில்லை.

அறிவுடைய மக்களும் பிறரும் மக்கட் பேற்றை விரும்புதற்குள்ள பல காரணங்களில் ஒரு காரணம் மிக்க சுவையுடையது. புதல்வனின்றி ஒருவன் இறந்து போனுல், அவன் 'புத்' என்னும் நரகத்தில் சென்று துன்புற நேரும் எனவும், இந்த நரகத்தில் விழாமல் தந்தையை மகன் காப்பாற்றக் கூடியவனு யிருத்தலி ஞலேயே மகனுக்குப் புத்திரன் என்று பெயர் எனவும் சாஸ்திரங்கள் கூறும். இந்தக் கருத்து, வடமொழி யாளரிடையில் மட்டுமன்றி, தமிழரிடையிலும் நெடுங் காலமாகப் பரவியிருந்தது. அற நெறியிலே நின்று போர் புரிகிற ஒரு பாண்டியனைப் புலவரொருவர் வாழ்த்துகிருர். அவன், தான் படையெடுக்கக் கருதிய நாட்டிலுள்ள பசுவையும் பார்ப்பனரையும் பெண்டி ரையும் பிணியாளரையும் வேறிடம் போகும்படி சொல்லிவிட்டுப் பிறகுதான் படையெடுப்பானும். இந்நால்வரோடு, மற்ருெரு வகையினரையும் பாதுகா வலான வேறிடம் செல்லும்படி பறையறைந்து தெரி விக்கிருன். பிதுர்க்களுக்குக் கடன்செய்வதற்குரிய புதல்வரில்லாமல் இறந்துபோவோர் நரகில் துன்புறு வார்களாதலால், அவர்களும் வேறிடம் போகலாம் என அவன் தெரிவிப்பானும். (வேறிடத்திலே போயிருந்து, நரகத்துன்பம் தங்களுக்கு வாய்க்காத வாறு அவர்கள் புதல்வர்களைப் பெற்றுக் கொள்ளட்டும் என்று அரசன் கருதுகிருனும்.) இதைப் புலவர் சொல்லுகிருர் :

**தென்புல வாழ்நர்க்(கு) அருங்கடன் இறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெருஅ தீரும்—**
**எம்அம்பு கடிவிடுதும்—நும்அரண் சேர்மின்**

என்று முன்னதாகவே எச்சரிக்கை செய்வானும் அப் பாண்டியன். இதனுல், புதல்வரைப் பெறுவது எவ்வ ளவு அவசியமென்று பழந்தமிழ் மக்கள் கருதிவந்தன ரென்பது தெரியவருகிறது.

இந்தக் கருத்தி னுண்மையைச் சாஸ்திர வாயி லாகவும் இலக்கிய வாயிலாகவும் மேலே கண்டோம். வாழ்க்கையிலும் இதன் உண்மை பிரதிபலிப்பதை இன்றும் காண்கிறோம். இவற்றுடன் கூட, பழமை யாக மக்கள் வழங்கி வரும் எளிய பாட்டுக்களிலும் இக்கருத்து அடங்கியிருப்பது கண்டு மகிழ்தற்குரியது. பெண்கள் குழந்தைகளைச் சீராட்டித் தூங்கவைப் பதற்காகத் தாலாட்டுக்கள் பாடுகிறார்கள். இப் பாட்டுக்கள் நாட்டுப்புறங்களில் இன்னும் அற்றுப் போய் விடவில்லை. இவற்றுளொன்றில் வரும் சில அடிகளை இங்கே கவனிக்கலாம்.

ஒரு குடும்பத்தார் புத்திரப் பேறின்றி வெகு காலமாக வருந்திக் கொண்டிருக்கிறார்கள். பிறகு குழந்தை பிறக்கிறது. எல்லோருக்கும் சந்தோஷம். சுகத்தையும் துக்கத்தையும் குடும்பத்திலே பெண் களே அதிகமாக உணர்வார்கள் அல்லவா ? இக்குடும் பத்திலும், பிள்ளை பிறந்தமைபற்றித் தாய்க்கு அதிக மகிழ்ச்சி. குழந்தையைத் தொட்டிலில் உறங்கச் செய்து தாலாட்டுகிறாள். அந்நிலையிலே, குழந்தையே இல்லாது வருந்திய காலம் ஞாபகத்துக்கு வருகிறது. குழந்தை பிறக்கவேண்டும் என்ற ஆசையினாலே செய்த யாத்திரைகள் எவ்வளவு ! ஆடின தீர்த்தங்கள் எத்தனை ! சென்று வழிபட்ட தலங்கள் எத்தனை ! இத்தனை எண்ணமும் நினைவுக்கு வந்து தாலாட்டில் வெளிப்படுகிறது :

**சீரங்க மாடித் திருப்பாற் கடலாடி**
**மாமாங்க மாடி மாசிக் கடலாடித்**
**தைப்பூச மாடித் தவஞ்செய்து வந்தானோ !**

அவள் செய்த தவங்கள், அனுஷ்டித்த விரதங்கள், நோற்ற நோன்புகள் எத்தனை எத்தனையோ !

**பட்டினி யிருந்து பகவானைச் சேவித்து**
**மலைமேல் தவமிருந்து வந்து பிறந்தானோ !**

இவ்வளவும் அனுஷ்டித்தான பிறகு குழந்தை பிறந்தது. பிறந்ததனுல் தாய்க்குண்டான சந்தோஷத்தை ஓர் அளவுப்டுத்திக் கூற முடியுமா? தாயே அதைச் சொல்லிப் பாடுகிருள்.

பலா மரத்தின் இயல்புகளி லொன்றை இங்கே ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டும். உயர்ந்த சாதிப் பலாமரமானது, காவேரியாற்றுப் பாசனத்தை யொத்த நீர்வளம் நிறைந்துள்ள செழிப்பான பூமி யில் நன்ருய்ப் பயிராவதில்லை, பலனும் தருவதில்லை. பாறைகளும் சுக்கானும் செறிந்த செழிப்பற்ற வறண்ட நிலம்தான் அதற்கு ஏற்றது. இந்த நிலத் திலே, மற்ற மரம் செடி கொடிகள் வாடிக் கருகி விடும். பலாமட்டுமே இங்கு வாடாமல் நின்று, இலை களெல்லாம் உதிர்த்து விட்டுப் பின் காய்த்துப் பழுக் கும். சந்ததி யில்லாமல் கவலையுற்றிருந்த தாய்க்கு, தன் குடும்பம், தீய்ந்து கருகிப்போன கொடி போலத் தோற்றிற்ரும். அந்த நிலையிலே குழந்தை பிறந்தது சாதிப்பலா பழுத்தது போல இருந்தது. இந்த பாவத்திலே தாலாட்டுப் பாடுகிருள் :

**இலைதீய்ந்து கொடிவாடி**
**இல்லையென்று போமிடத்தே,**
**சருகுதிர்த்துக் கனிந்துதந்த**
**சாதிப் பலாப்பழமோ!**

'இல்லை யென்று போமிடத்தே' என்று கூறும் போது, புத்திரனில்லாமையால் உண்டான ஏக்கம் அவ்வளவும் தொனிக்கிறது. இலைகளெல்லாம் கருகி, கொடியும்வாடி, இனிக் கடைத்தேற வழியில்லை என்ற நிலைமை அனேகமாக ஏற்பட்டுவிட்டது. அந்த நிலை யிலே, கடவுளருளால், குலத்தை விளக்க ஒரு குழந்தை பிறந்தான், ஒன்றும் பயிராகாது என்று சொல்லக்கூடிய வறண்ட நிலத்திலே, கடுங் கோடைக் காலத்தில் பழுக்கும் பலாவைப் போல. இந்தப் பலாவிலும், இலைகளே இல்லை; உலர்ந்த சருகுகள் மட்டுமே இருந்தன. இவையும் உதிர்ந்து

போயின, கோடையின் வெம்மையால். இதேபோல, புத்திரனில்லாமை என்ற ஒரு வெப்பத்தால் சந்தோஷமவ்வளவும் மறைந்து போய்விட்ட குடும்பத்தில் தோன்றிய குழந்தையைச் சாதிப் பலாப்பழமென்று தாய் கூறுவது முற்றிலும் உண்மையோடு ஒட்டியதாயிருக்கிறது. பலாப்பழமும், வெறும் பலாப்பழமன்று; சாதிப் புலாப்பழம். தாய்க்குத் தன் பிள்ளையினிடத்தில் அவ்வளவு வாஞ்சையும், பிள்ளை பெற்றதனாலே அவ்வளவு பெருமிதமும் ஏற்பட்டிருக்கின்றன.

சாதாரணமான ஒரு தாலாட்டுப் பாட்டுத்தான் இது. இந்த வரிகளிலே, பல்லாண்டுகளாக மக்களின் இதயத்தில் ஊறிக்கிடக்கிற சில அற்புத உணர்ச்சிகளின் பாவம் மிக எளிதில் பிரதிபலிக்கிறது. இந்த வரிகளைத் தாயார் நீலாம்புரி ராகத்தில் பாடித் தாலாட்டும்போது, அவளுடைய குழந்தை மட்டும் கேட்டுத் தூங்கிப் போய்விடுகிறது என்று எண்ண வேண்டாம். பக்கத்திலே கேட்டுக் கொண்டிருக்கும் நாமும், பாட்டின் இசையின்பத்தோடு பொருட்சுவையிலும் ஈடுபட்டு, மயங்கி மெய்ம்மறந்து உணர்ச்சியற்றுப் போய்விடுகிறோம்.

# 4. சீகாழிப் பள்ளு

இசைத் தமிழானது பழைய காலம் முதல் இன்றள வும் தொடர்பாக வளர்ந்து வந்திருக்கிறது. அவ் வப்போது தோன்றிய இலக்கிய ஆசிரியர்களும் இசை வாணர்களும் இசைத் தமிழ் வளர்ச்சிக்குத் துணை புரிந்திருக்கிறார்கள்.

பிற்காலத்திலே தமிழ்ச் சங்கீதத்துக்குப் புத் துயிர் அளித்தவர்களுள் சிறப்பாகக் கூறத்தக்கவர் சீகாழி அருணாசலக் கவிராயர், கோபால கிருஷ்ண பாரதியார் என்னும் இருவர். கவிராயர், கம்ப ராமாயணத்தின் சுவையிலே திளைத்து, இராம சரிதத்தை நாடக ரூபத்தில் கீர்த்தனைகளாகப் பாடி னார். பாரதியார், நந்தன் சரித்திரத்தில் ஈடுபட்டு, அப் புண்ணிய சரிதத்தை நாடக ரூபத்தில் கீர்த் தனைகளாக அமைத்தார். இவ்விரு கீர்த்தனத் தொகுதிகளும் தோன்றிய காலந்தொட்டு, கதா காலட்சேபம் செய்யும் பாகவதர்களுக்கும் சங்கீதக் கச்சேரி செய்யும் வித்துவான்களுக்கும், இவை அரிய சாகித்தியத் தொகுதிகளாக இருந்து வந்திருக்கின் றன. தமிழ் மக்களுக்கு இவற்றிலுள்ள ஈடுபாடு இவ்வளவென்று சொல்லமுடியாது.

இவ்விருவரும் சமீப காலத்திலிருந்தவர்கள். கவி ராயர் பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப் பகுதி யில் (கி. பி. 1712-1779) இருந்தவர்; காலத்தால் திருவையாறு தியாகராஜ சுவாமிகளுக்கு முந்தியவர். பாரதியார், சுவாமிகளின் இறுதிக் காலத்தில் வாழ்ந் தவர். மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையர் அவர்கள், பாரதியாரிடம் சங்கீதம் கற்றவர். இவர் கள் நமக்கு இவ்வளவு சமீபமான காலத்தில் வாழ்ந்

திருந்தபோதிலும், இவர்களுடைய கீர்த்தனங்களோ நூல்களோ சில மட்டுமே கிடைக்கின்றனவே யொழிய, பல இல்லாமல் மறைந்துபோய் விட்டன, பாரதியார் செய்த காரைக்காலம்மையார் சரித்திரம், இயற்பகைநாயனுர் சரித்திரம் முதலிய கீர்த்தனங்கள் இன்று கிடைக்கவில்லே. அவ்வாறே, கவிராயர் செய்த நூல்களில், சீகாழிப் புராணம் போன்ற இரண்டொரு நூல்களே இன்று வழக்கிலுள்ளன; வேறு பல பிரபந்தங்களும், அசோமுகி நாடகம் என்பது போன்ற இசை நூல்களும் நாடக நூல்களும் இறந்துபோயின. இவ்வாறு கிடையாமற்போன நூல்களுள், கவிராயர் செய்த **'சீகாழிப் பள்ளு'** என்பதும் ஒன்று; கூத்துக்கும் பாட்டுக்கு மென்றே அமைந்த பள்ளுப் பாட்டு.

இந்தப் பள்ளுப்பாட்டைப் பார்ப்பதற்கு முன்னே, இலக்கியத்தில் இதன் நிலே என்ன என்பதை அறிதல் நலம். மேல் நாட்டிலே மக்களிடையில் வாய் மொழியாக வழங்கிவரும் பழைய பாடல்களேப் பலர் திரட்டி வெளியிட்டிருக்கிருர்கள். அந்தந்த நாட்டு மக்களுடைய நாகரிக வளர்ச்சியையும், பழக்கவழக்கங் களேயும், வேறு பல இயல்புகளேயும் அறிய அவை சிறந்த சாதனமா யிருக்கின்றன. தமிழ் மக்களி டையே பழமையாக வழங்கிவரும் பாடல்களே, முற் காலத்திலும் சரி இக்காலத்திலும் சரி, யாரும் பாது காத்துவைக்கவில்லே.

ஆயினும், பழங்காலத்துப் புலவர்கள் அந்தப் பாடல்களே ஓரளவுக்கு ரசித்து அனுபவித்து வந்திருக் கிருர்கள். பயிர்த்தொழில் செய்த உழவர், மலேயிலும் காடுகளிலும் திரிந்த வேடர் முதலிய மக்களிடையே ஓர் உல்லாச வாழ்க்கை இருந்தது. அவர்கள் ஆடிக் கொண்டும் பாடிக்கொண்டும் வாழ்க்கையை நடத்தி ஞர்கள். பலவகையான பாடல்கள் இந்த மக்களி டையே மிகுதியாகக் காணப்பட்டன. இவற்றைக் கண்ட அறிவாளிகளான புலவர்கள், இப்பாடல்களே இலக்கிய முறையில் தங்கள் நூல்களில் அமைத்துக்

கொண்டார்கள். உழவுத்தொழில் செய்வோருடைய வாழ்க்கையையும் அவர்களுடைய கூட்டத்திலே வழங்கிய பாடல்களையும் தழுவி அமைத்துக் கொள்வதற்காக, 'பள்ளு' என்ற ஒரு புதுப் பிரபந்த வகையை ஏற்படுத்திக்கொண்டார்கள். மலைகளிலும் காடுகளிலும் திரிபவர்களான குறவர், வேடர் முதலியோருடைய வாழ்க்கையைச் சித்திரிப்பதற்காக, 'குறவஞ்சி' என்ற மற்றொரு புதிய பிரபந்த வகையை வகுத்துக் கொண்டார்கள். இவ்வாறெல்லாம், புலவர்கள் எளிய மக்கள் வாழ்க்கையிலும் சுவை கண்டு அதைப் பாராட்டி வந்தார்கள். இது காரணமாக, பிரபந்த வகைகள் பலவாகப் பெருகின. பின் வந்த புலவர்களும் புதிய வகைகளைத் தழுவி நூல்களியற்றினார்கள். இவ்விதமாக, குறவஞ்சி, பள்ளு முதலிய புதிய பிரபந்தங்கள் பல தோன்றி வளரலாயின.

இவற்றுள், பள்ளு என்ற பிரபந்த வரிசையைச் சேர்ந்தது மேலே குறிப்பிட்ட 'சீகாழிப் பள்ளு' என்ற நூல். பயிர்த்தொழில் தொடங்கவேண்டிய பருவம் ஆரம்பமாகிறது. உழவர் மழை வேண்டித் தெய்வங்களுக்குப் பூசைபோட்டுக் கூத்தாடுகிறார்கள். மேகங்கள் திரண்டு, மேற்கே குடகு மலையில் பெருமழை பொழிகின்றன. காவேரியாற்றிலே புது வெள்ளம் வருகிறது. கழுமல நதி என்பது காவேரியின் கிளைகளில் ஒன்று; கழுமலம் என்னும் பெயரையுடைய சீகாழிக் கருகே ஓடுவதால், அந்தப் பெயர் பெற்றது. ஆற்று வெள்ளம் வாய்க்கால்கள் வழியே வயல்களுக்குப் பாய்கிறது; கரையிலுள்ள நெருக்கமான தாழை மரங்களை அடியோடு சாய்த்து விடுகிறது. பள்ளர் குடிசைகளிலுள்ள பாத்திரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. கடற்கரையிலுள்ள உப்பளங்கள், செம்படவருடைய வலைகள் முதலியன வெல்லாம் வெள்ளத்தில் போகின்றன. கடைசியாக, ஆறு கடலில் கலக்கிறது.

சீகாழிக்கு அருகிலே வாழ்ந்த அருணாசலக் கவிராயர் இவ்வளவையும் பார்த்து, ஆற்று வெள்ளத்

தின் ஓட்டத்தையும் அதன் அழகையும் கண்டு ஆனந் திக்கிறார். அவருடைய ஆனந்தமும் ஆற்றின் கும்மா ளமும் பாட்டிலே வெளிப்படுகின்றன :

பாய்ந்து நெருங்கும் தாழைக் குலத்தைச்
சூழப் புடைத்த நீழலாய்ப்
படர்ந்த சண்பைத் தடத்தையும் - அதில்
இடந்த செம்புக் குடத்தையும்
வாய்ந்து வாரி அளத்திலும் - குவி
களத்தி லுஞ்சிறு குளத்திலும்
வாங்கி எறிந்த பாங்கிப் பரவர்
வலையும் நிலையும் குலையவே
சாய்ந்து டுத்திய நுளைச்சி மாதர்
புடவை யும்பெரும் புடவியும்
தள்ளிக் குமரி தெள்ளித் தெளிந்து
வெள்ளைக் கயல்கள் துள்ளியே—

கவிராயர் காலத்திலே சீகாழியில் வாழ்ந்த ஒரு வள்ளலுக்குக் காழிக்குட்டி என்பதாகப் பெயர் வழங்கிற்று. அந்த வள்ளல் வீட்டின் முன்வாசலில் இரவலர் வந்து வேண்டியதைப் பெறலாம் என்று எந்நேரமும் முரசம் முழங்குமாம். அம்முரசத்தின் அதிர்ச்சிபோல இருந்ததாம், கழுமல நதி கடலிற் புகுந்த ஓசை :

ஆய்ந்தி டும்புகழ் சேர்வ ளத்திடைக்
காழிக் குட்டிமுன் வாசலில்
அதிர்மு ரசெனக் கழும லநதி
அகண்ட கடலிற் புகுந்ததே!

பாட்டிலுள்ள சந்தத்திலும் தாளத்திலும், ஆற்று வெள்ளத்திலுண்டாகும் அலைமோதுகிற ஒலி யைக் கேட்கிறோம்; மரங்கள் வேரோடு பறிக்கப் பட்டுச் சாய்வதையும், மீன்கள் துள்ளிக் குதிப்பதை யும் காண்கிறோம். மழையை வேண்டி நின்ற உழ

வருக்கு ஆற்றிலே புது வெள்ளம் வந்ததனால் ஏற்பட்ட உற்சாகத்தையும் அவர்களுடைய கோலாகலத்தையும், ஒருவகையாக இந்தப் பாடல் நம் கண்முன்னே கொண்டுவருகிறது.

இனி, கவிராயரோடு வேறோர் இடத்துக்குச் செல்வோம். உழுது விதை தெளித்து, வயலிலே நாற்றுக்கள் வளர்ந்திருக்கின்றன. நாற்றுக்களைப் பிடுங்கி நடும் பருவம் வந்துவிட்டது. பள்ளியொருத்தி, நடவு நடுவதற்காக மற்றப் பள்ளியரை அழைக்கிறாள்.

இந்தப் பயிர்த் தொழில் எங்கே நடைபெறுகிறது?

சத்தி யாட அன்பர் பதமும்
பத்தி யாட ஒருபதஞ்
சலியு மாடப் புலியு மாடச்
சகலருந் துதித் தாடவே
வெற்றி யாடகச் சபையி லேபதம்
ஒற்றி யாடும் பாதனார்
விமலர் காழிப் பெரிய நாயகர்
கமலப் பண்ணை வயலுளே—

பத்தி-பக்தி. புலி-வியாக்கிரபாதர். ஆடகச் சபை - பொன்னம்பலம். பெரியநாயகர்: சீகாழியிலே சுவாமி திருநாமம்; பிரமபுரீசர் என்பது.

சீகாழியிலே தங்கள் பண்ணைக்குத் தலைவரான பிரமபுரீசரது நிலத்தில் பயிர் செய்யும் பள்ளியரை 'வாருங்கள் நடவு நட' என்றழைக்கிற பள்ளி, சுவாமியின் புகழை இவ்வாறு கூறிப் பாராட்டுகிறாள்; இறைவனுடைய திருநடனத்தைச் சொல்லிய பிறகு, தாங்கள் நடவு நடுகையில் ஆடுவதையும் பாடுவதையும் ஞாபகப்படுத்திக் கொள்ளுகிறாள். இவளுக்கு உள்ளத்திலே உவகை பொங்குகிறது.

அந்த ஆனந்தத்திலே இவள் திளைத்து நிற்கும் போது, தொடர்ந்து வருகிறது பாட்டு :

**சுற்றி வீசும் வாடை யாட**
**ஆடை யாட மணிமுடித்**
**தொங்க லாடக் கொங்கை யாடச்**
**செங்கை ஓங்கி யாடவே**
**நத்து வாணைகை முத்து மாமுடிக்**
**கொத்து மாடக் குரவைசேர்**
**நலத்திற் சேற்றை மிதித்து நாற்றை**
**நடவே வாரும் பள்ளீரே !**

இந்தப் பாட்டைப் பாடும்போது, நம்மை அறியாமலே நாமும் பள்ளியரோடு ஆட ஆரம்பித்துவிடுவோம். தமிழ்ப்பாட்டிலே அவ்வளவு இயல்பாகவே கூத்தும் அமைந்து கிடக்கிறதென்பதை உணர்வோம்.

அடுத்த காட்சி. பள்ளியரெல்லோரும் திரண்டு வந்து பல வயல்களில் நாற்றுக்களை நடுவதற்கு ஆயத்தமாய் நிற்கிருர்கள். பள்ளர் நாற்றைப் பறித்து முடிந்து தருவதும், பள்ளியர் வாங்கி நடுவதுமாகிய காட்சியை எங்கும் காண்கிறோம். அங்கங்கே பள்ளர் பள்ளியரிடையில் நடக்கிற சிற்சில காதல் நிகழ்ச்சிகளைக் கவிராயர் நமக்குக் காட்டுகிருர். சில வயல்களில் நடவு நட்டுக்கொண் டிருக்கும்போதே இத்தகைய நிகழ்ச்சிகள் நிகழ்வதை அவர் காண்கிருர். வேறு சில இடங்களில், காலைவேலை முடிந்து, வரப்புக் களிலுள்ள மர நிழலில் பள்ளரும் பள்ளியருமாகத் தங்கி யிருக்கிருர்கள் ; பள்ளி கஞ்சி ஊற்றப் பள்ளன் குடிக்கிருன் ; அப்போது நடக்கும் நிகழ்ச்சிகளையும் அவர் பார்க்கிருர். பார்த்து, ஒரு பள்ளி இந்நிகழ்ச்சிகளை மற்றப் பள்ளியருக்குக் காட்டிச் சிரிப்பதாகக் காட்சிகளைச் சித்திரிக்கிருர்.

முதலிலே, பள்ளி தங்கள் சுவாமியின் பெருமையைக் கூறுகிருள். திருஞான சம்பந்தருக்குத்

திருமுலைப் பால் கொடுத்த வரலாற்றை உரைக் கிருள். திருமுலைப் பால் உற்சவம் என்ற திருவிழா சீகாழியிலே இன்றும் நடப்பதுண்டல்லவா?

பழுதி லாச்சதுர் வேதமும் - படி
தொழுதி டுஞ்சைவ நீதமும்
பதிக்கப் புவியில் உதித்திடும் - சிவ
பாத ஞர்அருள் போதனர்,
கழுவில் அமணத் திரளை வாரி
ஏற்றி டுந்திரு நீற்றினர்,
கமல வாவிக் கரையில் இருந்து
கதறி யழுத மதலைபால்
மழுவி டையில்வந் துமைதி ருமுலைப்
பாலை யருளுஞ் சீலனர்,
வல்லார் காழிப் பெரிய நாயகர்
உள்ளூர் வடக்கு வெளியிலே—

படி-உலகம். சிவபாதனர்: சம்பந்தருடைய தந்தையார். கமல வாவி-பொற்றாமரைக்குளம். மதலை: சம்பந்தர்.

'வடக்கு வெளி' என்ற வயலில் கண்டதைக் கவி ராயர் கூறுகிருர். காத்தி முதலான பள்ளிகள் நடுகிருர்கள். சின்ன ராக்கி என்பவள் கோபத்தோடு கடுநோக்கியாய் வயல் வரப்பிலே இருக்கிருள்:

மொழிவ ளத்துடைக் கோட்டத்துக் - களை
உழுது சமைந்த நாட்டத்துள்
மூக்கி மகள்இ ராக்கியாம் - சின்ன
ராக்கி யுங்கடு நோக்கியாய்த்
துழனிக் காரி காத்தியும் - அவள்
நாத்தி யும்ஒரு சேர்த்தியாய்ச்
சுருக்கி நடுகு றுக்கிலே - படுத்
திருக்கும் ஓரிட வரப்பிலே—

அப்போது குழந்தை அழுகிறது. அதைக் கேட்டு, அவளுடைய பள்ளன் மூத்தான் என்பவன், 'குழந்தைக்குப் பால் கொடு' என்று அவள் கையைப் பிடித்திழுக்கிறான். அவள் என்ன செய்தாள், அவர்களிடையில் என்ன சல்லாபம் நடந்தது என்பனவற்றைப் புலவரே சொல்லட்டும்:

அழுத குழவி இருக்கச்சே - முலை
பொழிந்த பாலும் பெருகச்சே,
அதைக் கண்டு மூத்தான் எடுத்தே
அழகி ராக்கிக் கிட்டப்போய்,
கொழுவ ரப்பினில் குழந்தைக் கிதமாய்
அழுதி டுஞ்சிறு குழந்தைக்குக்
கொடுகொ டென்றொரு கையைப் பிடித்தான்;
விடுவி டென்றவள் கன்னத்தில் அடித்தாள்;
நிழலில் வாவென் றிழுப்பதும் - அவள்
அழகு முகத்தை விழிப்பதும் - இவள்
நெளிப்பதும் அவன் களிப்பதும் - பல்லை
இளிப்பதும் பாரும் பள்ளீரே!

இந்தக் காட்சியைப் பார்த்துவிட்டு, அடுத்த வயலுக்குச் செல்வோம். இது 'பிள்ளைக் கட்டளை' என்ற வயல். இங்கே இராமி முதலான பள்ளியர் நடுகிறார்கள். பேச்சி மகனும் நாச்சி மகளும் விளையாடுவதைச் சிறிது பார்ப்போம்.

வெள்ளைச் சடையர் துள்ளும் விடையர்
வெடிகொள் படையர் அடியர்க்கா
விரைந்த தூதர் சிவந்த பாதர்
வேத னார்க்கருள் போதனார்
வள்ளை வார்குழல் பெரிய நாயகி
இடத்தி னார்மணி மிடற்றினார்
வளருங் காழிப் பெரிய நாயகர்
வளமைப் பண்ணை வயலுளே,

குள்ளன் மகள் இ ராமியும் - அவள்
மாமியும் முத்துச் சாமியும்
குலுக்கிச் சிறுக்கி சிலம்பியும் கலுக்
குள்ளக் குட்டியும் பாடியே
பிள்ளைக் கட்டளை நாற்றை வாங்கிப்
பிடுங்கி யேதனி நடுகையில்,
பேச்சி வீட்டுப் பையலும் - சின்ன
நாச்சி வீட்டுத் தையலும்—

அடியர்-சுந்தரமூர்த்தி. வேதனர்-பிரமன். இடத்திஞர்-இடப் பாகத்தி லுடையவர்.

நாச்சி மகள் கள்ளைக் குடித்த மயக்கத்தில் தடு மாறி விழுகிருள். மேலெல்லாம் சேருகிறது. பேச்சி மகன் இதைப் பார்த்து வந்து சேற்றைத் துடைத்து விடுகிருன். அப்போது அவர்க ளிருவருக்கு மிடையே காதல் விளையாட்டு நடக்கிறது. கள்ளுண்ட மயக்க மல்லவா இருவருக்கும்?

கள்ளைக் குடித்து வேர்த்ததும் - அவள்
கடைக்கண் ணலே பார்த்ததும்,
கண்டு பிறகே தொடர்ந்ததும் - அவள்
அண்டை வயலில் நடந்ததும்
அள்ளல் நீரில் விழுந்ததும் - கலை
உள்ளும் புறமும் நனைந்ததும்,
அங்க மெல்லாந் தெரிந்ததும் - பயல்
அதைக்கண் டோடித் திரிந்ததும்,
துள்ளு சேறு படிந்ததும் - அதைத்
துடைத்து முத்தங் கொடுத்ததும்,
'சொட்டால்' என்றவள் அடித்ததும் - பயல்
மட்டார் காலைப் பிடித்ததும்,

புள்ளிப் புடவை பிழிந்து முகத்தில்
மெள்ளக் கையை நீட்டியே
புதைப்பதும் அவள் உதைப்பதும் - இவன்
பதைப்பதும் பாரும் பள்ளீரே!

இவ்விதமாகவே கவிராயர் வயல்தோறும் நடப்பவற்றைக் கண்டு களித்து நமக்குக் காட்டுகிறார். இப்படி எத்தனை வயல்கள்? சில வயல்களை அவர் குறிப்பிடுகிறார்:

அம்ப ரத்தெழு வேணுவாய் - வரும்
உம்ப ருக்கொரு தாணுவாய்
அண்டம் அளந்த மாயனார் - உகிர்
கொண்டு வகிர்ந்த தூயனார்,
செம்பு கலிவெங் குருக ழுமலம்
சண்பை காழி பூந்தராய்
சிரபுரம் தோணி புறவம் கொச்சை
சிறக்கும் வேணு புரத்துடன்
நம்பு பேர்கள் ஆறி ரண்டுடைப்
பிரம புரீச நாதனார்
நல்லார் காழிப் பெரிய நாயகர்
உள்ளூர் வடக்கு வெளியிலே--
சம்பை கோட்டகம் குமரக் கட்டளை
சாரடிப் பாதிரிக் கட்டளை
தகும்அறு பத்து மூவர் கட்டளை
சம்பந்தக் கட்டளை நடுகையில் —

புகலி, வெங்குரு, கழுமலம், சண்பை, காழி, பூந்தராய் சிரபுரம், தோணிபுரம், புறவம், கொச்சை, வேணுபுரம், பிரமபுரம் ஆகிய பன்னிரண்டும் சீகாழியின் பெயர்கள்.

இவைபோன்ற பல வயல்களில் நடவு நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு காட்சியாகப் புலவர்

காட்டிக்கொண்டே போகிறார். ஆண்களும் பெண்களுமாக எளிய உழவர்கள் பயிர்த் தொழிலில் ஈடுபட்டிருப்பதை நெடுகிலும் காண்கிறோம். அவர்களுடைய அன்பு, எளிமை, உவகை நிறைந்த காதல் வாழ்க்கை முதலியவற்றைப் பார்க்கிறோம். அந்த வாழ்க்கையைப் புலவர் கவிச் சுவையோடு பாடலில் அமைத்துக் காட்டும்போது, மன உல்லாசத்தோடு நாமும் அதை அனுபவிக்க முடிகிறது.

இப்படி அனுபவிக்க முடிந்தபோதிலும், இடையிலே ஒரு சந்தேகம் தோன்றக்கூடும். இந்தக் காதற் காட்சிகள் யாவும் புலவருடைய புனைந்துரைகளே, உண்மையில் நிகழ்வன அல்ல என்று எண்ணத் தோன்றும். இவை கவிச் சுவையோடு புலவரால் கற்பனை செய்து கூறப்பட்டவை என்பது ஓரளவுக்குப் பொருந்தும். ஆயினும், இதனால், இந்நிகழ்ச்சிகள் யாவும் உண்மையல்லவென்று எண்ணிவிடலாகாது. இக்காலத்திலே, உயர்ந்த வகுப்பு மக்களாகிய நாம் நாகரிகம்படைத்த சமூகத்தார் என்று நம்மைச் சொல்லிக் கொள்ளுகிறோம். இதுகாரணமாக என்ன செய்கிறோம்? எவ்விஷயத்திலும் அதிக உற்சாகத்தோடு ஈடுபடுவதில்லை; எதிலும் மிதமாகவே இருக்கப் பார்க்கிறோம். பலர் சேர்ந்த கூட்டத்திலே நம்முடைய சந்தோஷத்தையோ அன்பையோ வெளியே காட்டிக் கொள்வதில்லை. நமது உணர்ச்சிகள் சொல்லிலும் செயலிலும் முகத்திலும் புலப்படாவாறு அடக்கக் கற்றுக்கொண்டு விட்டோம். ஏன், உணர்ச்சிகளைக் காட்டுவது அநாகரிகமென்று எண்ணவும் தலைப்பட்டு விட்டோம்.

ஆனால், பயிர்த்தொழில் செய்கிற இந்த எளிய மக்கள் நாம் பெற்ற இந்த 'நாகரிகம்' பெற்றவர்களல்லர்; தங்கள் இதயத்தோடொட்டிய உண்மைகளை நன்றாக உணர்வார்கள்; உணர்பவற்றை நேர்முகமாகச் சொல்லாலும் செயலாலும் முகபாவத்தாலும் வெளியிடுவார்கள். உள்ளத்திலெழும் உணர்ச்சிகளை அடக்க அறியார்கள். இந்த மக்கள் தொகுதியிலே,

மேலே கவிராயர் கூறியுள்ளவற்றைப் போன்ற காதல் நிகழ்ச்சிகள் சாமானியமாக நிகழ்வதுண்டு. இன்றுமே அவ்வாறெல்லாம் அவை இயல்பாக நிகழ்வதைக் காணலாம்.

இந்த உண்மையை மனதில் இருத்தி, பள்ளுப் பாடல்களைப் பார்ப்போமானால், அவற்றின் சுவையை அனுபவிக்க முடியும். பாட்டுக்கும் கூத்துக்கும் ஏற்ற முறையில் அவை செய்யப்பட்டுள்ளமையால், சொல் நயமும் தாளக்கட்டும் எளிமையும் வாய்ந்து, பாடுவோர் மனதைக் கவருந் தன்மையுடையனவா யிருக்கின்றன. இத்தகைய பள்ளுப் பாடல்கள் பல பயிர்த்தொழில் செய்யும் மக்களிடையே கர்ண பரம்பரையாக இன்றும் வழங்கிவருகின்றன.

---

குறிப்பு: *சீகாழிப் பள்ளு என்ற ஒரு நூலை அருணாசலக் கவிராயர் செய்தார் என்று பழமையாக வழங்கி வரும் வரலாற்றைத் தவிர, அந் நூலைக் குறித்து இதுவரை யாதும் தெரியவில்லை. சீகாழியைச் சேர்ந்த ஓரம்மையார், 'முக்கூடற் பள்ளு' என்ற நூலைப் பார்த்தபோது, தம் தந்தையார் வீட்டிலிருந்த ஏடுகள் கறையானுக் கிரையாகிக் கெட்டுப்போன காலத்து, சில துண்டு இதழ்களி லிருந்த அரைகுறைப் பாடல்களை எழுதி அவை 'கவிராயருடைய சீகாழிப் பள்ளு' என்று தந்தையார் தமக்குக் கொடுத்ததாகக் கூறினார்கள். இந்த அரைகுறைப் பாடல்களே மேலே தரப்பட்டவை; இவற்றுள் கடைசிப் பாட்டில் முதற்பகுதி தான் இருக்கிறது. இந்நூல் முழுதும் இக்காலத்துக் கிடைப்பதாகத் தெரியவில்லை. நாட்டுப்புறப் பாடல்களை அறியவேண்டும் என்ற உணர்ச்சி ஏற்பட்டுவரும் இக்காலத்திலே இவை பயனுடையனவாகும்.*

# 5. ஒரு தும்மல்

சிறு பையனொருவன் நாட்டுப்புறத்திலுள்ள ஒரு பாடசாலையில் ஆருவது பாரம் வரையில் படித்துத் தேறிவிட்டு, முதல்முதல் பட்டணத்துக்கு வருகிறுன். வந்து ஒரு காலேஜில் சேர்ந்து படிக்கிறுன். புதிதாக இப்போது தாய் தந்தையரை விட்டுப் பையன் பிரிந்துபோய்விட்டதனுல், அவர்களுக்கு எப்போதும் இவன் ஞாபகந்தான். பட்டணத்தில் மகனுக்குச் சாப்பாடு ஒத்துக்கொள்ளுமா, தண்ணீர் ஒத்துக்கொள்ளுமா, நெய் நல்ல நெய்யாகக் கிடைக்குமா என்றெல்லாம் தாய் எப்போதும் கவலைப்பட்டுக் கொண்டேயிருக்கிறுள். அயல்வீட்டிலுள்ள பெண்களிடம் எப்போதும் இதே பேச்சுத்தான். "இன்று முழுவதும் மகனையே பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். அவனுக்குக் கட்டாயம் புரையேறி யிருக்கும்" என்றுகூடச் சொல்லுகிறுள்.

பட்டணம் வந்து சேர்ந்த பையனுக்கு, ஆரம்பத்தில் வீட்டு நினைவு அவ்வளவாகக் கிடையாது. எத்தனையோ புது விஷயங்களைக் காண்பதிலும் தெரிந்து கொள்ளுவதிலும், நண்பர்களோடு உல்லாசமாக விளையாடுவதிலும் அவனுக்கு நேரம் கழிந்து போகிறது. விளையாட்டிலோ அல்லது படிப்பிலோ ஞாபகத்தை வைத்துக்கொண்டு ஒரு நாள், அவசர அவசரமாகச் சாப்பிட்டான். புரையேறிவிட்டது. தலையில் இரண்டு தட்டுத் தட்டிக்கொண்டு, கொஞ்சம் தண்ணீரும் குடித்தான். பக்கத்திலிருந்த அவன் நண்பன், "ஓகோ! உன் தாய் உன்னை நினைக்கிறுள். அதனுல்தான் உனக்குப் புரையேறிற்று" என்று வேடிக்கையாகச் சொல்லுகிறுன். இவனுக்கும் அப்படியே படுகிறது.

நம் எல்லோருக்கும் இப்படி ஒரு நம்பிக்கை யுண்டு; அதாவது, நமக்கு வேண்டியவர்கள் நம்மை நினைக்கும்போது நமக்குப் புரையேறும் என்று. ஆனால், உண்மையில், புரையேறுவதற்கும் மற்றவர்கள் நினைப்பதற்கும் ஏதேனும் தொடர்பு உண்டா என்பது சந்தேகந்தான்.

இந்த நம்பிக்கை ஒருபுற மிருக்கட்டும். வேறொன்றைக் கவனிக்கலாம். நம் வீட்டி லுள்ள குழந்தை யொன்று தும்முகிறது. உடனே, பக்கத்திலிருக்கிற நாம் "நூறு வயசு" என்று சொல்லுகிறோம். நாம் மட்டும் இப்படிச் சொல்லுகிறோம் என்பதில்லை; வேறு எவர் அருகிலிருந்தாலும் இப்படிச் சொல்லுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன? ஒன்றும் சொல்ல இயலாது. பழக்கந்தான். தும்மலுக்கும் ஆயுளுக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை. இருந்தாலும், எப்படியோ வெகு காலமாக ஏற்பட்டுள்ள ஒரு பழக்கத்தினால், தும்மினவுடனே இப்படி வாழ்த்துவது இன்றும் வழக்கமா யிருக்கிறது. வாழ்த்துவோர், தும்மின சத்தத்தைக் கேட்டு, பிறகு சாவதானமாக யோசித்துப் பார்த்து வாழ்த்தவில்லை. தும்மின சத்தம் காதிலே புகுந்ததோ இல்லையோ, தம்மை யறியாமலே இந்த வாழ்த்தைச் சொல்லிவிடுகிறார்கள்.

இப்படி எத்தனையோ பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் நம்மிடையில் உள்ளன. இவற்றுக்கு விசேஷப் பொருள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. எத்தனையோ நூற்றாண்டுகளாக இவை வழக்கத்தில் இருக்கின்றன. இதற்கு ஓர் உதாரணத்தைப் பார்க்கலாம்.

சீவகசிந்தாமணியின் கதை எல்லோருக்கும் தெரிந்ததொன்று. சீவகனை அவன் தாய் ஒரு மயானத்தில் பெற நேர்ந்தது; அங்கு வந்த ஒரு வணிகன் குழந்தையை எடுத்து வளர்க்கட்டுமென்று கருதி, அவள் மறைந்து நிற்கிறாள்; அவன் வந்து குழந்தையைக் கையில் எடுக்க, அது தும்முகிறது; கேட்டதாய் 'சீவ' என்று வாழ்த்துகிறாள். 'சீவ' என்று சொல்

னுக்கு 'நீண்ட ஆயுளோடு வாழ்வாயாக!' என்பது பொருள். இந்த வாழ்த்தொலியை மட்டும் கேட்டுச் சென்ற வணிகன், அக்குழந்தைக்குச் 'சீவகன்' என்று பெயரிடுகிறான் என்பது சிந்தாமணியிலுள்ள வரலாறு. இந்நூல் ஏறக்குறைய ஆயிரம் ஆண்டு களுக்குமுன் தோன்றியது. மேலே கூறிய பழக்க மொன்று மிகப் பழமையான தென்பதற்கு இந்நூல் சான்று பகர்கிறது.

காலத்தில் இன்னும் ஓர் ஆயிரம் ஆண்டுகள் பின் நோக்கிச் செல்வோம். திருவள்ளுவர் இரண் டாயிரம் ஆண்டுகளுக்குமுன் இருந்தவர். இந்தத் தும்மலைப் பொருளாக வைத்து அவர் ஒரு நாடகம் நடத்துகிறார். அதையும் பார்ப்போம்.

ஒரு நாயகனும் நாயகியும் ஒருவர் மீதொருவர் நிறைந்த காதலுடையவர்களாய் வாழ்ந்து வருகிறார் கள். நாயகன் நாயகியைப் பிரிந்து போனதே இல்லை. ஏதோ காரியமாக ஒருநாள் மாலையில் அவன் வெளியே போக நேர்ந்தது. அவன் போன வழியையே பார்த்துக் கொண்டிருக்கிறாள் நாயகி. சீக்கிரத்தில் அவன் திருப்பி வரவேண்டுமே என்று தவிக்கிறாள். போன இடத்தில், நாயகன் தன் நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்து விட்டானோ அல்லது போன காரியத்தை முடிக்கத்தான் அதிக நேரம் பிடித்ததோ, என்னவோ, தெரியவில்லை, வெகு நேரங் கழித்தே திரும்பி வருகிறான். மிக்க ஆவலோடு அவன் வர வையே எதிர்நோக்கி யிருந்த நாயகிக்கு, இப்போது அவனை எதிரே கண்டவுடன், கோபமே மேலிடுகிறது. அன்பெல்லாம் ஒருபுறம் ஒதுங்கிவிட்டது. கோப வெறியிலே, அவனோடு பேசவும் மறுக்கிறாள். அவன் எவ்வளவோ சமாதானம் சொல்லி, இவள் கோபத் தைத் தணிக்க முயல்கிறான். ஒன்றும் பலிக்கவில்லை. இவ்வாறு, அற்ப காரணத்தினால் ஏற்பட்ட இவளு டைய ஊடல் தணியாமலே, அன்று இராப் பொழுது கழிந்தது.

பொழுது விடிந்து கொஞ்ச நேரமானபின், நாயகிக்குக் கோபவெறி, யெல்லாம் தணிந்துவிட்டது. முதல் நாளிரவு நடந்ததைப்பற்றித் தோழியோடு பேசிக்கொண்டிருக்கிருள். நாயகனிடத்துக் கோபித்து இவள் பேசாதிருந்தா ளல்லவா? அப்போது இவளைப் பேச வைப்பதற்காக, அவன் ஒரு தந்திரம் செய்தா ளும். என்ன தந்திரம்?

**ஊடி யிருந்தேமாத் தும்மினர்**

என்ருள். நாயகி ஊடி யிருந்தபோது அவன் தும்மினு ளும். தும்மல் இயல்பாக வந்துவிடவில்லை; வேண்டு மென்றே அவன் வரவழைத்துக் கொண்டாளும். ஏன்? இவன் தும்மின சத்தத்தைக் கேட்டவுடனே, அவள் தன்னை யறியாமலே 'நூறு வயசு' என்று வாழ்த்துவா ளல்லவா? இதை முன்னிட்டு, அவளு டைய ஊடலைத் தீர்த்து, அவளைப் பேசச் செய்து மகிழலாமென அவன் எண்ணினன் என்று நாயகி சொல்லுகிருள்:

**ஊடி யிருந்தேமாத் தும்மினர்: யாம்தம்மை**
**நீடுவாழ் கென்பாக்(கு) அறிந்து.**

உண்மையில் நாயகனுக்குத் தும்மல் தற்செயலாகவே வந்தது. ஆனுல், ஊடி யிருக்கிற நாயகி இதற்கும் ஒரு காரணம் கற்பிக்கிருள். இவள் இப்படிக் கோப வெறியிலே நிற்கும்போது, பேச்சும் செயலும் அறி வுணர்ச்சிக்குப் பொருத்தமில்லாமல் இருக்கின்றன.

இதையொட்டி, இவளுடைய நாயகன் என்ன சொல்கிருன் என்பதையும் மேலே பார்ப்போம்.

காலையில், அவன் தன் தோழனிடத்து உரை யாடிக் கொண்டிருக்கிருன். தான் தும்மினதை ஒப் புக்கொள்ளுகிருன். ஏதோ ஒரு தும்மல் இயற்கை யாக வந்தது, தும்மினுன். அவள் என்ன செய்தாள்?

**வழுத்தினுள் தும்மினே ளுக;**

தும்மினவுடன், இயல்பாக, நினைவில்லாமலே 'தீர்க்காயுசு' என்று சொல்லி வாழ்த்தினாளாம். இதனோடு நின்றாளா? இல்லை. இந்த வார்த்தைகள், தும்மல் சத்தம் கேட்டவுடன், மெய்ம்மறந்த நிலையில் அவளிடமிருந்து வெளிப்பட்டன. அடுத்த கணத்தில் மீண்டும் அவளுக்குக் கோபவெறியே மேலிட்டது. "என்னையன்றி வேறு யாரோ ஒரு பெண்ணிடத்து நீ அன்பு செலுத்துகிறாய்போலத் தோன்றுகிறது. அப்பெண் உன்னை இப்போது நினைப்பதனா லல்லவா உனக்கு இங்கே தும்மல் வந்தது?" என்று கேட்கிறாள். அவனை வாழ்த்தின வாழ்த்தெல்லாம் பறந்துபோய் விட்டது. இந்த மனோபாவத்தோடு அவள் அழத் தொடங்கி விட்டாளாம்:

**வழூத்தினாள் தும்மினே னாக; - அழித்தழுதாள்,**
**'யாருள்ளித் தும்மினீர்' என்று.**

அழத் தொடங்கியபோது, "வேறு ஒரு பெண் உன்னை இப்போது நினைப்பதனா லல்லவா, நீ தும்மினாய்?" என்று நாயகி சொன்ன சொற்கள், வாழ்த்தின தருணத்தில் அவளுக்கிருந்த அன்போடு கூடிய ஒரு மனோபாவத்தை அப்படியே துடைத்து அழித்து விட்டது போல இருந்ததாம் நாயகனுக்கு. "அழித் தழுதாள்" என்று அவன் சொல்வது இவ்வளவையும் தெளிவாகக் காட்டுகிறது.

நாயகி இவ்வாறு குற்றஞ்சாட்டக் கேட்ட நாயகனுக்கு எப்படி யிருக்கும்? இவனும் அவளிடத்து ஒத்த அன்புடையவன். கோபவெறியிலே அவள் சொல்லிய இந்தச் சொற்களைக் கேட்டு, மிகவும் துன்பப்படுகிறான். அப்போது இன்னொரு தும்மல் வந்தது. இந்தப் பாழுந் தும்மலே இப்படித்தான்; வரவேண்டாத சமயத்தில் ஒன்றுக்கு இரண்டாகச் சேர்ந்து வந்துவிடும். நாயகனும், எவ்வளவோ கஷ்டப் பட்டு, வந்த தும்மலை வெளிப்படவொட்டாமல் அடக்கி விட்டான். சத்தம் வெளிப்படவில்லையே ஒழிய,

தும்மலை யடக்க இவன் பட்ட பாடு நாயகி கண்ணில் பட்டேவிட்டது. வெறும் வாயை மெல்லுகிறவளுக்கு அவல் கிடைத்துவிட்டால் கேட்கவேண்டுமா? இவனுடைய செய்கையானது, அவள் சாட்டின குற்றத்தை அவன் ஒப்புக்கொண்டு, அதை மறைக்க முயல்வதுபோல, அவளுக்குத் தோற்றியது. இதைச் சுட்டிக்காட்டி மறுபடியும் அழுதாளாம்:

**தும்முச் செறுப்ப அழுதாள்: 'நுமர்உள்ளல்**
**எம்மை மறைத்திரோ?' என்று.**

**தும்மு - தும்மல். செறுப்ப - அடக்க. நுமர் - உன் காதற் பெண். உள்ளல் - நினைத்தல்.**

தும்முவதை மறுபடியும் கண்டால், நாயகி இன்னும் எதையாவது நினைத்து ஊடுவாள் என்று நாயகன் கருதி, வந்த தும்மலை அடக்கினான். இதுவே நாயகிக்குப் பின்னும் கோபம் விளைக்கப் போதுமானதாயிற்று. "உன் அன்புக்குப் பாத்திரமான பெண் ஒருத்தி உன்னை நினைக்கிறாளென்பதை நான் அறியக் கூடாதென்று எண்ணி யல்லவா, வந்த தும்மலை நீ தடை செய்கிறாய்?" என்று கேட்டுவிட்டு, மறுபடியும் நாயகி அழுகிறாள்.

ஓர் அற்ப காரணத்தினாலே, அன்பும் கோபமும் சேர்ந்த ஒரு வெறியில், நாயகியின் மனம் எங்கெங் கெல்லாம் ஓடுகிறது என்பதை இந்தப் பாடல்களில் கண்டோம். நாயகன் காலந் தாழ்த்து வந்தான் என்ற காரணத்தால், நாயகி எவ்வளவோ செய்திகளைக் கற்பனை செய்துகொள்ளுகிறாள். அவள் செய்யும் கற்பனைகளுக் கெல்லாம் இடங் கொடுப்பது ஒரு தும்மல்.

தும்மலை யொட்டி இவ்வளவு காரியங்களும் இன்றும் நடக்கக்கூடியவையே. நமக்கு வேண்டியவர்கள் நம்மை நினைக்கும்போது நமக்குப் புரையேறும் என்பது இப்போதுள்ள நம்பிக்கை; தும்மல்

வரும் என்று திருவள்ளுவர் கூறுகிறார். இவ்வளவே வித்தியாசம். மற்றப்படி, தும்மினால் வாழ்த்துவது இன்றும் உண்டென்பதை மேலே கண்டோம். இவற்றை நாம் பார்க்கப்போனால், உணர்ச்சியும் மனோபாவமும் சம்பந்தப்பட்ட மட்டில், மக்கள் இன்று இருப்பது போலவேதான் பல்லாயிரம் ஆண்டு களுக்கு முன்னும் இருந்திருக்கிறார்கள் என்பது தெரி கிறது. மக்களுடைய அறிவு அன்று முதல் இன்று வரை கிரமமாக விருத்தி யடைந்திருக்கலாம். ஆனால், உள்ளத்திலே நிகழும் நிகழ்ச்சிகள், அன்பினாலும் கோபத்தினாலும் எண்ணும் எண்ணங்கள், செய்யும் செயல்கள் இவை யாவும் அன்றிருந்தவை போலவே தான் இன்றும் இருக்கின்றன.

சிந்தித்துப் பார்க்கும்போது, இவற்றிலே பெரிய பொருள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இப் படிப்பட்ட நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் பயனற்ற காரியங்கள் என்று சொல்லிவிடலாம் போலத் தோன்றுகிறது. ஆனால், நம் வாழ்க்கையை நயம்பட நடத்தவும், அதிலுள்ள சிறு விஷயங்களி லும் சுவையையும் அழகையும் கண்டு மகிழவும் இந்த நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களுமே பேருதவியா யிருக்கின்றன வென்பதில் ஐயமில்லை.

## 6. சிறு நெருஞ்சில்

வீட்டிலே துக்க சம்பவங்கள் நேரும்போது நம் நாட்டுப் பெண்கள் ஒப்பாரி சொல்லிப் புலம்பு வதைக் காண்கிறோம். இக் காலத்துப் புதுநாகரிகத் தில் பெரிதும் தோய்ந்திருக்கிற குடும்பங்களிலே இதை அவ்வளவாகக் காண முடியாது. கர்நாடகமான பட்டிக்காட்டுக் குடும்பங்களிலுள்ள பெண்களிடத் திலேயே ஒப்பாரி சொல்லுகிற பழக்கத்தையும் அதில் திறமையையும் காணலாம். எந்தப் பாடசாலை யிலும் அவர்கள் தமிழ்ச் சொற்களைப் படித்துக் கொள்ளவில்லை; யாப்பிலக்கணம் அவர்களுக்குத் தெரியாது; எதுகை மோனை முதலியவற்றின் பெயர் கூடத் தெரியாது. ஆனால், அவரவர்களுக்கு நெருங் கிய உறவினர் இறந்துபோன சந்தர்ப்பங்களில் அவர் கள் ஒப்பாரி சொல்லுகிற பாங்கைப் பார்த்தால், எந்த ஆசிரியரிடம் இவர்கள் யாப்பிலக்கணமும், எதுகை மோனை விதிகளும் கற்றார்களென்று நாம் அதிசயிக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் சொல்லு கிற ஒப்பாரிப் பாட்டுக்கள் அவ்வளவு பொருத்த மான செய்யுள் நடைபெற்றும் எதுகையும் மோனை யும் எளிதாக அமைந்தும் இருக்கின்றன.

உண்மையான வாழ்க்கை யனுபவம் என்ற பள்ளியிலேதான் பெண்கள் இந்தத் திறமை யெல்லாம் படித்துக் கொண்டார்கள் என்று சுருக்க மாகச் சொல்லிவிடலாம். வாழ்க்கையிலுள்ள நன்மை தீமைகளையும் இன்ப துன்பத்தையும் இதயத்தோ டொட்டி அனுபவிக்கின்ற ஓர் எளிய இயல்பு காரணமாக, அவர்களுக்கு இவ்வளவும் கைவந்திருக் கிறது.

இவற்றை யெல்லாம் ஓரளவுக்குக் கேட்டு இன்புற்றுச் சிந்தித்துப் பார்த்தவர்களுக்கே இதிலுள்ள உண்மை புலப்படும். மற்றவர்களுக்கு, அவ்வளவும் பயனற்ற காரியமாகவே படும்; ஒப்பாரியைப்பற்றிப் பேசுவதே பைத்தியக்காரர் செயல் என்று தோன்றினாலும் வியப்பில்லை.

எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த இரண்டு வரிகள். இவற்றில் இதய பாவம் எவ்வளவு உருக்கமாக வெளிப்படுகிறது என்பதைச் சிறிது பார்த்தால், மேலே கூறியவற்றின் உண்மை புலப்படும்.

ஒரு சிறிய கிராமம். அதில் பிரபு ஒருவர் இருந்தார். பரோபகாரமே உருவெடுத்து வந்தது என்று சொல்லத் தக்கவர். தம்முடைய உறவினர் உறவினரல்லாதவர், செல்வமுள்ளவர் இல்லாதவர், வேண்டியவர் வேண்டாதவர் என்ற வேற்றுமை பாராட்டாத இயல்புள்ளவர் அவர். யார் யாருக்கு என்னென்ன வேண்டுமோ அதைக் கொடுத்து உதவுவார். எந்தப் பிரதிபலனையும் எதிர் பார்க்க மாட்டார். அவ்வூர்ப் பாடசாலையில் படித்த சிறு பிள்ளைகளில் பாதிப் பேருக்கு இவரே சம்பளம் கொடுத்தார்; ஊரில் நடந்த கலியாணங்களுக்கும் இவரே செலவு செய்தார்; சாப்பாட்டுக்கு இல்லாத குடும்பங்களுக்கு, இவரே வண்டி வண்டியாக நெல் அளந்து கொடுத்தார். இப்படியாக இவரைச் சூழ்ந்துள்ள மக்கள் இவருடைய அருங்குணங்களைப் பல வகைகளிலும் பயன்படுத்திக்கொண்டு வந்தார்கள். இவர் வீட்டில் ஒவ்வொரு வேளையும் கணக்கற்ற நண்பர்களும் சுற்றத்தாரும் கலந்து உண்பார்கள். வீடு, கலியாண வீடுபோல எப்போதும் கூட்டமும் ஆரவாரமும் இருக்கும்.

ஒரு நாள் இந்த வள்ளலுக்குக் காய்ச்சல் கண்டது. நல்லார் பொல்லார் என்ற வித்தியாசம் காலனுக்கு இல்லையல்லவா? எவ்வளவோ வைத்தியம் பண்ணியும் பயனில்லை. மறுநாள் இறந்துபோனார். ஊரார் எல்லோரும் பெரிதும் வருந்தினார்கள். இறந்த

வருடைய மனைவியிடமும் புதல்வனிடமும் மிக்க அனுதாபங் காட்டினர். ஈமக்கிரியைகள் நடந்தேறின. ஒரு மாதமாயிற்று. பையன் படித்துக் கொண்டிருந்த பள்ளிக்கூடம் விடுமுறை முடிந்து, புது வருஷம் ஆரம்பமாயிற்று. சம்பளம் கட்டவேண்டி யிருந்தது. பையன் தாயாரைக் கேட்டான். தாயின் கையில் பணமில்லை; ஆனால், 'இதென்ன பிரமாதம்! பணம் நமது கையில் இல்லாவிட்டால் என்ன? எத்தனையோ பேருக்கு உன் தகப்பனார் கணக்கற்ற பொருள் கொடுத்துதவி யிருக்கிறார்கள். யாரையாவது கேட்டால், வேண்டிய பணம் வருகிறது' என்றெண்ணினாள். மகனைக் கூப்பிட்டு, "பக்கத்து வீட்டு மாமாவுக்கு அப்பா போனமாதம் பத்து ரூபா கொடுத்தார்கள். அதைக் கேட்டு வாங்கிக் கொண்டுவா" என்றாள். பையன் சென்று, இதைச் சொல்லிக் கேட்டான். ஆனால் அந்த மனிதரோ, "உங்கப்பா என்னிடம் பணம் கொடுக்கவில்லையே" என்று கையை விரித்து விட்டார். பையன் வந்து தாயாரிடம் இதைத் தெரிவித்தான். கேட்ட தாய்க்கு ஏமாற்றமாயிருந்தது.

"என்ன இது, அந்த மனிதர் நம் வீட்டுக்கு வந்து, என் எதிரிலேதானே பணத்தைக் கை நீட்டி வாங்கினார். இப்போது இல்லை என்கிறாரே!" என்று வருத்தப்பட்டாள். பிறகு தேறி, இவர் ஒருவர் மோசம் செய்தாலும், மற்றவர்கள் யோக்கியமாயிருப்பார்கள் என்றெண்ணி, "கோடி வீட்டுத் தாத்தாவுக்கு இரண்டு மாதத்துக்குமுன் உன் தந்தை பணம் கொடுத்திருக்கிறார்கள். கிஸ்தி கட்ட அவரிடம் பணம் இல்லையென்று சொல்லி, உன் அப்பாவே முப்பது ரூபாய் பணம் கட்டினார்கள். அதில் பத்து ரூபாய் வாங்கிக் கொண்டுவா" என்று சொல்லி மகனை அனுப்பினாள். ஆனால், தாத்தாவோ, "பணமாவது, கிணமாவது! உங்கப்பன் கிட்டே மறுநாளே நான் திருப்பிக் கொடுத்து விட்டேன்" என்று சொல்லி விட்டார். கேட்ட பையனுக்கு இவர்

சொல்லியது முழுமோசமென்று தெரிந்தபோதிலும், என்ன செய்வது? துணிந்து ஒரு கேள்வி கேட்டான்: "தாத்தா, நீங்கள்தான் கடனாக ஒரு பத்து ரூபாய் கொடுங்களேன், இரண்டு மாதத்தில் அம்மா திருப்பிக் கொடுத்து விடுவார்கள்" என்று. "போடா, பயலே, உனக்குக் கடன் கொடுக்கத்தான் நான் பணம் வைத்திருக்கிறேன் என்று நினைத்தாயோ?" என்று சொல்லிக் கிழவர் அவனை வெருட்டிவிட்டார். பையன் போய்க் கேட்ட வேறு சில இடங்களிலும் இதே மறுமொழிதான் வந்தது.

இதை யெல்லாம் கேட்ட அந்த அம்மாளுக்கு மனம் இடிந்துவிட்டது. 'ஐயோ, உலகம் இவ்வளவு கொடியதா? நண்பர், உறவினர் எனப்படுவோர் இவ்வளவு பொல்லாதவர்களா? கொஞ்ச நாளைக்கு முன்தானே எல்லோரும் இங்கு வருவதும் பேசுவதும் உண்பதும் போவதுமா யிருந்தார்கள்! எத்தனை பேர் நம் நாயகனிடம் இரந்து உதவி பெற்றிருக்கிறார்கள்? ஆனால், அவர் தலை மறைந்தவுடன், இன்றுள்ள நிலை என்ன? ஒருவரிடமாவது சிறிதளவு விசுவாசம் இல்லையே! எல்லோரும் பகைவர்போலல்லவா பேசுகிறார்கள்! இப்படிப்பட்ட மக்களிடையில் நாம் ஒண்டியாய் எப்படிக் காலங்கழிக்க முடியும்? இனி நம் வாழ்நாள் முழுதும் இதே மாதிரித் துன்பந் தானோ!' என இவ்வாறெல்லாம் எண்ணி விசாரப்படலானாள்.

விசாரத்தில் ஆழ்ந்திருந்த போது, அவளுக்கு ஒரு நிலைமை ஞாபகத்துக்கு வந்தது.

மாலை வேளை. இருட்டும் சமயம். ஒரு பெண் தன் நாயகனுடன் தனியே செல்கிறாள். போகிற வழியோ ஒற்றையடிப் பாதை. இருபுறமும் பச்சைப் பசேலென்ற புல்வெளி. மங்கலான வெளிச்சத்தில், புல்வெளி முழுதும் கரு நிறமாகத் தோற்றுகிறது. இடையில் நெருக்கமாக நட்சத்திர வடிவமுள்ள சிறிய பூக்கள் தெரிகின்றன. இவை மஞ்சள் நிற முடைய சிறுநெருஞ்சிற் பூக்கள். இருள் வரவர அதிக

மாகிக் கொண்டிருக்கும் அந்தத் தருணத்தில், இப் பூக்கள் மட்டும், சுற்றியுள்ள புல், நெருஞ்சில் செடி முதலியவற்றின் கரு நிறத்தினின்றும் வேறுபட்டுப் பிரகாசமாய்த் தெரிகின்றன. 'இப்புறம் வா' என்று அன்போடு அவளை அழைப்பது போல இருந்தன அப் பூக்கள். இந்தக் காட்சியில் ஈடுபட்டு அவள் நின்ற போது, "சிறிது பொறு, இதோ வந்துவிட்டேன்" என்று கூறிவிட்டு, அவள் நாயகன் அப்பாற் சென்றான். சிறிது நேரமாயிற்று. அவன் வரவில்லை. பின் தொடர்ந்து போகலாமென்றாலோ, இருள் சூழ்ந்து கொண்டது. பாதையும் புலப்படவில்லை. உடனே அவள் மனதில் ஒரு திகில் ஏற்பட்டது; இருந்தாலும், மறு கணமே ஒரு தெளிவு உண்டாயிற்று. தன் நாயகன் கொஞ்ச தூரம் தானே போயிருக்கக்கூடும்? வழி தெரியாவிட்டாலுங்கூட, இரண்டடி விரைந்து சென்றால், நாயகனை அணுகி விடலாமல்லவா என்றெண்ணினாள்.

இந்த எண்ணத்தோடு, இருளில் விரைந்து ஓரடி எடுத்து வைத்தாள். பாதம் நிறைய முட்கள் நறுக்கென்று ஏறிவிட்டன. 'அப்பாடா' என்று மற்றொரு காலையும் எடுத்து அப்புறம் வைத்தாள். அங்கும் முட்கள். நாலா பக்கத்திலும் எங்கே அடியெடுத்து வைத்தாலும், முட்கள் தைக்கத் தயாராய்க் காத்துக் கொண்டிருந்தன. இதைக் கண்ட பெண்ணின் மனம் என்னபாடு படும்? பாதையின் இரு புறமும் 'சில்'லென்று பூத்திருந்த பூக்கள் என்ன அழகாயிருந்தன! இப்போது, பூ தானே என்று அவற்றை நம்பினால், அவற்றினடியில் எவ்வளவு கொடிய முட்கள் இருக்கின்றன! இவற்றின் கொடுமை இதுவரை தெரியவில்லையே! இவை முன்னிருந்தனவென்றே புலப்படவில்லையே! இப்போது சுற்றிலும் வெறும் முட்களாயிருப்பதாக அல்லவா தோற்றுகிறது!

நாயகனை யிழந்து வருந்திய அந்த அம்மாள், உலகத்தாரின் இயல்பு இவ்வளவு கொடியதாயிருக்

கிறதே என்று எண்ணின மாத்திரத்தில், இவ்வித மான ஒரு பாவம் அவள் மனதில் உண்டாயிற்று. முன்னமே ஏற்பட்டுள்ள ஆற்ற முடியாத துயரத் தோடு இந்த பாவமுங் கலந்தது. அப்போது புலம்பு கிருள் :

சில்லென்று பூத்த
சிறுநெருஞ்சிற் காட்டூடே—

என்ற வார்த்தைகளால் அவள் மனதிலுள்ள சோகம் வெளிப்பட்டது. "சில்லென்று பூத்த" என்றவுடன், நுட்பமான பூக்கள் அடர்ந்து பூத்திருக்கும் பரந்த காட்சி அப்படியே ஞாபகத்துக்கு வருகிறது. இதை நினைப்பதற்குள்ளாகவே, "சிறு நெருஞ்சிற் காட்டூடே" என்ற வார்த்தைகள் தொடர்ந்து வருகின் றன. மேலே நாம் அனுபவித்த அழகு பொருந்திய தோற்றம் போலிதான், உண்மை வடிவம் வேறு, அது முட்கள் நிறைந்தது என்று சொல்வது போலிருக் கின்றன, 'சிறு நெருஞ்சிற் காடு' என்னும் சொற் கள். 'காட்டூடே' என்று சொல்லும்போது, அதைச் சொல்லிய பெண் தன் துயரத்தைப் பின் வரப் போகும் சொற்களில் தொடர்ந்து சொல்லப் போகி ருள் என்று தொனிப்பதோடுகூட, பின்னுலுள்ளது துன்பந்தான் என்பதும் புலப்படுகிறது. அவள் மேலே சொல்லுகிருள் :

நில்லென்று சொல்லி
நிறுத்திவழி போனீரோ !

என்று புலம்புகிருள். 'நில்லென்று' என்ற தொடர் எதுகையில் அமைந்திருப்பதால், அதிக வலிபெற்று, நிலையான துக்கத்தில் அவள் நிறுத்தப் பட்டிருக்கி ருள் என்பதை எவ்வளவு தெளிவாய்க் காட்டுகிறது! 'நில்லென்று சொல்லி நிறுத்தி' என்ற சொற்கள், அவளுடைய துயரம் அதிகந்தான், மிகக் கொடியது தான் என்ற உணர்ச்சி யுண்டாகச் செய்கின்றன. உண்மையான பாவம், நிறைந்த உணர்ச்சி இருந்தால்

தான் சொற்களிலே இவ்வளவு தெளிவையும் சோகத்தையும் காட்ட முடியும். நாயகன் வாழ்ந்த காலத்தில், மலர்ந்த பூக்களைக் கொண்டு தன்னைப் பிரியமாய் வருந்தியழைத்த நெருஞ்சில் போல, நண்பரும் உறவினரும் அன்போடிருந்தார்கள். ஆனால் அந் நிலையிலும், நெருஞ்சில் முள்போல, தங்கள் உள் ளன்பின்மையையும் மறைத்து வைத்திருந்தார்கள் போலும்! நாயகன் பிரிந்தபின், வழிதெரியாமல் திகைக்கும் பெண்ணைத் துன்புறுத்தும் முட்கள் போலவே, அவ்வுறவினரும் நண்பரும் பகைவராய் விட்டார்கள். இந்த ஆழ்ந்த உணர்ச்சி,

> சில்லென்று பூத்த
> சிறுநெருஞ்சிற் காட்டூடே
> நில்லென்று சொல்லி
> நிறுத்திவழி போனீரோ

என்ற இந்த வரிகளின் மூலம் எவ்வளவு தெளிவாக வெளிப்படுகிறது! இதைச் சொல்லும்போது, அந்த அம்மாள் நின்ற சோகநிலையில் நாமும் நின்று, அவள் அனுபவித்த துயரத்தை நாமும் அனுபவிப்ப தாக உணர்கிறோம்.

இந்தப் பாட்டு வெறும் புலம்பல், ஓர் ஒப்பாரி, அவ்வளவே. ஆனால், இதிலிருந்து எழும் உணர்ச்சி யானது கேட்பவர்களின் இதயத்தில் அப்படியே ஒட்டிக்கொள்ளுகிறது. உண்மையான பாவமும் அழுத்தமான உணர்ச்சியும் இருந்து பாட்டின்மூலம் வெளிப்படும்போது, அப்பாட்டு கேட்போர் இதயத் தில் தாக்கி, அங்கேயும் அதே போன்ற உணர்ச்சியை உண்டாக்க முடிகிறது. பாட்டு உயர்ந்த கவியாக இருக்க வேண்டுமென்பதில்லை. சாதாரணமான இந்த ஒப்பாரியே பிறருடைய உணர்ச்சியைத் தட்டி எழுப்ப வல்லதாயிருக்கிறது.

தொடக்கத்திலே சொல்லிய உண்மையை இந்த வரிகள் செவ்வையாக விளக்குகின்றன. இப்படிப் பட்ட உணர்ச்சி நிறைந்த ஒப்பாரி பெண்களிட மிருந்து எளிதாக வருவதை நாம் பார்க்கிறோம். இதை யெல்லாம் கவனிக்கும் போது, ஆண்களை விடப் பெண்களே உணர்ச்சியென்ற பிரபஞ்சத்தில் அதிகமும் சஞ்சரிக்கிறார்கள் என்பது தெரியவரு கிறது. உண்மைகளை இதயத்தோடு ஒட்டி அவர்கள் சுலபத்தில் உணர்ந்து விடுகிறார்கள். அதனாலேயே பாவம் நிறைந்த சொற்கள் இவ்விதமாக அவர்கள் பேச்சில் வருகின்றன. பார்ப்பவர்கள் இதை மிகச் சாமானியமென்று கருதலாம். உண்மை அதுவன்று. பெண்களைப்போல எளிதில் ஆண்கள் உணர்ச்சி வசமாவதில்லை. வீட்டுக் காரியங்களைக் கவனிப்பதில் பெண்களுக்கு உண்மையுணர்ச்சி ஏற்படுகிறது. குழந்தைகளுக்குச் சாதம் ஊட்டுவது, தலை பின்னு வது, அலங்கரித்துக் குழந்தைகளைப் பள்ளிக்கூடத் துக்கு அனுப்புவது, குழந்தைக்குக் கால்வலி, தலைவலி யென்றால் இராப்பகலாய்க் கண்விழித்துத் தம்மை மறந்து அதற்குப் பணிவிடை செய்வது, விருந்தின ருக்கு அன்னமிடுவது முதலிய சாதாரண வீட்டுக் காரியங்களைச் செய்யும்போது, ஒவ்வொன்றிலுமே அவர்கள் தங்கள் முழுமனதையும் செலுத்துகிறார் கள். 'நான்' என்பதை மறந்துவிடுகிறார்கள். அது காரணமாக, நன்மையையும் தீமையையும் இதயத் தோடு ஒட்டி அனுபவிக்கிறார்கள். ஆண்களோ, உலக விவகாரங்களில் அதிகமாக ஈடுபடுவதால், உண்மையான உணர்ச்சியை நேர்முகமாகப் பெறு வதில்லை.

இந்த உண்மையைக் கவிஞர் தாகூர் வெகு அழகாகக் கூறியிருக்கிறார். அவருடைய கருத்தைச் எடுத்துக் காட்டினால் போதும்:

"அன்பு, ஆதரிப்பு, பராமரிப்பு—இவையே பெண்ணுக்குரிய வேலைகளா யிருந்திருக்கின்றன,

இவற்றிலே அவள் பெற்ற திறமையை அவள் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் செயலிலும் காணலாம். பெண்ணின் மனமும் செயலும், மலரும் மணமும் போல, பிரிக்கமுடியாதபடி ஒன்ருகிவிட்டன. தாய்மை என்ற ஒரு தத்துவம் அமையுமாறு பெண் படைக்கப்பட்டிருக்கிருள். ஆடவனுக்கு அத்தகைய அமைப்பொன்றும் இல்லை. ஆகவே, அவள் பூரண உண்மையழகைப் பெறுவதைப் போல இவனுல் பெற முடிகிறதில்லை.''

## 7. சாட்டையிலாப் பம்பரம்

பம்பரம் என்ருல் இப்போது சிறு பிள்ளேகள் எல்லோருக்கும் தெரியும். விதம்விதமான பம்பரங்களே ஜப்பான்காரன் கொண்டுவந்து நம் நாட்டில் குவித்துவிட்டான். காலணுமுதல் ஒருரூபாய் இரண்டு ரூபாய் வரையில், என்ன விலேக்கு வேண்டுமாஞலும் இந்தப் பம்பரம் கிடைக்கிறது. இது எதஞல் செய்யப்பட்டிருக்கிறது? வெறுந் தகரக் கூடொன்று; அதன் மேலே பல வர்ணங்கள் அழகாகப் பூசப்பட்டிருக்கின்றன. உட்புறத்திலே ஒரு கம்பி வில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த வில்லே முடுக்குவதற்காக வெளிப்புறத்தில் ஒரு விசை. எல்லா வகை ஜப்பான் பம்பரமும் இவ்வளவே தான்.

இந்தப் பம்பரங்களின்மேல் நம் சிறு பிள்ளேகளுக்கு அதிகப் பிரியம் உண்டா என்று கேட்டால், இல்லேயென்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. பம்பரம் வாங்கினவுடனே, ஆரம்பத்தில் சில நாள் வரையில், குழந்தைகள் எந்நேரமும் பம்பரமும் கையுமாக இருப்பார்கள். பம்பரம் சுற்றுகிற அழகையும் அதன்மேலுள்ள வர்ண வேலேப்பாட்டையும் கண்டு மகிழ்ந்து வருவார்கள். கொஞ்ச நாள் ஆயிற்ருே இல்லேயோ, இந்தப் பம்பரத்தைத் தேடுவார் கிடையாது. பார்க்கப்போனுல், ஒரு பம்பரத்துக்கும் மற்ருெரு பம்பரத்துக்கும் என்ன வித்தியாசம்? எல்லாம் ஒரே மாதிரியான அமைப்பு. யார் விசையைத் திருகின போதிலும், பம்பரம் சுற்றத்தான் சுற்றுகிறது. பம்பரத்தை வாங்கின பையன் தன் கைவரிசையைக் காட்ட இதில் இடமே இல்லே. ஆகவே, இதனிடம் பையனுக்கு நீடித்த மோகம் இருப்பதில்லே.

ஆனால், பழமையான நம்முடைய நாட்டுப் பம்பர மிருக்கிறதே, வெறுங் கட்டைப் பம்பரம், அது இப் படியன்று. தலை அகன்று, அடிவரையில் கரைவாய்ச் சரிந்துவந்து, நுனியில் குறுகலாயிருக்கும். நுனியில் ஓர் ஆணி. இவ்வளவு தான். வர்ண வேலைப்பாடு, விசை முதலியன ஒன்றும் கிடையாது. விசையெல் லாம் பையன் கையில் இருக்கிறதேயொழிய, பம்பரத் தில் ஒன்றும் இல்லை. இதனால்தான் பிள்ளைகளுக்கு இந்தக் கட்டைப் பம்பரத்தினிடத்திலே இவ்வளவு மோகம். பம்பரத்தில் சாட்டையைச் சுற்றுவதிலும், அதை ஓங்கித் தரையில் அடிப்பதிலும், வீசி ஆகாயத் திலே சுற்றும்படியாக எறிந்துவிட்டுக் கையிலே ஏந் திக்கொள்வதிலும், ஒரு பையன் எவ்வளவோ கைத் தேர்ச்சி பெற்றிருக்கிறான். அவனுக்குச் சொந்த மான பம்பரத்தையும் கயிற்றையும் வேறொரு பைய னிடம் கொடுத்து, விடச் சொன்னாலும், அவனுக்கு இந்தப் பம்பரம் சொன்னபடி கேட்காது. ஆகவே, பம்பரத்தையுடையவனுக்கு அதனிடத்திலே ஒரு பிரியமும் அதனாலே பெருமையும் உண்டல்லவா?

கொஞ்ச காலத்துக்கு முன்னே, ஜப்பான் பம்ப ரத்தை ஒருவரும் பார்த்திருக்க மாட்டார்கள். கிரா மங்களில் எங்குமே நாட்டுப்புறத்து மரப் பம்பரந் தான் பிள்ளைகளுக்கு விளையாட உதவியாயிருந்தது. இந்தப் பம்பரத்தை நாட்டுப்புறங்களில் காணலாமே யொழிய, பட்டணங்களிலே காணமுடியாது.

தஞ்சாவூரிலிருந்து ஒருவர் பம்பாய்க்குப் போய் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய மகனொருவன், பத்து வயதுப் பையன், பம்பாயிலேயே பிறந்து வளர்ந்தவன். தமிழ் நாடென்றாலும் நாட்டுப் புறமென்றாலும் அவனுக்குக் கொஞ்சமும் தெரியாது. பையனுக்குக் கோடை காலத்தில் பள்ளிக்கூடம் விடு முறைவிட்டபோது, அவனுடைய தகப்பனார் இரண்டு மாத காலம் ஓய்வு பெற்று, அவனையும் அழைத்துக் கொண்டு வந்து, தம் கிராமத்தில் தங்கி யிருந்தார். கிராமத்திலுள்ள சிறுவர்களையும் அவர்களுடைய

விளையாட்டுக்களையும் பார்த்தபோது, அவனுக்கு எல்லாம் வேடிக்கையாகவும் எல்லாம் புதிதாகவும் இருந்தது.

ஒரு நாள் இவன், மற்றச் சிறுவர்களோடு சேர்ந்து, ஒரு வீட்டுக் கொல்லையில் விளையாடிக் கொண்டிருந்தான். தெருவிலே ஏதோ, 'புர் புர்' என்று சத்தம் கேட்டது. எல்லாப் பிள்ளைகளும், "பெருமாள் மாட்டுக்காரன் வந்திருக்கிறான்" என்று சொல்லிக்கொண்டு, வேடிக்கை பார்க்க ஓடினார்கள். பம்பாய்ப் பையனும், எல்லாருக்கும் கடைசியாக ஓடி வந்தான். தெருவை நோக்கி வீட்டுவழியாக ஓடிய போது, முற்றத்திலே ஓர் அதிசயத்தைக் கண்டான்.

முன்னால் ஓடிவந்த பையனொருவன், தன் மடியில் வைத்திருந்த பம்பரத்தை எடுத்துச் சுற்றி விட்டு விட்டு, வேடிக்கை பார்க்கத் தெருவுக்குப் போய்விட்டான். தன் பம்பரம் ஐந்து நிமிஷமாவது சுற்றிக் கொண்டிருக்கும், அதற்குள் வேடிக்கை பார்த்து விட்டுத் திரும்பிவிடலாம் என்று அவனுக்குத் தெரியும். அவன் போன பிறகு, பம்பரமானது, வழ வழ வென்று மெழுகிவிட்ட தரையிலே பெரிய வட்டம் இரண்டொன்று போட்டுவிட்டு, ஒரே இடத்தில் நின்று ஆனந்தமாக 'உறங்கிக்' கொண்டிருந்தது. பின்னால் வந்த சிறுவர்கள் அத்தனை பேரும் இதைப் பார்த்துக் கொண்டே தெருப்பக்கம் போய்விட்டார்கள். அவர்களுக்கு இதிலொன்றும் அதிசயமில்லை. கடைசியில் வந்த பம்பாய்ப் பையன் மட்டும் இதைக் கண்டு அதிசயித்து நின்று விட்டான். அவன் இந்த மரப் பம்பரத்தைப் பார்த்ததே இல்லையல்லவா? இது என்னவென்று விளங்கவில்லை. சிறு பையனல்லவா? "இதென்னடா இது, தானாக இப்படிச் சுற்றுகிறதே! ஏன் இப்படிச் சுற்றுகிறது? ஏதாவது அபூர்வப் பிராணியோ?" என்று யோசிக்கத் தொடங்கினான். இது தானாகச் சுற்றுகிறதா, அல்லது யாராவது சுற்றி விட்டார்களா? யாராவது சுற்றி விட்டிருந்தால், அதற்கான அடையாளம் ஒன்றும் காணோமே? –

என்றெல்லாம் அதிசயித்தான். பம்பரத்துக்குடைய வன் அதைச் சுற்றி விட்டதை இவன் பார்க்கவில்லை யல்லவா? அதனாலே இவ்வளவு அதிசயம். தெரு விலே பெருமாள் மாட்டுக்காரன் வந்ததையும் மறந்து நின்று பார்த்துக் கொண்டேயிருந்தான்.

இதற்கிடையில் பெருமாள் மாட்டுக்காரன் பக் கத்து வீட்டுக்குப் போய் விட்டான். வேடிக்கை பார்த்த பிள்ளைகளும் திரும்பிவந்தார்கள். பம்பரத் துக்குடையவனும், திரும்பி வந்து, சுற்றிக் கீழே விழப்போகுந் தருணத்திலிருந்த தன் பம்பரத்தை எடுத்து மடியில் கட்டிக்கொண்டு, விளையாடுவதற் காகக் கொல்லைப் பக்கம் போய்விட்டான். பம்பாய்ப் பையனுக்கு இன்னும் அதிசயம் நீங்கினபாடில்லை. அந்தப் பம்பரம் எப்படிச் சுற்றிற்று, ஏன் சுற்றிற்று என்று தெரியவில்லை. மற்றப் பிள்ளைகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவும் வெட்கம். கொஞ்சம் 'நாகரிகம்' பெற்ற பையனல்லவா?

இந்தச் சிறுவனுடைய மனதில் உண்டான அதி சயத்தை நாமும் சற்று உணர்ந்தோமானால், கடவுள் சிருஷ்டி இன்னும் எவ்வளவு அற்புதமானது என்ப தையும் ஒருவாறு உணர்தல் கூடும். பம்பரத்தைக் கயிற்றினாலே மற்றொரு பையன் சுற்றிச் சுழற்றி விட் டதை இவன் பார்க்கவில்லை. அது மட்டுமன்று, இந்த விஷயம் தெரிந்தவர்கள் அதன் உண்மை என்ன வென்று சொன்னாலும், அவனுக்கு விளங்கவில்லை. அதை அவன் நம்புவதாயுமில்லை. இந்தக் கதையை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு, கடவுள் தத்து வத்தை எண்ணிப் பார்த்தால், அதை யுணர்வது எவ்வளவு கடினம் என்பது விளங்கும். கடவுள் சிருஷ்டியின் உண்மையான தத்துவம் இதைப் போன் றது தான். அதை நம்மவர்கள் நேரில் அனுபவியா மையால், தாங்கள் அதை உணர்ந்துகொள்வதில்லை. உணர்ந்த பெரிய ஞானிகள் அறிவுறுத்தினாலும், அறிந்துகொள்வதும் சிரமந்தான். கடவுள் தத்து வத்தைப் பெரிய ஞானியாகிய ஒரு கவிஞர் எவ்வாறு

அனுபவித்துச் சொல்லுகிறார் என்பதை மேலே பார்க்கலாம்.

தற்கால விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியின் துணைகொண்டு, பல வானசாஸ்திர உண்மைகளை மேல்நாட்டு அறிஞர்கள் புதிது புதிதாகக் கண்டு வருகிறார்கள். பூமியைச் சூரியன் சுற்றி வருகிறான் என்றதெல்லாம் பழங்கதை. சூரியனை எத்தனையோ கிரகங்கள் சுற்றி வருகின்றன; அவற்றுள் பூமியும் ஒரு சாதாரண கிரகம். இந்தக் கிரகங்களெல்லாம் தங்கள் தங்கள் நெறியிலே சிறிதும் பிறழாமல் எத்தனையோ யுகங்களாகச் சுற்றி வருகின்றன. இந்தக் கிரகங்களிலே பலவற்றுக்குத் தம்மைச் சுற்றுகிற உபகிரகங்களும் இருக்கின்றன. பூமியைச் சுற்றுகிற உபகிரகம் சந்திரன். இந்தக் கிரகங்களும் உபகிரகங்களும் சூரியனும் சேர்ந்தது சூரிய மண்டலம். வான சாஸ்திர வாயிலாகப் பார்க்கும்போது, இந்தச் சூரிய மண்டலத்தைப் போல எத்தனையோ மண்டலங்கள் உள்ளன வென்று தெரிகிறது. வானத்தில் நாம் காணும் ஒவ்வொரு நட்சத்திரமும் ஒரு சூரியனே யாகும். இந் நட்சத்திரம் ஒவ்வொன்றுக்கும் தனித் தனி ஒரு மண்டலமுண்டு. இந்த மண்டலங்கள் யாவும் தத்தம் நெறியிற் சிறிதும் பிறழாமல் அனுதியாகவே சுழன்றுகொண்டு வருகின்றன. இதற்குக் காரணம் யாது? ஏதோ ஓர் இயற்கை நியதி இருக்கலாம். வேறென்றும் இருப்பதாக நாம் கண்டு சொல்லிவிட முடியாது.

உலகத்திலே இன்னும் எத்தனையோ அற்புதங்களைப் பார்க்கிறோம். பருவ காலங்கள் மாறி மாறி, கடிகாரத்தில் முள் சுற்றிச்சுற்றி வருவது போலக் கிரமமாக வந்துகொண்டே யிருக்கின்றன. சித்திரை வைகாசி மாதங்களென்றால், நமது நாட்டிலே தாங்க முடியாத கடுங்கோடை. ஆடி, ஆவணி மாதங்களில் தமிழ் நாட்டிலே எங்குப் பார்த்தாலும் ஆறுகளிலே வெள்ளப்பெருக்கு. ஐப்பசி கார்த்திகை மாதங்களென்றால் கனத்த மழை. ஆயிரக் கணக்கான வருஷங்க

ளாக இப்படி நடைபெற்று வருகிறது. இதற்கு மூலம் நம்முடைய கையிலில்லை. தஞ்சாவூர் ஜில்லா செழிக்க வேண்டு மென்பதற்காக, குடகுநாட்டில் மழை பெய்கிறது. ஆடி ஆவணி மாதங்களிலே பார்த்தால், தஞ்சையில் ஒரு சொட்டு மழையிருக்காது; காவேரியில் புது வெள்ளப் பெருக்கு கரை புரண்டு வருகிறது. இது, இன்று நேற்று நடப்பதல்ல. சோழநாடு தோன்றுவதற்கு முன்னமேயே இது நடந்துவந்தது. இன்றும், இந்த இருபதாம் நூற்ருண்டிலும், இப்படியே நடந்துகொண்டு வருகிறது.

இனி சில மரம் செடி கொடிகளைப் பார்க்கலாம். கார்காலம் தோன்றிற்ருே இல்லையோ, மா முதலான பலவகை மரங்களும் ஆனந்தமாக இளந் தளிர்விட்டு, அழகாகத் தளிர்க்க ஆரம்பிக்கின்றன. தை மாசி மாதங்களில் இந்த மரங்கள் பூக்க ஆரம்பிக்கின்றன. இவை தளிர்ப்பதற்கும் பருவ காலங்கள் வருவதற்கும் உள்ள தொடர்பு நம்முடைய ஆராய்ச்சிக்கு எட்டாத தொன்று.

சூரியோதயம் ஆனவுடனே, ரோஜா, குடமல்லிகை முதலிய பலவகை மலர்கள் தோட்டத்திலே மலர்வதைக் காண்கிருேம். இவை சூரியனைக் கண்ட பிறகு மலர்கின்றனவே யொழிய வேறு எந்த நேரத்திலும் மலர்வதில்லை. பழைய இலக்கியங்களிலே தாமரையின் காதலன் சூரியனென்றும், சூரியனைக் கண்டவுடனே தாமரை மலருமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த உண்மையை இன்றும் காணலாம். இப்படியே, ஆம்பல், சூரியாஸ்தமனமான பிறகு இதழ் விரிகிறது. நித்திய மல்லிகை மாலை ஆறு மணிக்கு மலர ஆரம்பிக்கிறது. பாரிசாதம் மலர்ந்ததைக் கண்டால், இரவு மணி எட்டு என்று கணக்காய்ச் சொல்லி விடலாம்.

இவ்வாருக, இந்தப் பிரபஞ்சத்திலே எத்தனையோ பெரு நிகழ்ச்சிகளும் சிறு நிகழ்ச்சிகளும் அன்றுதொட்டு இன்றுவரை முறையாக நடந்து வருகின்றன. 'அந்தரத் தகிலகோடி தாழாமல் நிலை)ற்க

விலேயோ' என்ருர் ஒரு பெரியார். எத்தனேயோ கோடிக்கணக்கான உலகங்கள் அந்தரத்திலே நின்று இயங்குகின்றன. இவற்றின் இயக்கத்தை ஆராய்ந்து காணும்பொழுது, நம்முடைய சிற்றறிவுக்கெட்டாத ஒரு பெரிய சக்தியானது இவற்றையெல்லாம் ஆட்டி வைக்கிறது என்பதை ஒரு வகையாக உணரலாம். அந்தச் சக்தி ஆட்டிவைப்பதனுலே கிரகங்கள் தத்தம் நிலேயில் நின்று சுழன்று வருகின்றன. பஞ்ச பூதங்களும் தத்தம் கடமையைச் செய்து வருகின்றன. பருவ காலங்கள் தங்களுக்கு வகுத்த நியதிப்படி வந்து போகின்றன. ஆறுகள் பெருகி ஓடி நாட்டை வளம் படுத்துகின்றன. எத்தனேயோ ஆறுகள் தண்ணீரைக் கொண்டுபோய்க் கடலில் கொட்டிக் கொண்டே இருந்தபோதிலும், கடலானது பொங்காமல், கரையின்றித் தன் நிலேயில் அடங்கி நிற்கிறது; நிலத்தை விழுங்கிவிடவில்லே. பிரபஞ்சத்தில் படைக்கப் பட்டுள்ள யாவும், தத்தம் கடமைகளேத் தவருது செய்துவருகின்றன.

இவ்வளவையும் நாம் பார்க்கும்போது, பெரிய ஆச்சரியம் ஏற்படுவது இயல்பு. பம்பரத்தைச் சுற்றி விட்ட பையனேக் காணுமையால் பம்பாய்ப் பையன் அடைந்த ஆச்சரியத்துக்கு நம்முடைய ஆச்சரியம் சிறிதும் குறைந்ததன்று. இவ்வளவையும் ஆட்டி வைக்கிற பெருஞ் சக்தியாகிற கடவுளே நாம் அறியவில்லே. அறிந்த மெய்ஞ்ஞானிகள் சொல்லும் போதும், அது மெய்யென்று நமக்குப் புலனுவதில்லே.

சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன், திருக்குற்ருலத்துக்கு அருகில் வாழ்ந்தவர், திரிகூட ராசப்பக் கவிராயர் என்ற புலவர். அவர், நாள் தவருமல் திருக்குற்ருலம் சென்று, குற்ருலநாதரைத் தரிசித்து, அவரிடத்திலே விளங்கிய கடவுள் தத்துவத்தைக் கண்டனுபவித்து அதிலே திளேத்தவர். குற்ருலம் சம்பந்தமாகத் தாம் பாடிய 'குற்ருலக் குறவஞ்சி' என்ற ஒரு பிரபந்தத்தில், தாம் கண்டறிந்த கடவுளுண்மையை அவர் வெளியிடுகிருர். பம்ப

ரத்தை ஒருவன் சுற்றிவிட்ட பிறகு, கயிறில்லாமலும் சுற்றுபவன் இல்லாமலும், அது சுற்றிக்கொண்டே யிருப்பது போல, இந்தப் பிரபஞ்சமானது, தன்னை ஆட்டிவைக்கிற இறைவனை நமக்குக் காட்டாமலே சுழன்று வருகிறது என்று கூறுகிறார்.

**சாட்டி நிற்கும் அண்டமெலாம்**
**சாட்டையிலாப் பம்பரம்போல்**
**ஆட்டிவைக்கும் குற்றாலத்(து)**
**அண்ணலார்—**

என்ற பாட்டின் பகுதியிலே, கடவுள் தத்துவத்தைத் தாம் உணர்ந்த முறையில் கவிராயர் நமக்குக் காட்டுகிறார். ஒன்றையொன்று தொடர்பாகப் பற்றிக்கொண்டு எத்தனையோ நட்சத்திரங்கள், சூரியன், கிரகங்கள் ஆகியவை அந்தரத்திலே யுகக்கணக்காக நிற்கின்றன. இவை சாட்டி நிற்கும் அண்டங்கள். இவற்றின் நிலைமையைச் சிந்தித்துப் பார்த்த கவிராயருக்கு, சாட்டையில்லாத பம்பரம் நினைவுக்கு வருகிறது. பம்பரத்தை ஒரு சிறுவன் மறைந்து நின்று ஆட்டிவைத்தது போலவே, கடவுளும், தான் எல்லாவற்றையும் ஆட்டிவைக்கிறான் என்ற உண்மை நமக்குப் புலனாகாதவாறு மறைத்து வைத்து, தன்னுடைய திருவிளையாடலை நிகழ்த்துகிறான்.

உலகத்திலே நம் கண்முன் நிகழும் எண்ணிறந்த இயற்கை அற்புதங்களையும், பம்பரம் சுற்றியதனால் பம்பாய்ப் பையனுக்குண்டான அதிசயத்தையும் ஞாபகம் வைத்துக்கொண்டு இந்தப் பாட்டை நாமும் பாடிக்கொண்டே யிருக்கலாம். பாடப் பாட, கவிராயர் உணர்ந்த கடவுள் தத்துவத்தை நாம் உணரத் தொடங்குவோம். அதோடுகூட, பெரிய உண்மை பொதிந்த இப்பாடலைப் பாடுவதனாலே, உள்ளத்திலே சொல்ல முடியாததோர் ஆனந்த உணர்ச்சியையும் பெறுவோம்.

# 8. காதல்

**கா**தல் என்ற தலைப்பைக் கண்டதும், இக்காலத்தில், பாரதியார் பாடிய

**காதல், காதல், காதல்,**
**காதல் போயிற் காதல் போயிற்**
**சாதல், சாதல், சாதல்**

என்ற பாட்டுத்தான் எல்லோருக்கும் ஞாபகத்துக்கு வரும். இதை விட்டுவிட்டால், பிறகு நினைவுக்கு வருவது, நவீனச் சிறுகதை எழுத்தாளர்களுடைய 'காதற் சித்திரங்கள்'. இவற்றையல்ல நாம் இங்கே பார்க்கப்போவது. எப்படி, இந்தக் காலமானது நவீனமான எழுத்தாளர்களையும், அவர்களுக் கென்று நவீனமான ஒரு 'தமிழ்'ப் பாஷையையும் தோற்றுவித்திருக்கிறதோ, அதேபோல, இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு காலமானது, தமிழ்ப் பாட்டிலே புதியவகை யொன்றைத் தோற்றுவித்தது. அந்த வகையே 'காதற் பிரபந்தம்' என்பது. அது என்ன என்பதை முதலாவதாகப் பார்க்கலாம்.

பழைய காலத்திலே, சங்க இலக்கியங்கள் என்று சொல்லப்படுகிற ஆயிரக்கணக்கான தனிப்பாடல்கள் தமிழிலே உண்டாகியிருந்தன. பிறகு, தேவாரம் ஆழ்வார்கள் பாடல் போன்ற அருட்பாடல்களும், பெருங் காவியங்களும் தோன்றின. இவற்றின் பின்னர், இடைக்காலத்திலே, பிரபந்தங்கள் என்ற புதிய நூல் வரிசைகள் ஏற்படலாயின. புலவர்கள், தங்களை ஆதரித்த வள்ளலையும் அரசனையும், தாங்கள் வழிபட்ட தெய்வத்தையும், போற்றிப் புகழ்வதற்காக

இந்தப் பிரபந்த வகைகளை அமைத்துக் கொண்டார்கள். இவை தொண்ணூற்றாறு வகை என்பது பழைய வழக்கு. இவற்றுள் 'காதல்' என்பதும் ஒன்று.

காதற் பிரபந்தத்தில் சொல்லப்படுகிற செய்தியை இப்போது பார்ப்போம். கல்வியும் செல்வமும் புகழும் நிரம்பப்பெற்ற தலைவனொருவன் ஒரு நாள் வேட்டை யாடுவதற்காகப் புறப்பட்டுக் காட்டுக்குச் செல்கிறான். வேட்டை யாடிக்கொண்டே, தன் தோழர்களைப் பிரிந்து, தனியே அங்குள்ள ஒரு சோலையை அடைகிறான். அயலூரி லிருந்து வந்த இளம்பெண் ணொருத்தியை அங்கே காண்கிறான். அவளும், பூக்கொய்வதற்காகத் தோழியருடன் வந்தவள், எப்படியோ அவர்களைப் பிரிந்து, தான்மட்டும் தனியே வந்திருக்கிறாள். இருவரும் ஒருவரையொருவர் கண்டு காதல்கொள்ளுகிறார்கள். தலைவன், அவளுடைய நலத்தைப் பாராட்டி, தன் காதலை வெளியிட்டு, அவளோடு மகிழ்ந்திருக்கிறான். சிறிது நேரம் செல்ல, அவனுடைய பரிவாரங்கள் அவனைத் தேடி அங்கு வருகின்றன. அவளிடம் விடைபெற்றுக்கொண்டு, அவன் அவர்களோடு தன் நகருக்குத் திரும்புகிறான். இதற்குள், அவளுடைய தோழிகளும், அவளைத் தேடி அங்கு வந்து அவளைக் காண்கிறார்கள். எல்லோருமாக வீட்டுக்குப் போகிறார்கள். அவளோ, வீட்டிற்குப் போனது முதல் தன்னைப் பிரிந்த காதலனையே எந்நேரமும் எண்ணி எண்ணிப் புலம்பிக்கொண்டு, தன் வசமிழந்த நிலையில் இருக்கிறாள். அவளுடைய தாய், அவள் மனநிலையை ஒருவாறு யூகித்தறிந்து, அவளைத் தேற்ற முயல்கிறாள். இந்தச் சந்தர்ப்பத்தில், பிரிந்து சென்ற தலைவன் அவளை மணம் பேசுவதற்காக வரவிட்ட தூதர்கள், வரிசைகளைச் சுமந்துகொண்டு, சிவிகையேந்தி வருகிறார்கள். கண்ட தாய் மிக மகிழ்ந்து, தன் மகளைச் சிவிகையிலேற்றி வாழ்த்தித் தலைவன்பால் அனுப்புகிறாள்.

இதுவே காதற் பிரபந்தத்தில் கூறப்பட்டுள்ள பொருளின் சுருக்கம். இவ்விதமான கதைப்போக்கைத் தழுவி, புலவர்கள் ஒரு புதிய பிரபந்த வகையை எவ்வாறு அமைத்துக் கொண்டார்கள் என்பதையும் சிறிது ஆராய்ந்து பார்க்கலாம்.

**ப**ழைய தமிழிலக்கணத்திலே, காதல் ஒழுக்கத்தைக் கூறும் பகுதிக்கு 'அகப்பொருள்' இலக்கணம் என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஓர் இளமங்கையும் ஓர் இளைஞனும் 'குறிஞ்சி' நிலத்திலேதான் முதன்முதல் சந்திக்கிறார்கள்; அங்கே காதல் உண்டாகிறது; பிறகு அது வளர்ந்து, இருவரும் மணம் புரிந்துகொண்டு வாழ்கிறார்கள் என்று பழைய ஆசிரியர்கள் அகப்பொருள் இலக்கணத்தில் கூறினார்கள். அந்த ஆசிரியர்களுக்கு வெகுகாலம் பிற்பட்டு வாழ்ந்த புலவர்களுங்கூட, குறிஞ்சி நிலத்தில்தான் காதல் தொடங்கவேண்டும் என்ற பழைய இலக்கண சம்பிரதாயத்தை மறக்க முடியவில்லை. ஆகவே, இவர்கள், தங்களுக்கு விருப்பமான ஒரு பிரபுவைப் புகழ்ந்து காதல் துறையிலே தனிப் பிரபந்தமொன்று பாட எண்ணியபோதும், குறிஞ்சி நிலத்தையே தேடிப் போக வேண்டியதாயிற்று. குறிஞ்சிநிலம் என்பது, மலையும், மலையைச் சார்ந்த சோலை முதலிய இடங்களும். வேட்டையாடுவது என்ற ஒரு வியாஜத்தைக் கற்பித்துக்கொண்டு, புலவர்கள் தங்கள் கதாநாயகனை ஒரு சோலைக்குக் கொண்டு வந்தார்கள்; பூக் கொய்வதற்காக ஒரு பெண்ணையும் அங்கே வரச் செய்தார்கள்; இருவருக்கும் காதலை உண்டாக்கி, தங்கள் பிரபந்தத்தையும் முடித்தார்கள். காதற் பிரபந்தம் எவ்வாறு தோன்றியிருக்கக் கூடும் என்பது பற்றி நாம் சொல்லக் கூடியது இவ்வளவே.

பதினேழாம் நூற்றாண்டிலிருந்து, எளிய மக்களுடைய வாழ்க்கையை எளிய நடையில் சித்திரிக்கும் பிரபந்த வகைகள் பல தோன்ற ஆரம்பித்தன. உழவர் வாழ்க்கையைக் கூறுவது பள்ளுப் பிரபந்தம்.

குறவன் குறத்தியின் காதல் வாழ்க்கையைக் கூறுவது குறவஞ்சிப் பாட்டு. ஓர் எளிய நொண்டியின் சுய சரிதையாகும், நொண்டி நாடகம். இவற்றையொட்டியே, எளிய நடையிலே எழுதப்பட்ட மற்ருெரு பாட்டு, 'காதல்' என்னும் பிரபந்தம்.

இனி, இந்த ஆராய்ச்சிகளையெல்லாம் கொஞ்சம் மறந்துவிட்டு, புலவர் பாடும் பாட்டையும் பாட்டிலுள்ள சுவையையும் பார்க்கலாம்.

புலவர் போற்றுகிற தலைவனுடைய முன்வாசலுக்கு முதலில் போவோம். வாசலிலுள்ள நிலைகளும் கதவுகளும், பொன்னும் மணியும் முத்தும் இழைக்கப்பெற்று, அலங்காரமாகக் காட்சி தருகின்றன. அந்த வாசலிலே என்ன நடக்கிறது? வருவோரும் போவோருமாக இடைவிடாது இரவலர் கூட்டம் மொய்த்தபடியிருக்கிறது. வந்தவருக்கெல்லாம் ஏவலாளர் அன்ன மளிக்கிருர்கள். கூட நிற்கின்ற வள்ளல், அவர்களை மலர்ந்த முகத்தோடு வரவேற்றுத் தன் இனிய சொற்களாலே மகிழ்விக்கிருன். இப்படி அன்னமும் அருளும் பெற்றுப் போகிருர்கள் ஏழை மக்கள். கவிவாணர்களும் அந்த வாசலுக்கு வருகிருர்கள். அருமையாக அவர்கள் பாடிவந்த பாடல்களைக் கேட்டு மகிழ்ந்து, நமது வள்ளல் அவர்களுக்குப் பொன்னையும் துகிலையும் சால்வைகளையும் பரிசிலாக அளித்து மரியாதை செய்தனுப்புகிருன்:

> **அன்னம் வழங்கி**
> **அருள்வழங்கி, வாணருக்குச்**
> **சொன்னம் வழங்கித்**
> **துகில்வழங்கும் வாசலினுன்!**

என்று இந்தக் காட்சியைப் புலவர் காட்ட நாம் காண்கிருேம்.

வாசலுக்கு வெளிப்புறத்திலே, அவனுடைய குதிரைகள் வரிசையாக நிற்கின்றன. நிற்க கூட

இல்லை அவை; உலவுகின்றன. போரிலே வந்து எதிர்த்த பகைவரை வீழ்த்தி அவர்களுடைய எலும்புகள் நொறுங்கும்படியாகப் போர்க்களத்திலே நடனஞ் செய்வதைப் போல இருக்கிறதாம், கொண்டல்போல் கருநிறமுள்ள இந்தக் குதிரைகளைப் பார்க்கும் போது:

*செறுநர்தங்கள் தலையில்நின்று*
*திமிதிதொந்தம் எனநடஞ்செய்(து)*
*உறுவஎன்பு தசைநொறுங்க*
*உலவுகொண்ட லனதுரங்கள்!*

என்றார் புலவர். குதிரைகள் முன்னே போர்க்களத்தில் நடனமாடிய காட்சியை, இந்தப் பாட்டிலுள்ள சொற்களே நம் கண்முன் இப்போது தாளத்துக்கேற்ப நடனமாடிக் காட்டுகின்றன.

அடுத்த வரிசையிலே யானைகள் நிற்கின்றன. பார்க்கும்போதே நமக்குப் பயமாயிருக்கிறது. அவை செய்த செயல்களைப் புலவர் எடுத்துக் கூறும்போது, நாம் இன்னும் பயந்து வாசலைக் கடந்து உள்ளே ஓடிவிடத் தயாராயிருக்கிறோம்:

*கடல்கலக்கி முகில்கசக்கிக்*
*கையிலெதிர்த்த படைநொறுக்கி*
*அடல்மிகுத்த செறுநரைக்கை*
*யறஅரைத்த மதக்களிற்றன்!*

கடலையே ஒரு கலக்குக் கலக்கிவிட்டு, தும்பிக்கையை நீட்டி மேகத்தையும் அப்படியே பிடித்துக் கசக்கி உறிஞ்சிவிட்டு, வீரர்களான பகைவரைக் காலால் தேய்த்து அரைத்து வருகின்றனவாம், யானைகள்.

உள்ளே சென்று வள்ளலைக் காண்கிறோம். அவனுடைய சிறப்பனைத்தையும் கொடைத்திறன் ஒன்றினாலேயே நாம் உணர்ந்துகொள்ளலாம். தேவலோகத்திலுள்ள கற்பகத் தருவும் காமதேனுவும், வேண்டினவர் வேண்டினவற்றைக் கொடுக்குமென்று

கேள்விப்பட் டிருக்கிறோம்; நாம் நேரே கண்ட தில்லை. ஆனாலும், கண்கூடாகக் காண்பது, மேகம். யாருடைய பிரதியுபகாரத்தையும் எதிர்பாரா மலே, மழையைப் பெய்து, உலகத்துக்குப் பெரும் நன்மையை விளைவிக்கிறது. கொடையை, அதாவது, கொடுக்கிற சுபாவத்தை, இந்த மேகமும் கற்பகத் தருவும் காமதேனுவும் யாரிடம் கற்றுக்கொண்டன? நமது தலைவனிடத்தில்தான். புலவர் சொல்லுகிறார்:

அண்டர் தருவுக்கும்
அருங்காம தேனுவுக்கும்
கொண்டல் தனக்கும்
கொடைபயிற்று செங்கரத்தான்!

சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுபவன் அரிச் சந்திரன் ஒருவன்தான் என்று நாம் எண்ணுகிறோம். ஆனால், இந்த வள்ளல் எப்படிப்பட்டவன்?

மாமறைநூல் பொய்த்தாலும்,
வாரிதிநீர் பொய்த்தாலும்,
சோமரவி பொய்த்தாலும்,
சொன்னமொழி பொய்யாதான்!

இவனுடைய குணாதிசயங்களைப் பார்த்தாகிவிட்டது. இனி, இவனோடுகூடவே வேட்டைக்குச் செல்வோம்.

காட்டிலே செல்கின்ற வீரர்களைக் கண்டு மயிற் கூட்டங்கள் வெருண்டு ஓடுகின்றன. இதைக் கண் டார் புலவர். எப்போதும் வறுமையோடு போராடிக் கொண்டிருந்தவரல்லவா இவர்? இந்த வள்ள லிடத்தே வந்து சேர்ந்தவுடனே, இவரைவிட்டு வறுமை அகன்று ஓடினதைப்போல இருந்தது, மயிற் கூட்டங்கள் ஓடின தோற்றம்:

கூடும் மயிற்கூட்டம்,
கொடுக்கின்ற தாதாவைப்
பாடும் புலவர்
கலிபோற் பறந்தோடும்!

மென்மையான மயில்களைப் பார்த்தோம். இனி, கொடூரமான புலி வேட்டையையும் சிறிது பார்க்கலாம். வாலை முறுக்கிக்கொண்டு, புலி பதுங்கிப் பாய்கிறது. வீரர்கள் வாளாலும் வேலாலும் அதனோடு போரிடுகிறார்கள். இந்தப் போரின் பயங்கரத்தைப் பாட்டிலும் கொஞ்சம் காணலாம் :

**வாலடித்து மேல்பதுங்கி**
**வாய்பிளக்க வாள்கிழிக்க**
**வேல்பிடித்து வீரர்குத்தி**
**வீழ்புலிக்கு மேல்துடிப்பார்!**

இவ்விதமாகப் புலி வேட்டை யாடிக்கொண்டே விரைந்து சென்ற தலைவன், எப்படியோ தன் தோழர்களை விட்டுப் பிரிந்து, வழிதடுமாறித் தனியே போய் விட்டான். வழியிலே சரக்கொன்றை மரமொன்று, அழகாகச் சரஞ் சரமாகப் பூத்துக் குலுங்குகிறது. தன்னை நோக்கி வருகிற வள்ளலுக்கு மாலையிடுவதற்காக மாலையை யேந்தி ஒரு பெண் நிற்பதுபோல இருக்கிறது, சரக்கொன்றை மலர்ந்துள்ள காட்சி :

**மையல்கொண்டு மன்னனுக்கு**
**மாலையிட வந்துநின்ற**
**தையலார் போலச்**
**சரக்கொன்றை பூத்துதிரும்!**

இவ்வாறு பூத்துதிருகின்ற சரக்கொன்றையோரமாகச் சென்றவன், எதிரே ஒரு பெண்ணைக் கண்டான். அவளும், இவன் வேட்டைக்கு வந்தது போலவே, தன் தோழியருடன் மலர் பறிக்கும் பொருட்டு இந்தச் சோலைக்கு வந்தாள். பிச்சிப்பூ, செவ்வந்தி, முல்லை முதலிய செடிப் பூக்களையும் கொடிப் பூக்களையும் பறித்துக்கொண்டே வந்தவள், கோட்டுப் பூக்களைக் கண்டு அவற்றின்மேல் ஆசை கொண்டாள். எட்டாத உயரத்திலே பூவை வைத்துக் கொண்டிருக்கிற சண்பகம் முதலான பெரு மரங்

களைத் தனக்குப் பூ தரும்படி வேண்டிக்கொண்டே, அவள் வருகிறாள். எப்படி வேண்டினாள்?

**சாதிநறுஞ் சண்பகமே!**
**தாதுளபூந் தாதகியே!**
**கோதிக் குழல்முடிக்கக்**
**கோலமலர் தாரீரோ!**

என்று வழியிலுள்ள மரங்களையெல்லாம் கேட்டுக்கொண்டே வந்தவள், தன் தோழிகளைவிட்டுப் பிரிந்துவிட்டாள். பிரிந்து, வழி தெரியாமல் மயங்கும்போது, தூரத்தில் ஏராளமாகப் பூத்திருந்த இந்தச் சரக்கொன்றை அவள் மனதைக் கவர்ந்து விடுகிறது; இங்கே வருகிறாள். இக் கொன்றையினருகிலே, வேட்டை முடித்துவந்த தலைவனைக் காண்கிறாள். அவனுக்கு இவள் எப்படித் தோற்றுகிறாள்?

தனியே வந்த இப் பெண்ணினுடைய இளமையும் எழிலும் அவனுள்ளத்தை முற்றிலும் கவர்ந்துவிடுகின்றன. மயங்கிப்போன நிலையிலே, என்ன சொல்வதென்று தெளியாமல், இவளைச் சர்க்கரை என்று சொல்லலாமோ என எண்ணுகிறான். ஆனால், கரும்பிலிருந்து சாறு பிழிந்து, காய்ச்சித் திரட்டினாலல்லவோ சர்க்கரை கிடைக்கும்! இந்தச் சர்க்கரை அப்படியன்று:

**காய்ச்சிக் கொதியாமல்**
**கன்றிச் சிவக்காமல்**
**தேய்த்துத் திரட்டாமல்**
**தித்தித்த நற்சீனி!**

என்று அவன் மனம் எண்ணமிடுகிறது. இவளுடைய இயற்கை யழகு அவனுடைய மனத்தை மயக்குவது ஒருபுறம்; இவள் அணிந்திருந்த ஆபரணங்களின் அழகும் அவன் நெஞ்சை அள்ளுகின்றது. அற்ப மூக்குத்தி ஒன்றை இவள் அணிந்திருக்கிறாள். அதுவும ஏதோ, வெள்ளியால்தான் செய்தது,

பொன்னல்ல; அதன் தலையில் ஒரு சிறு முத்து. இவ்வளவுதான். மையல்கொண்ட இந்தத் தலைவன் அதைப் பார்க்கும்போது அது எவ்வளவு சுகமாயிருக்கிறது!

**எள்ளிளம்பூ விற்கோத்த**
**விண்ணீர்த் துளிஎனவே**
**விள்ளும் முகமிலங்க**
**மின்னுமூக் குத்தியிட்டாள்.**

எள்ளுச் செடியிலே பூத்த புதிய வெண்மையான பூவின் இதழ் நுனியிலே தங்கிய ஒரு சிறு பனித் திவலைபோல ஒளிவிட்டது, அந்தப் பெண் அணிந்திருந்த வெள்ளி மூக்குத்தியிற் பதித்த முத்து.

வந்த பெண்ணும் தலைவனும், ஒருவரையொருவர் கண்டவுடனே காதல் கொண்டார்கள், பிறகு கலியாணமும் ஆயிற்று என்ற கதையை இங்கே விரித்துச் சொல்ல வேண்டுவதில்லை. கடைசியாக ஒரே ஒரு வாழ்த்து. நாயகன் வீட்டிலிருந்து பெண்ணழைக்கப்பல்லக்கும் வரிசைகளும் வந்திருக்கின்றன. தன் மகளைப் பல்லக்கில் ஏற்றி, வாழ்த்தி அனுப்புகிருள், தாய்:

**காஉலவு மின்னே!**
**கனகபல்லக் கேறி, இந்தப்**
**பூவுலகு கொண்டாடப்**
**புத்திரனைப் பெற்றிருந்து,**
**தேனும் சுவையும்போல்**
**சேர்ந்துமிக வாழ்ந்திருப்பாய்!**

இப்படியாக, புலவர், தம்மை ஆதரித்த வள்ளலைப் புகழ்ந்து அவன்மீது ஒரு பிரபந்தம் பாடி முடிக்கிருர். வள்ளல் புலவருக்கு எதைத்தான் கொடுக்க மாட்டான்! பொன்னையும் துகிலையும் கொடுப்பது ஒரு பெரிய காரியமா?

ஆரம்பமுதல் கடைசிவரையில் நாமும் வள்ளலுடைய சபையிலே இருந்து காதற்பாட்டைக் கேட்டு ஆனந்தமாக அனுபவித்தோம். நம்முடைய ஆனந்தத்தைப் புலவருக்கு நாம் எப்படித் தெரிவிக்கப் போகிறோம்? 'சபாஷ்' போட்டுக் கைகொட்டி ஆர்ப்பரிக்கிறோம்.

# 9. ஆராரோ

பல வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு சிறு விஷயம்.

நான் அப்போது முதல் பாரத்திலிருந்து இரண்டாவது பாரத்துக்குப் 'பிரமோஷன்' ஆகி வந்திருந்தேன். அந்தக் காலத்திலே, பாடசாலைகளில் சம்ஸ்கிருதம் சொல்லிக்கொடுப்பது இரண்டாவது பாரம் முதல்தான். சம்ஸ்கிருத வகுப்பிலே மாணவர்கள் குறைவாகவே இருந்தார்கள். புது வகுப்பில் எனக்குச் சம்ஸ்கிருத பாடம் தொடங்குகிற முதல் தினம். சம்ஸ்கிருத பண்டிதர் வகுப்புக்கு வந்தார். மற்றப் பையன்களும் நானும் வகுப்பில் இருந்தோம். உபாத்தியாயர் சம்ஸ்கிருதத்தின் பெருமையைப் பற்றி ஒரு சிறு பிரசங்கம் செய்தார். சம்ஸ்கிருதம் தேவ பாஷை; தேவலோகத்திலே யுள்ள தேவர்களும் முனிசிரேஷ்டர்களும் பேசுகிற பாஷை; விநாயகரும் சுப்பிரமணியரும் தங்கள் பெற்றோருடன் கொஞ்சுகிற பாஷை; பாற்கடலிலே பள்ளி கொண்ட பரந்தாமன் தன் பிராட்டியிடம் பேசுகின்ற பாஷை: சரசுவதி தன் வீணையை மீட்டிக் கொண்டு பாடுகிற பாஷை; தும்புருவும் நாரதரும் பரமேசுவரன் சன்னிதியிலே கீத மிசைக்கின்ற பாஷை; இப்படியாக வெகு நேரம் நடந்தது பிரசங்கம். மாணவர்களிலே பல பேருக்கு இது மிகவும் சங்கடமா யிருந்தது. "இதேதடா வம்பு, நமக்கு இந்தத் தெய்வ பாஷை வேண்டவே வேண்டாம். பேசாமல், மனிதர்களாகிய நாம், மனித பாஷை வழங்குகிற தமிழ் வகுப்புக்கே போய்விடலாமே" என்று அவர்கள் எண்ணினார்கள்.

ஆனால், எனக்கும் என்னைப்போன்ற சில மாணவர்களுக்கும் மிக்க சந்தோஷம். தெய்வ பாஷையைப்

படிக்கக் கிடைத்த நமது பாக்கியமே பாக்கியம் என்று எண்ணினேம். சம்ஸ்கிருதம் படித்தால், அப்புறம் இந்த உலகத்தில் வேலேயே இல்லே, நேரே சொர்க்க லோகத்துக்குப் போய்விடலாம் என்ற நிச்சயம் பிறந்து விட்டது. பிறந்துவிட்ட போதிலும், சிறு சந்தேகமொன்று மட்டும் இருந்தது. அதாவது, தேவலோகத்திலே, தேவர்கள், இந்திரன், பிரமன் முதலியோர் சம்ஸ்கிருத பாஷையில்தான் பேசுகிறார்கள் என்பதற்கு ஆதாரமுண்டா என்பதுதான். எங்கள் சந்தேகத்தை எதிர்பார்த்தே, பண்டிதர் அதற்கு வேண்டிய சமாதானம் சொல்லத் தொடங்கினர்.

"கைக்குழந்தை யெல்லாம் எப்படிடா கத்துகிறது?" என்று ஒரு கேள்வி கேட்டார். உடனே ஒரு பையன் எழுந்து, "குவா, குவா என்று கத்துகிறது, சார்" என்று பதில் சொன்னன். "பேஷ்" என்று சொல்லி, பண்டிதர் விளக்க ஆரம்பித்தார். நம்மை யெல்லாம் படைத்து, நம் உயிர்க்குயிரா யிருந்து காப்பாற்றுகிற கடவுள் ஒருவன் உண்டு. இந்தக் கடவுள்தான், தாயின் வயிற்றிலிருக்கிற சிசுவையும் காப்பாற்றுகிறன். சிசு தாயின் வயிற்றிலிருக்கிறவரையில், அந்தக் கடவுள், அதற்கு வேண்டிய ஆகாரமளித்து, அதனேடு கூடவே யிருந்து, அதைச் சௌகரியமாக வைத்திருக்கிறன். இப்படிச் சௌகரியமான நிலேயிலிருந்த சிசு, தாயின் கர்ப்பத்தை விட்டு உலகத்தில் வந்து பிறந்தவுடன், அதற்கு எல்லாம் புதிதாயிருக்கிறது. தன்னேக் காத்துவந்த கடவுளேக் காணவில்லே. இதனல், பிறந்தவுடனே குழந்தை, 'குவா', 'குவா' என்று கத்துகிறது. சம்ஸ்கிருதத்திலே 'க்வ' என்றல், எங்கே என்று பொருள். பிறந்த வுடனேயே குழந்தை 'எங்கே', 'எங்கே' என்று கேட்கிறது. அதாவது, "என்னே இதுவரையில் பாதுகாத்து வந்த கடவுளே! இப்போது என்னே விட்டு நீ எங்கே போய்விட்டாய்?" என்று பழைய நினேவோடு சம்ஸ்கிருதத்தில் பேசுகிறது. 'க்வ' என்ற ஒலிக்குச் சம்ஸ்கிருதத்தில் இந்தப் பொருள்

இருப்பதனுல், கடவுளுக்குரிய தேவபாஷை சம்ஸ்கிருதமே யாகும் என்பதைப் பண்டிதர் இவ்வாறு ஐயந்திரிபற நிரூபித்து விட்டார். கேட்ட மாணவர்களாகிய எங்களுக்கும் சந்தேக மெல்லாம் நீங்கிவிட்டது.

தேவபாஷையைக் கற்றுக் கொள்ளுகிருேம் என்ற ஒரு கர்வத்திஞல், மற்றப் பிள்ளைகளோடு பின்னுல் எத்தனேயோ வாய்ச் சண்டைகளும் கைச் சண்டைகளும் போட்டிருக்கிருேம்.

இந்தக் கதையை நான் சொல்லவந்தது, சம்ஸ்கிருத பாஷைக்கு உயர்வு உண்டென்று சொல்வதற்காகவோ அல்லது அதற்கு உயர்வு இல்லை என்று சொல்வதற்காகவோ அல்ல. அற்ப விஷயங்களிலும் கூடப் பெரிய உண்மைகளே ஏற்றிச் சொல்வதிலும், அவற்றிலே அந்த உண்மைகளேக் காண்பதிலும் நம் மக்களுக்கு அதிகப் பிரேமை யிருக்கிறதென்பதைக் காட்டவே மேற்சொன்ன சம்பவத்தை இங்கே நான் விரித்துக் கூறினேன். ஒரு சிசு, ஏதோ பசி காரணமாகவோ அல்லது வலி காரணமாகவோ, கத்திஞலும், அதற்கு எத்தனேயோ தத்துவார்த்தங்கள் கற்பிக்கிருேம். இந்த முறையிலே பார்த்தால், எத்தனேயோ விதங்களில் இப்படிப்பட்ட ஓரியல்பு நமக்கிருப்பதைக் கவனிக்கலாம்.

தெருவிலே இருவர் வாய்ச்சண்டை போட்டுக் கொள்ளுகிருர்கள். ஒருவன் மற்றவனேப் பார்த்துச் சொல்லுகிருன்: "உன்னேத் தெரியும், போடா, பார்த்துக் கொள்ளுகிறேன்" என்கிருன். கேட்டவன் சிறிது புத்திசாலி. நின்று, நிதானமாகப் பதில் சொல்லுகிருன்: "நீ சொல்கிறது சரிதானப்பா, என்னே உனக்குத் தெரியுமென்று சொல்லுகிருய். அதிருக்கட்டும். முதலிலே, உன்னே உனக்குத் தெரியுமா? அதைச் சொல்லு" என்கிருன். அவன் சிறிது திகைக்கிருன். இவனே, மேலும் கேள்விகளைச் சரமாரியாக விடுகிருன்: "முன்னே நீ எங்கே இருந்தாய்? இப்போது எங்கே வந்தாய்? ஏன் வந்தாய்? இனி எங்கே போகிருய்?" என்று அடுக்கி

ஞன். சண்டை போட்டவன், "அப்பா, உன் கேள்வி யும் வேண்டாம், உன் சண்டையும் வேண்டாம்" என்றுகூறி, அப்படியே மெல்ல நழுவிவிட்டான்.

நாமும் சற்று நின்று இதைக் கவனிக்கலாம். கேட்டவன் இந்தக் கேள்விகளைக் கேட்டுவிட்டானே தவிர, அவனுக்குத்தான் தெரியுமா இந்த விஷயங் கள்? தெரியா. நாமும் இந்தக் கேள்விகளைக் கேட்போம், ஆனால் பொருள் தெரியாது. இதி லொன்றும் குற்றமில்லை. மாணிக்கவாசக சுவாமி களுக்குமே இந்த விஷயங்க ளொன்றும் தெரியவில்லை யாம். அவர் சொல்லுகிறார்:

**நான் ஆர்? என் உள்ளம் ஆர்?**
**ஞானங்கள் ஆர்? என்னை**
**யார் அறிவார்?**

"என்னை எனக்குத் தெரியாது; தெரிந்தவர் யார்?" என்று அவரே கேட்கும்போது, நமக்கு இவை தெரி யாததிலே ஒன்றும் தவறில்லை.

சாதாரணமாக, ஒரு மனிதன் கொஞ்சம் நம்மை மதிக்காமல், அசட்டை செய்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனுடைய கருவத்தையும் இறு மாப்பையும் பற்றி அதுமுதல் சதா பேசிவருகிறோம். அவனுக்கு ஏற்பட்டிருப்பதாக நாம் கருதுகிற இந்த இறுமாப்புக்கு ஒரு புதுப் பெயரும் கொடுக்கத் தலைப்படுகிறோம். மமதை என்றும், அகங்காரம் என்றும் கூசாமல் சொல்லுகிறோம். கருவம், தற் பெருமை என்ற அர்த்தத்தில் இந்த வார்த்தைகளை எடுத்து வீசுகிறோம். ஆழ்ந்து பார்த்தால் இவற்றில் அரிய பொருள் அடங்கியிருப்பது தெரியும். அகங் காரம் என்பது நான் என்ற முனைப்பு; ஆணவம் என்று சொல்லப்படும். மமதை என்பது என்னுடை யது என்ற பற்றுதல். பாசம் அல்லது மாயை என்று இதைச் சொல்லலாம். இவை உயிர்களை ஆதி தொட்டு இடைவிடாது பீடிக்கின்ற மலங்களாகும். இவற்றை விட்டு நீங்கின மனிதன் கடவுள் தன்

மையை அடைந்து விடுகிருன். அகங்காரம், மமதை என்று நாம் சொல்லுகிற சாதாரணச் சொற்களிலே இவ்வளவு ஆழமான பொருள் அமைந்திருக்கிறது.

இப்படிப்பட்ட உயர்ந்த தத்துவார்த்தம் பொருந்திய கருத்துக்களை விளக்கும் எத்தனையோ உதாரணங்களைச் சொல்லிக்கொண்டு போகலாம். இவை நிற்க, செய்யுள் வழக்கிலிருந்து இரண்டொரு உதாரணங்களை இனிப் பார்ப்போம்.

தற்செயலாக, எதிர்பாராத முறையில், ஆண் பெண் இருவர் ஒரு தனித்த இடத்தில் சந்திக்கிருர்கள். இருவரும் இளவயதினர், மணமாகாதவர்கள்; சந்திக்கிற இடமோ, மலைச்சாரல்; இயற்கை வசதிகளெல்லாம் நிரம்பி, மனத்துக்கு உற்சாகத்தைத் தரும் சோலை. ஒருவர்மேலொருவர் காதல்கொண்டு, மணம்புரிந்து கொள்ளுகிருர்கள். நாயகனேடு சந்தோஷத்துடனே வாழ்ந்து கொண்டிருக்கிற தலைவி, ஒருநாள், பழைய நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்க்கிருள். ஒரு பெரிய அதிசயம் அவளுக்கு உண்டாகிறது. தன் நாயகனும் தானும் எவ்வாறு ஒருவரை யொருவர் விரும்ப நேர்ந்தார்கள் என்பதற்கு அவளால் காரணம் கண்டுபிடிக்க முடியவில்லை. அவளுடைய தாய்க்கும் அவனுடைய தாய்க்கும் ஏதேனும் உறவு இருந்ததா? இல்லை. இருவருடைய தந்தையரும் ஒருவரை யொருவர் முன்னமே அறிவார்களா? மாட்டார்கள். இந்தக் காதலர் இருவருமாவது, முன்பின் கண்டிருக்கிருர்களா? அதுவும் கிடையாது. பின் எவ்வாறு ஒருவருடைய மனம் மற்றவருடைய உறவை நாடிற்று? அவரோடு ஒன்ருகப் பிணிக்கப்பட்டது? இவற்றுக்கெல்லாம் காரணம் ஒத்த அன்புடைமைதான் என்று அவள் முடிவுகட்டுகிருள். இந்தப் பழைய நினைவுகளை ஒரு சமயம் தன் காதலன் முன்னிலையில் ஞாபகப் படுத்தி மகிழ்கிருள் இந்தத் தலைவி:

யாயும் யாயும் யாரா கியரோ ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர் ?
யாமும் நீயும் எவ்வழி அறிதும் ?
செம்புலப் பெயல்நீர் போல,
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே !

செம்புலப் பெயல்நீர் - தண்ணீரின்றி வறண்டு, தண்ணீரை ஏற்கப் பக்குவப்பட்டுக் கிடக்கும் நிலத்தில் பெய்த மழைநீர் நிலத்துக்குள்ளேயே சுவறி இரண்டறக் கலந்துவிடுவதுபோல, நம்முடைய இதயமும், ஒருவருக்காக ஒருவர் ஏங்கி நின்றமை யாலே, ஒன்றுக்குள் ஒன்று அடங்கிவிட்டது என்பது கருத்து.

இது, இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் தோன்றிய சங்கநூல்களில் ஒன்றாகிய குறுந்தொகை யிலுள்ள எடுத்த தனிப்பாட்டு.

காதலர்களுக் கிடையிலுண்டான அன்புக்குக் காரணம் சொல்ல முடியாது; அந்த அன்பு ஏதோ தெய்வச் செயலாகத் தோன்றிய அன்பு என்றே சொல்லவேண்டும் என்பதை இந்தப் பாட்டு குறிப் பிடுகிறது. இனி, மற்றொருவகை அன்பைப் பார்க்கலாம்.

தாயானவள் குழந்தையைப் பத்துமாதம் தன் வயிற்றில் சுமந்து வளர்க்கிறாள். வயிற்றிலுள்ள அச் சிசுவின் நன்மையை உத்தேசித்து இவள் எவ் வளவோ கவலையுடன் தன் தேகத்தைப் பாதுகாக்க வேண்டி யிருக்கிறது. குழந்தை வயிற்றிலிருக்கிற வரையில்தான் இந்தக் கவலை என்பதில்லை; குழந்தை பிறந்த பின்னும், தாய்ப்பால் குடித்துக்கொண் டிருக்கிறவரையில், தாய் இதே கவலையோடு இருக்கவேண்டி யிருக்கிறது. குழந்தைக்குச் சிறிது ஏதாவது அசௌகரியம் என்றால், அதன்பொருட்டுத் தாய் மருந்து சாப்பிடுகிறாள். குழந்தைக்கு ஒரு வேளை ஏதாவது கெடுதல் வந்துவிடுமோ என்று அஞ்சி, தாய், மாம்பழம் சாப்பிடமாட்டாள், பலாப்

பழம் சாப்பிடமாட்டாள். இப்படிப் பெற்று வளர்க்கிற இந்தக் குழந்தைக்கும் இவளுக்கும் என்ன சம்பந்தம்? எல்லாச் சம்பந்தமும் உண்டு. குழந்தையின் உடலிலே தாயின் தத்துவமும் தந்தையின் தத்துவமும் நிறைந்திருக்கின்றன. அதன் சதை, இரத்தம், எலும்பு, நரம்பு முதலிய எல்லாம் இவளுடைய தேகத்திலிருந்து வந்தன. பலநாள் வரையில் அது வளர்வதற்குக் காரணமா யிருந்ததும், தாயினுடைய பால்தான். இவ்வளவு சம்பந்தம் தாய்க்கும் குழந்தைக்கும் இருக்கவே செய்கிறது.

ஆனால், இவ்வளவும் உடலைப் பற்றிய சம்பந்தந்தான். அந்தச் சிறிய குழந்தையின் உடலுக்குள்ளே யிருக்கிற உயிருக்கும் அந்தத் தாய்க்கும் ஏதேனும் சம்பந்தமுண்டா? அதைப் பற்றி அந்தத் தாய்க்குத்தான் தெரியுமா அல்லது குழந்தைக்குத்தான் தெரியுமா? தெரியாது. இந்தக் குழந்தை யார், ஏன் இந்தத் தாயினிடம் வந்து பிறந்தது என்பனபோன்ற விஷயங்கள் ஒருவருக்கும் தெரியவே தெரியாது.

தாய் தன் குழந்தையைத் தொட்டிலிற் கிடத்தி, அதை அன்போடு தாலாட்டி உறங்க வைக்கும்போது பாடுகிற தாலாட்டுப் பாடல்களில் முதற் சொல்லே இந்தக் கருத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. தாய் என்ன பாடுகிறாள்?

**ஆர் ஆரோ ஆர் இவரோ - என்**
**கண் ஆரோ ஆர் இவரோ!**

என்று பாடுகிறாள். ஆராரோ என்று சொல்லும் போது, "நீ யார்? நான் யார்? உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?" என்ற கருத்தைச் சொல்வதுபோல இருக்கிறது. ஆரிவரோ என்று பாடும் போது, "என் குழந்தை, என் கண், என்று நான் அருமை பாராட்டி மகிழ்கிற நீ யார்?" என்ற கருத்து வெளிப்படுகிறது.

சாதாரணமாக, எல்லோரும் தாலாட்டுப் பாட்டுக்களைக் கேட்டிருக்கிறோம், கேட்டும் வருகிறோம். அவற்றைப் பற்றி நாம் அறிந்திருப்பது என்னவென்றால், குழந்தைகளை உறங்கவைக்க இந்தப் பாட்டுக்கள் உதவும் என்பதுதான். இதற்குமேலே ஏதாவது தெரியுமென்றால், தாலாட்டுப் பாடுவது கேட்பதற்கு நமக்குக்கூட நன்றாயிருக்கும் என்பதாகும். நாமறிந்ததெல்லாம் இவ்வளவே. இவற்றுக்கெல்லாம் மேலாக, வாழ்க்கையிலேயே ஒருவராலும் தக்க சமாதானம் சொல்லமுடியாத ஒரு பெரிய கேள்வியும் இந்தத் தாலாட்டுப் பாட்டுக்களிலே அமைந்திருக்கிறது. அதுவே இந்த ஆராரோ என்ற கேள்வி.

நாம் பேசும் சாமானியச் சொற்களிலும் செய்திகளிலும் உயர்ந்த கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன என்று மேலே குறிப்பிட்டேன். இந்த உண்மையைத் தாலாட்டுப் பாடல் தெளிவாக விளக்கிக் காட்டுகிறது.

குழந்தையும் தாயும் யார் யாரோ என்பதை இங்குப் பார்த்தோம். தாய் தன் குழந்தையை ஆராரோ என்றதனால், அதனிடத்துள்ள பாசம் குறைந்துவிடுகிறதா? அதுதானில்லை. யார் யாராயிருந்தபோதிலும், தாயானவள் தன் குழந்தையை 'ஆராரோ' என்று தாலாட்டும்போது, தாலாட்டுவதனாலுண்டாகும் ஆனந்தம் ஒவ்வொரு தடவையும் அதிகரித்துக் கொண்டேதான் போகிறது. இதுவே சிருஷ்டி தத்துவத்திலுள்ள பெரிய அதிசயம்.

# 10. யாவரே காரரளர்

சத்தியத்துக்காக உயிரைக் கொடுத்தவர்கள் நமது நாட்டில் எத்தனையோ பேர். தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதற்காக அரிச்சந்திரன் எவ்வளவோ துன்பத்தை அனுபவிக்க நேர்ந்தது என்பதை நாம் அறிவோம். அரிச்சந்திரன் கதையைப் போலவே, 'நீலி கதை' என்றொரு வரலாறு தமிழ் நாட்டில் நெடுங்காலமாக வழங்கிவருகிறது. இக் கதை சாதாரணமாக எல்லோரும் அறிந்தது.

சென்னைக்கு அருகிலுள்ள பழையனூர்த் திருவாலங்காடு ஒரு புராதன சிவஸ்தலம். அங்கே சிவபெருமானுடைய ஆனந்த நடனத்தைக் காரைக்காலம்மையார் கண்டு அனுபவித்து, அழகாகப் பாடியிருக்கிறார்.

இந்தப் பழையனூரிலே, முற்காலத்தில் ஒரு வேளாளனிருந்தான். அவனுடைய பெண் குழந்தையொன்று, ஏதோ பண்டை வினையின் வலியாலே இறந்துபோய்ப் பேயாய்த் திரிந்துகொண்டிருந்தது. பழையனூருக்கு வந்த வணிகனொருவன், ஊருக்கு வெளிப்புறத்துள்ள காட்டு வழியாக வந்தபோது, இந்தப் பேய், அவனுடைய மனைவி வடிவத்தோடு, அவனைப் பின்தொடர்ந்தது. அவன் அதைப் பேயென்று அறிந்து, விட்டு ஓட முயன்றான். அப்பேய், அவனைத் தொடர்ந்துபற்றி, அவ்வூர் அம்பலத்துக்கு இழுத்துச் சென்று, அங்குக் கூடியிருந்த வேளாளர் எழுபதின்மரிடம், "இவன் என் கணவன். என்னையும் இக் குழந்தையையும் துறந்து செல்ல முயல்கிறான்" என்று முறையிட்டு, தன் கையிலிருந்த ஒரு மாயக் குழந்தையையும் காட்டிற்று. வணிகனோ, அப் பெண்

ஒரு பேய் என்று கூறி, அவளை ஏற்க மறுத்தான். மீண்டும் அப்பேய், "இவனே என் கணவன். இதற்குச் சான்று வேண்டுமானால் காட்டுகிறேன், பாருங்கள்" என்று சொல்லி, தன் கையிலிருந்த மாயக் குழவியைக் கீழேவிட்டது. அக்குழவியோ, 'அப்பா' என்று அழைத்துக்கொண்டு சென்று, அவ்வணிகனைப் பற்றி, அவன் மடிமீது ஏறிக்கொண்டது. இவ்வளவையும் கண்ட வேளாளர், அப்பேயின் சொல்லை மெய்யென்று நம்பி, அதை ஏற்றுக் கொள்ளுமாறு வணிகனை வேண்டினார்கள். அவனோ, அது பேய்தானென்று சொல்லி, மீண்டும் அதை ஏற்க அஞ்சினான். அப்போது அவ்வேளாளர் எழுபதின்மரும், "இப் பெண் பேயானால், நாங்கள் பிணையாவோம். நீ கவலைப் படாதே" என்று அவனுக்கு உறுதி கூறினார்கள். வேறு வழியின்றி வணிகன் சம்மதிக்கவே, அவர்கள் அப்பேயை அவனுடன் கூட்டி அனுப்பினார்கள். அப் பேயோ, அவனோடு ஓர் அறையுட் புகுந்து, அவனை அறைந்து கொன்று, உதிரத்தையெல்லாம் குடித்து, உடலை எறிந்துவிட்டுப் போய்விட்டது. மறுநாட் காலையில் இதையறிந்து அவ் வேளாளர், பெரிதும் துணுக்கமுற்றார்கள். வணிகனுக்குத் தாங்கள் கூறிய உறுதிமொழி பழுதாய்ப் போனதையெண்ணி வருந்தினார்கள். சொல்லைக் காப்பாற்ற முடியாத நிலையிலே, உயிரை விடுவதுதான் செய்யத்தக்கதென்று தீர்மானித்து, ஒரு பெருங் குழியிலே தீ மூட்டச் செய்து, அதனுள் குதித்து உயிர் துறந்தார்கள். வேளாளர் எழுபதின்மருள் ஒருவன், தன் வயலில் உழுதுகொண்டிருந்த போது, இச் செய்தியெல்லாம் கேள்வியுற்று, கலப்பையின் கொழுவினாலே தன்னைக் குத்திக்கொண்டு உயிர்விட்டானும்.

இதுவே நீலி கதை என்று வழங்கப்படும் கதை. எழுபது வேளாளர், தங்கள் சொல் பழுதாய்ப் போனமை யறிந்து, உயிர் துறந்தார்கள். இவ் வரலாறு மிகப் பழமையான காலந்தொட்டுத் தமிழ் நாட்டில் வழங்கிவந்தது. "வஞ்சப்படுத்து ஒருத்தி

வாழ்நாள் கொள்ளும் வகை கேட்டு, அஞ்சும் பழைய னூர் ஆலங்காட்டு எம் அடிகள்" என்று சம்பந்த மூர்த்திகள் இவ் வரலாற்றைச் சுட்டிப் பாடுகிறுர். சேக்கிழார் புராணம் பாடிய உமாபதி சிவாசாரியார், வேளாளர் பெருமையைச் சொல்லவந்த இடத்திலே, இவ் வரலாற்றை விரிவாக உரைத்திருக்கிறுர்.

அரிச்சந்திரனும், இந்த வேளாளர் எழுபதின் மரும், தங்கள் தங்கள் சொல்லைக் காத்துப் பெரும் புகழ் படைத்தார்கள். அரிச்சந்திரனே, பெரிய சக்கர வர்த்தி; எல்லாக் கலைகளையும் முற்றக் கற்றவன். அவன், சத்தியத்தைக் காக்கவேண்டும் என்ற உறுதி யோடு, தன் மனைவியையும் மைந்தனையும் நாட்டை யும் துறக்கத் துணிந்ததில் வியப்பொன்றுமில்லை. சிறந்த கொள்கைக்காக எதையும் அவன் தியாகம் செய்வானென்று நாம் எதிர்பார்ப்போம். ஆனால், இவ் வேளாளரோ அப்படி யல்லர். கலைகளை இவர் கள் முற்றக் கற்றவர்களல்லர். சத்தியத்தைக் காக்க வேண்டு மென்ற உணர்ச்சி இவர்களுக்கு இயல்பாக அமைந்ததே யன்றி, ஏதோ கலைஞானத்தால் வந்த தென்று சொல்லமுடியாது. தவிர, சத்தியமே பெரி தென்ற உணர்ச்சியோடு ஒருமித்து உயிர் விடத் துணிந்தவர் ஒருவரல்ல, இருவரல்ல, எழுபதின்மர். எனவே, இவ் வேளாளர் செயலே மிக்க பெருமை யுடையது; இதுவே நமக்கு வியப்பைத் தருகிறது.

இவ்வளவு பெருமையுடைய இவர்கள் சரித்தி ரத்தை யொட்டி வேறு கதைகளும் எழுந்தன. அவற் றில் ஒன்று, வேளாளர் தீக்குளித்த குண்டத்தி லிருந்த தீயானது நெடுநாள் வரையிலும் அணையாம லிருந்த தென்று சொல்லுகிறது. வேளாளர் புகழைக் கேட்ட தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்து அத்தீயைப் பார்த்து வியந்தார்கள் ஆம். தங்கள் வியப்பை அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு பாடல் மூலமாக வெளியிட்டார் களாம்.

சோழன் முதலிலே, இந்தச் சரித்திரத்தைக் கேள்வியுற்று, அத் தீக்குண்டத்தைக் காணவேண்டு

மென்று வருகிறான். மற்ற இரு மன்னரையும் விட, இவன் சற்று அருகிலிருப்பவ னல்லவா? பழைய னூர்த் தீக்குழியில் விழுந்த வேளாளர் புகழானது, எத்தனையோ எல்லைகளைக் கடந்து, புகார் நகரத்தை யடைந்து, சோழன் காதுக்கு எட்டியிருக்கிறது. தொண்டைநாடு, நடுநாடு, சோழநாடு என்றெல் லாம் எத்தனையோ நாடுகளிலும் அவற்றின் எல்லை களிலும் அப்புகழ் பரவிற்று. பரவியதன் காரணம், சத்தியத்தை நிலை நிறுத்துவதொன்றே என்று கூறத் தக்க விதமாயிருந்தது. பழமையான நீதி முறைமை யிலேதான் மக்கள் பொதுவாக ஒழுகிவருகிறார்கள். ஆனாலும் எத்தனையோ பேர், வாழ்க்கையிலே நல் லொழுக்கத்தினின்றும் நழுவி, தீய நெறியிலே செல் கிறார்களல்லவா? இவர்களைக் காத்து நல்ல நெறியிலே செல்லும்படி செய்வதா யிருந்தது, அவ்வேளாளர் களுடைய செயல்:

> எல்லை பலகடந்திட்(டு) எங்கும் புகழ்பூத்துத்
> தொல்லை மனுக்காக்கத் தோன்றிற்றே!—
>
> தொல்லை - பழமையான. மனு - மனுநெறி முறைமை.

இப்படிக் காக்கத் தோன்றியது உண்மையி லேயே அவ்வேளாளர் செயலாயிருந்த போதிலும், அச்செயல் மெய்தானென்று அன்று வரையில் இருந்து சோழமன்னனுக்கு அதை நிரூபிப்பதுபோல இருந்தது, அத்தீக்குழியில் வளர்ந்த தீ. காட்டு வழி யிலே வந்த ஒரு பேய் செய்த வஞ்சனை யல்லவா இவ் வளவு பெரிய தீக் கொழுந்தை வளர்த்து விட்டது! இத் தீக்கொழுந்தின் புகழ்தானே சோழனுடைய மனதைக் கவர்ந்தது! ஆகவே, இதன் புகழ் பெரி தல்லவா?

> எல்லை பலகடந்திட் டெங்கும் புகழ்பூத்துத்
> தொல்லை மனுக்காக்கத் தோன்றிற்றே! - கொல்லை
> வழியிலொரு பேய்நின்று வஞ்சனையாற் செய்த
> குழியிலெழு செந்தீக் கொழுந்து.

அடுத்தாற்போல், சேரன் வருகிறான். வெகு தொலைவிலிருந்து, மலைகளை யெல்லாங் கடந்து, பழையனூரெல்லைக்கு வந்து சேருகிறான். இவ்வேளாளர் புகழைக் கேட்கக் கேட்க, அவனுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. 'காராளர் என்னும் இந்த வேளாளர் யாவர்?' என்றெல்லாம் எண்ணுகிறான். இவர்களுக்கு இணையாகக் கூடியவர்கள் யாவர்? ஒருவருமே யில்லை எனவும் முடிவு கட்டுகிறான். இந்த முடிவு, அவனுக்குப் பெரிய எக்களிப்பை உண்டாக்குகிறது. இதன்பயனாக உற்சாகமாய்க் கூத்தாடுகிறான். அவன் ஆடுகிற கூத்தைப் பாட்டிலே நாமும் பார்க்கலாம்; அவன் செய்கிற ஆரவாரத்தை நாமும் பாட்டிலே கேட்கலாம்:

**யாவரே காராளர்? யாவர் இணையாவார்!**
**நாவலோ நாவலோ நாவலோ! - கோவைப்**
**பொருப்பால் அளித்தாற்குப் போதுமே, உண்மை**
**நெருப்பால் அமைத்தார் நிலை!**

கண்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாய்த் தூக்கிப் பிடித்து, கல் மழையினின்றும் பசுக்களைக் காத்தான். அரிய செயல்தான் அது. ஆயினும், வேளாளர் செயலைப் பார்க்க, அது குறைவாகத்தான் தோற்றுகிறது சேரனுக்கு. இவர்கள், உண்மையை நெருப்பாலல்லவா நிலைநிறுத்த முயன்றார்கள்? சத்தியத்தையே காக்க வல்லவர்கள் முன்னே, பசுக்களைக் காத்த புகழ் எம்மாத்திரம்?

**யாவரே காராளர்? யாவர் இணையாவார்!**
**நாவலோ நாவலோ நாவலோ!—**

என அவன் கூத்தாடட்டும். இனி, பாண்டியனைப் பார்க்கலாம்.

வேளாளர் புகழ் நாடெங்கும் பரவி வந்தது. புகழோடுகூட, பலவித அபிப்பிராயங்களும் கலந்தன. "ஐயோ, பாவம்! அநியாயமாக இறந்துவிட்

டார்களே, எழுபது பேரும்" என்று சிலர் அனுதாபப் பட்டார்கள். "கேவலம் ஒரு பேய், பெண் பேய், அதன் பேச்சைக் கேட்டதனாலல்லவா, இவ்வளவு அனர்த்தம் விளைந்தது!" என்றார்கள் வேறு சிலர். இது உலகத்தில் இயற்கைதானே? ஒருவர் நல்ல செயலொன்றைச் செய்யப் போய், அதன் பயனாகக் கெடுதி வந்துவிட்டால், எல்லோரும் அவரைக் குறை கூறுவார்கள். அவர் செய்ய எண்ணியது நல்லது தானே என்று நினைப்போர் அரியர்.

பழையனூர் வேளாளர், ஒரு பெண்ணின் வார்த்தையை நம்பி, அவள் தன் கணவனோடு சேர்ந்து வாழவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் வணிகனுக்கு உறுதி கூறினார்கள். அவன் அப் பெண்ணைத் துறந்து ஓட முயல்கிறான் என்று அவர்கள் உண்மையாகவே நம்பியதனால், அப் பெண் ஒரு பேய்தான் என்று அவன் எவ்வளவு சொல்லியும் அவர்கள் ஏற்கவில்லை. முடிவிலே, அவர்கள் பிணை கொடுத்தது பேராபத்திலே முடிந்தது. வணிகன் இறந்தான். தங்கள் உயிரை விட்டு இந்தத் தீமைக்குக் கழுவாய் தேடுவதல்லது, அவர்கள் செய்யத் தக்கது வேறொன்றுமில்லை.

ஆனால், பாண்டி நாட்டிலே சிலர், மேலே குறித்தபடி அனுதாபப்பட்டார்கள். அந்தப் பேய் மகளின் சொல்லை வேளாளர் கேட்டது பெரும் பிழை யென்று அவர்கள் சொல்லிவந்தார்கள். இது, பாண்டியன் காதுக்கும் எட்டியிருந்தது. அவனோ நீதி தவறாதவன்; நீதிக்காக எதையும் தியாகம் செய்தல் தகும் என்ற கருத்துடையவன். இவர்களுடைய கருத்து நியாயமானதென்று அவனுக்குப் படவில்லை. பழையனூர்த் தீக்குழியைக் காண வந்தபோது, இவற்றை யெல்லாம் எண்ணிக்கொண்டே வந்து, தீயைக் கண்டான். அப்போது சொல்லுகிறான்:

"இந்தக் காராளர் பேயின் சொல்லைக் கேட்டது பிழை யென்று சிலர் சொல்லலாம். ஆனால், இவர்கள் பிழை செய்தவர்களா? அல்லர். பேயின்

சொல்லைக் கேட்ட பிழையை, தங்கள் உயிரையே கொடுத்துத் தீர்த்து விட்டார்களே! அவர்கள் உண்மையில் பிழை தீர்ந்தவர்களே யாகிறார்கள்:"

**பிழைத்தாரோ காராளர் பேய்மகள்சொற் கேட்டு?**
**பிழைத்தார்கள் அல்லர்பிழை தீர்ந்தார்.—**

இவர்கள் பிழை தீர்ந்திருக்கட்டும்; பிழை செய்துவிட்டார்கள் என்று சொல்கிறார்களே பிறர், அது என்ன பிழை? ஒரு வணிகனுக்காக வேண்டி ஒரு பேய்க்குப் பிணை நின்றார்கள். சரி, உண்மை தான். இதை யார் பார்த்தார்கள்? ஒருவரும் பார்த்த தில்லை. அம்பலத்திலிருந்த வேளாளரிடம் பேயும் வணிகனுமாக வந்து முறையிட்டார்கள்; முறையிட் டது வேறெவருக்கும் தெரியாது. வணிகன் உயிர் போனதை யறிந்தவுடன், இவ்வேளாளர் அதை யறிந்து பேசாதிருந்திருக்கலாம். "நீங்கள் பிணை யிருந்தீர்களே? இப்படியாகி விட்டதே! என்ன சொல்கிறீர்கள்?" என்று அவர்களைக் கேட் போரில்லை.

ஆனால், வேளாளர் இவ்வாறு எண்ணவில்லை. தாங்கள் கூறிய உறுதிமொழி பழுதாய்ப் போன வுடன், அதற்குக் கழுவாயாகத் தாங்கள் அனைவரும் உயிர்விட வேண்டியதுதான் என்று தீர்மானித்தார் கள். எல்லோரும் காண எரியில் புகுந்து உயிர் விடலா மென்று தீர்மானித்தார்கள். அவ்விதமே, ஊரார் யாவரும் காணும்படி, தீக்குழியிலே இறங்கி விட்டார்கள். இதனால்தானே, பாண்டியனும், இவ் வேளாளர் உயிர் நீத்த தீக்குழியையாயினும் பார்க்க வேண்டுமென்று இவ்வளவு தூரம் வந்திருக்கிறான்!

**- பிழைத்தார்கள்**
**எல்லாரும் காண எரியகத்தே மூழ்கினர்;**

எரியிலே மூழ்கியபோது வேளாளர் எழுபது பேருடைய உடலும் மறைந்து போன தென்னவோ

உண்மைதான்; ஆனால், அப்போதுதான் அவர்களுடைய புகழ் பிறந்தது. அவர்கள் செய்த அரிய செயல் காரணமாகப் பிறந்த புகழானது, மக்கள் உள்ளவரைக்கும், உலகமுள்ளவரைக்கும், இந்தத் தேசத்திலே ஓங்கி வளரும். தொல்லை நீதிமுறையைக் காக்கத் தோன்றியதல்லவா இந்தப் புகழ்? இது காதில் விழுந்தோறும், இதற்குக் காரணமான செயலை மக்கள் நினைவுகூர்வார்கள். இதன் மூலம் அவ்வேளாளர் நினைவு மக்கள் உள்ளத்தை விட்டு என்றும் அகலாதிருக்கும். ஆகவே, அவர்கள் என்றும் வாழ்ந்திருக்கிறார்கள். இறந்தவர்களனைவரும் இறந்தவர்களா? மாய்ந்தவர் மாய்ந்தவர் அல்லர்கள். பூத உடலோடு வாழ்வதொன்றுதானா வாழ்வு? அல்ல; மக்கள் உள்ளத்திலே புகழ்வடிவிலே வாழ்கின்ற வாழ்வு அதனினும் சிறப்புடையது. வேளாளர் அன்று மட்டுமல்ல, இன்றுவரை உளர் என்பது முற்றிலும் பொருந்துமல்லவா?

பிழைத்தாரோ வேளாளர்
பேய்மகள்சொற் கேட்டு?
பிழைத்தார்கள் அல்லர், பிழை
தீர்ந்தார்! - பிழைத்தார்கள்
எல்லாருங் காண
எரியகத்தே மூழ்கினர்:
எல்லாரும் இன்றும்
உளர்.

ஆம், எல்லாரும் இன்றும் உளர்.

# 11. மறுமை யுலகம்

மக்களைப் படைத்த கடவுள் அவர்களோடு கூடவே ஆசை என்ற ஒரு தத்துவத்தையும் சேர்த்துப் படைத்து விட்டான். தாங்கள் துன்பத்திலே ஆழ்ந் திருக்க நேரிட்டால், அத்துன்பத்தினின்றும் விடுதலை பெற வேண்டுமென்ற ஆசை அவர்களுக்கு உண்டா கிறது. இன்பத்திலே மூழ்கியிருந்தால், அந்த இன் பம் என்றும் நீடித்து நிற்கவேண்டும் என்ற ஆசை ஏற்படுகிறது. இந்தத் துன்பம் இன்பம் என்பவற் றின் காரணமாக, எத்தனையோ திட்டங்களை அவர் கள் வகுத்துக் கொள்ளுகிறார்கள்; அவற்றை நிறை வேற்றுவதற்காக எத்தனையோ முயற்சிகளில் ஈடுபடு கிறார்கள். இப்படி அவர்கள் வகுத்துக் கொள்ளும் திட்டங்களும் மேற்கொள்ளும் முயற்சிகளும் இந்தப் பிறப்புக்கு வேண்டியவற்றோடுமட்டும் நிற்பதில்லை. இனி வரப்போகிற பிறப்புக்கு என்னென்ன ஆக வேண்டும் என்பதைக் குறித்து இப்போதே திட்டம் போடுகிறவர்களும் உண்டு. இவர்கள் மேலைக்கு வகுத்துக்கொள்ளும் திட்டங்களுட் சில மிக்க சுவை யுடையனவா யிருக்கின்றன. மக்கள் இதயத்திலே ஆழமாய்ப் பதிந்துள்ள சில அரிய பண்புகளை அவை விளக்கிக் காட்டுகின்றன. இலக்கிய வாயிலாக நமக் குத் தெரிய வருகிற அத்தகைய சில திட்டங்களை இங்கே பார்க்கலாம்.

இந்தத் திட்டங்கள் நாம் விரும்புகிறபடியே மறுபிறப்பில் அமைந்து விடுகின்றனவா இல்லையா என்பது நமக்குத் தெரியாது. அவை அமைவதும் நம்முடைய செயலில் இல்லை. ஆயினும், மக்களுடைய மனம் என்னவோ கோட்டைகள் கட்டிக்கொண்டு தான் இருக்கிறது.

இந்தத் திட்டங்கள், எல்லாக் காலத்திலும் எல்லா வகையான மக்களிடத்திலும் ஒரே மாதிரி யாக அமைந்திருப்பதில்லை. அவரவர்கள் வாழும் இடத்தையும், நாட்டின் நிலையையும், காலப் போக் கையும், சமூகத்தின் பண்பாட்டையும் ஒட்டியே இவை அமைகின்றன. காதலனும் காதலியும் மறுமை யில் தாங்கள் இவ்வாறு இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவது ஒரு வகை. மனமொத்த நண்பர்கள் விரும்புவது மற்றொரு வகை. மக்கள், இயற்கையின் நலத்தை அனுபவித்து, அதன் பயனாய் அமைத்துக் கொள்ளும் திட்டங்கள் வேறு. இலக்கிய சேவையிலே ஈடுபட்ட பெரியோர் விரும்புவது பிறிதொன்று. அடியார்கள் வேண்டுவது தனிப்பட்ட மற்றொரு நிலை.

காதலர்களுடைய விருப்பத்தை முதலாவதாகப் பார்ப்போம். மிகப் பழமையான காலத்தில், ஊர் களும் குடிகளும் இவ்வளவு நெருக்கமாக இல்லை; மக்கட் சமூகத்தில் நாகரிகம் இப்போது பரவியுள்ள அளவு அப்போது பரவவில்லை. மக்களெல்லோரும் ஆடவரும் பெண்டிரும், அவர்கள் எவ்வகுப்பினரா யிருந்த போதிலும், தத்தம் தொழில்களைச் செய்யும் பொருட்டுப் பகல் முழுவதையும் வெளியிலே கழிக்க வேண்டியிருக்கும். மாடு மேய்ப்பவர்கள், ஆண்களும் பெண்களும், காட்டை நோக்கிக் காலையில் மாடுகளை ஓட்டிச் சென்று மேய்த்துவிட்டு, மாலையில் வீடு திரும்புவார்கள். உழவர்கள், குடும்பத்தோடு வய லுக்குச் சென்று, தனித்தனியே தத்தம் வேலைகளைச் செய்வார்கள். வயது வந்த பெண்களை, வெளியே போய்த் தோழிகளோடு விளையாட விடாமல், வீட்டி லேயே அடைத்து வைப்பதென்பது இக்காலத்தி லுள்ள வழக்கம். பண்டைக் காலத்திலே இந்த வழக்கம் இருந்ததில்லை. வயதான இளம்பெண், புனங்காவலுக்காகவோ வயல் வேலைக்காகவோ, வெளியே சென்று இருப்பது அக்காலத்திலே சாதா ரணம். வெளியே சென்றவள், தற்செயலாக, தனக் கொத்த இளங்காளை யொருவனைக் கண்டு, காத

லித்து, பல நாட்கள் அளவளாவுவதும் உண்டு. முடிவில் இவர்களுக்கு மணம் நடைபெறும். இம்முறையிலே அக்காலத்தில் காதல் மணம் சாமானியமாக நடந்து வந்தது.

இந்த முறையிலே, இளைஞனொருவன் தினைப் புனத்திலே ஒரு பெண்ணைக் கண்டு, காதல் கொண்டு, அவளோடு பழகி வருகிறான். ஒரு நாள் வழக்கம் போல அவளைத் தேடி அவன் வந்தபோது, அவள் காணப்படவில்லை. எவ்வளவோ தேடிப் பார்த்தும், அவள் இருப்பிடங்கூட அவனுக்குத் தெரியவில்லை. அவனுடைய மனம் மிக்க வேதனைக்குள்ளாகிறது. இனி அவளைக் காணவே இயலாதோ என்று ஐயுற்று வருந்திப் பிறகு ஒருவாறு தன் நெஞ்சைத் தேற்றிக் கொள்ளுகிறான்.

"இப்போது அவளை மீண்டும் காண இயலாது போனால்தான் என்ன? அவளிடத்து நான் கொண்ட காதலுக்கு எல்லையுமில்லை, அதற்கு அழிவென்பதும் கிடையாது. ஆகவே, இப்பிறப்பிலே நான் அவளை மணம்புரிதல் இயலாது போயினும், நிச்சயமாக மறு பிறப்பிலே மணம்புரிவேன். இன்றுள்ளது போலவே என் காதலானது மறுபிறப்பிலும் தொடர்ந்து வரும். அப்போது அவளை நாயகியாகப் பெற்று மகிழ்ச்சியோடு வாழ்வேன்" என்று காதலன் தன் நெஞ்சுக்கு ஆறுதல் கூறிக் கொள்ளுகிறான் :

**பெறுவது இயையா தாயினும், உறுவதொன்று**
**உண்டுமன், வாழிய நெஞ்சே!...**
**மையீர் ஓதி மாஅ யோள் வயின்**
**இன்றை யன்ன நட்பின் இந்நோய்,**
**இறுமுறை எனஒன்(று) இன்றி,**
**மறுமை யுலகத்து மன்னுதல் பெறுமே!**

**உறுவது** - இனிமேல் வரப்போகும் நன்மை. **மையீர் ஓதி** - மைபோல கறுத்த குளிர்ச்சியான கூந்தலை யுடையவள். **மாயோள்** - மாந்தளிர் போன்ற நிறமுடையவள். **வயின்** - அவளிடத்தில். **இந்நோய்** - நான் கொண்ட இந்தக் காதல் நோய். **இறுமுறை** - அழிவு. **மன்னுதல் பெறும்** - நிலைபெறும்.

உண்மையான அன்புக்கு அழிவு கிடையாது, அது ஒரு பிறவியோடு நின்று விடாது; மறு பிறப்பிலும் தொடர்ந்து வந்து, இப்பிறப்பிலே கைகூடாத இன்பத்தை மறுமை யுலகத்திலே கூட்டி வைக்கும் என்று காதலன் முடிவு கட்டுகிறுன்.

மறு பிறப்பிலும் காதலின்பம் தொடர்ந்து வரும் என்ற உறுதியைக் காதலனிடம் கண்டோம். இதைக் குறித்துக் காதலியின் கருத்தென்னவென்பதையும் மற்ருெரு குறுந்தொகைப்பாடல் மூலமாகக் காணலாம். பெண்ணொருத்தி, தான் காதலித்த ஆடவனை மணந்து, மகிழ்ச்சி நிறைந்த இல்வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிருள். மறு பிறப்பைப்பற்றி ஒரு சமயம் அவள் சிந்திக்க நேர்ந்தது. அப்போது, இப்பிறப்பிலே தானும் தன் நாயகனுமாக இருந்து அனுபவிக்கிற இல்லறவாழ்க்கையே மறுமையிலும் வந்து வாய்க்கவேண்டும் என்ற அவா மிகுதியினுலே தன் விருப்பத்தை வெளியிடுகிருள் :

**இம்மை மாறி மறுமை யாயினும்,**
**நீயா கியர் என் கணவனை !**
**யாஞு கியர்நின் நெஞ்சுநேர் பவளே !**

"மறு பிறப்பிலும் நீயே என் கணவனுக வந்து பிறக்க வேண்டும். உன் நெஞ்சம் விரும்பிக் காதலிக்கும் பெண் நானேயாக அமைதல் வேண்டும்" என்பது நாயகி தன் நாயகனை முன்னிலைப்படுத்திச் செய்து கொள்ளும் பிரார்த்தனை.

இவை, காதல் வயப்பட்டோருடைய மனநிலை. நட்பைக் குறித்து இனிப் பார்க்கலாம்.

பெருங்கதை என்ற பெரிய காவியத்துக்குக் கதாநாயகனை உதயணனுடைய சரித்திரம் எல்லோருக்கும் தெரியும். பிரச்சோதனச் சக்கரவர்த்தியால் சிறையிடப்பட்டிருந்த சமயத்தில், அவனுடைய மகள் வாசவதத்தையைக் கண்டு உதயணன் காதல் கொண்டான். ஒருநாள், புனல்

விளையாட்டின்போது நகரத்தில் நேர்ந்த குழப்பத்தால், உதயணன், அவளை ஒரு பிடியின் மீதேற்றிக்கொண்டு, தன் நாடு நோக்கிச் சென்றான். நெடுந்தூரம் மிக்க வேகமாக வந்த அயர்ச்சி தாங்கமாட்டாமல், அந்தப் பிடியானது வழியிலே விழுந்து இறந்தது. அப்போது உதயணன், அந்த யானையின் உயிர் நன்னெறியை அடையச் செய்ய வல்ல மந்திரமொன்றை அதன் காதில் உபதேசித்து விட்டு, தனக்கு அது செய்த நன்றிக்காகப் பெரிதும் மனம் நெகிழ்ந்து, "மறு பிறப்பிலும் நீ என்னுடன் சேர்ந்து உறைவாயாக" என்று வேண்டினும் :

**'எம்மை இடுக்கண் இம்மை தீர்த்தோய்!**
**வரும்பிறப் பெம்மொடு ஒருங்கா கியர்' எனச்**
**செந்தா மரைக்கண் தெண்பனி யுறைப்ப**
**நிறுத்த லாற்று நெஞ்சில்நிகழ் கவற்சியன்—**

ஒருங்கு ஆகியர் - ஒன்றாக வாழ்வாயாக.

என்று ஆசிரியர் கூறுகிறார். தனக்கு உதவி செய்த ஒரு விலங்கின் அன்புக்கு உருகி உளங்குழைந்து உதயணன் இவ்வாறு வேண்டுவது இலக்கிய உலகத்திலேயே தனிச் சிறப்புடையதோர் செய்தி.

ஒரு யானையினிடத்தே இவ்வளவு அன்பு தோன்றுமாயின், பெருங்கொடையாளர்களான வள்ளல்களிடத்தில் புலவர்களுக்கு எவ்வளவு ஈடுபாடு இருந்திருக்க வேண்டும்! பழங்காலத்தில் தமிழ் நாட்டிலிருந்த வள்ளல்கள் பலருள்ளும், பாரியென்பவன் மிகச் சிறந்தவன். காட்டு வழியாக இவன் தன் தேரிலேறி வந்தபோது, ஒரு முல்லைக் கொடியைக் கண்டான். படர்வதற்குக் கொழுகொம்பொன்றுங் காணது தவித்துக் கொண்டிருந்தது அந்த மென்மையான கொடி. அதன் நிலைக்கு இரங்கி, தான் ஏறி வந்த தேரையே அது தழுவிப் படர்வதற்காகக் கொடுத்துச் சென்றனும் பாரி.

இந்த வள்ளலின் உயிர்த் தோழராயிருந்தவர் கபிலர் என்ற புலவர். தமிழ்வேந்தர் மூவரும் கூடிப்

பாரியை எதிர்த்துப் போரிட்டபோது, போரில் அவன் உயிர் துறந்தான். கபிலர், தம்மை விட்டு விட்டுப் பாரி பிரிந்து சென்றமைக்காகப் பெரிதும் வருந்தி, அவனையே எண்ணியிருந்து சிறிது காலம் சென்று உயிர் துறந்தார். அவனை நினைத்து வருந்தி அவர் பாடிய பாடல்கள் மிகப்பல. அவற்றுள் ஒன்றில், "இப்பிறவியிலே இதுகாறும் நாமிருவரும் உயிர்த் தோழர்களாக இருந்தோம். ஆனால், இப்போது நீ என்னைப் பிரிந்து சென்றுவிட்டாய். நானும் உயிர் துறக்கிறேன். இதுவரையிலும் நாம் இருந்தது போலவே, மறுமையிலும் பிரியாத நட்புடையவர்களாய் ஒழுகுவோமாக!" என்று பாடுகிறார்:

**இம்மை போலக் காட்டி, உம்மை,**
**இடையில் காட்சி நின்னோடு**
**உடன் உறை வாக்குக, உயர்ந்த பாலே!**

**இம்மை - இப்பிறப்பு. உம்மை - மறுபிறப்பு. இடையில் காட்சி - இடைவிடாத பெருமையையுடைய. உயர்ந்த பால் - விதி.**

"மறு பிறப்பிலும் பிரிவென்பது அறியாத ஒரு நட்பை விதி நமக்குக் கூட்டிவைப்பதாக!" என்பது கபிலருடைய வேண்டுகோள்.

நதிகளை நமது நாட்டில் தெய்வமாகப் போற்றி வந்திருக்கிறார்கள். காவேரியம்மன், கங்கா தேவி என்றெல்லாம் நதியைச் சொல்லுவார்கள். நதிக்கே பொங்கலிடுதலும் படைத்தலும் ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக, நதிகளையொட்டிய உண்மையான ஆனந்த அனுபவம் பெண்களுக்குத்தான் அதிகமாக உண்டு. இந்த அனுபவம் ஆடவருக்கு அவ்வளவாக வாய்ப்பதில்லை. இவர்களுக்கு இளமையில் இந்த அனுபவம் சிறிது உண்டென்பது உண்மை; சிறு பிள்ளைகள், மரத்திலிருந்தும் மதகிலிருந்தும் ஆற்று வெள்ளத்தில் குதித்து நீச்சலடித்து, மணிக் கணக்கு என்ற ஒரு காலவரையறை யில்லாதபடி தண்ணீரில் விளை

யாடுவதிலே இந்த ஆனந்த அனுபவத்தைப் பெறு கிறார்கள். ஆனால், வயது முதிர முதிர, இந்த அனுபவம் கிடைப்பதில்லை. ஆற்றிலே காலா காலத்தில் தண்ணீர் வருகிறதா, வந்து வயலுக்குச் சரியாகப் பாய்கிறதா, வயல் நன்றாய் விளைகிறதா என்ற கவலை இவர்களுக்கு உண்டாகிறதே யொழிய, ஆற்றை யொட்டிச் சுகம் எதையும் இவர்கள் அனுபவிப்பதாகக் காணோம். ஆற்றுக்குக் குளிக்கப் போனாலுங்கூட, ஏதோ சம்பிரதாயமாக ஒரு முழுக்கு; அவ்வளவு தான். பத்தே நிமிஷத்தில் கரையேறி விடுவார்கள். வயது முதிர்ந்த ஆடவர்கள் இதனால் ஆற்றைப்பற்றி என்ன தெரிந்து கொள்ள முடியும்? அல்லது, அதனால் இவர்களுக்கு என்ன சுகந்தான் உண்டாதல் கூடும்?

ஆனால், பெண்களுக்கோ, ஆடவருக்குள்ள கவலைகளொன்றும் கிடையாது. குழந்தைப் பருவத்திலும், மங்கைப் பிராயத்திலும், முதுமையிலும் ஆற்றினிடத்தில் மிகுந்த ஈடுபாடுடையவர்களாக இருக்கிறார்கள். குடமும் கையுமாக ஒரு பெண் ஆற்றுக்குப் போனால், குடத்தைத் தேய்த்து அலம்பி வைத்து விட்டு, புடைவை முதலியவற்றைத் துவைத்த பிறகு, ஆற்றிலிறங்கிச் சாவகாசமாய்க் குளித்து, மஞ்சள் பூசி முழுகிவிட்டு, கடைசியாகக் குடத்தில் தண்ணீர் மொண்டு கொண்டு, கரையேறி வீடு திரும்பக் குறைந்தது இரண்டு மணி நேரமாவது பிடிக்கும். அயல் வீடுகளிலுள்ள தன் தோழிகளை ஒரு பெண் படித்துறையில் கண்டுவிட்டால், இன்னும் ஒரு மணி நேரம் அதிகமாகும்.

வயது முதிர்ந்த பெண்டிரும் இப்படித்தான். கையில் சில பத்திரங்களும் புஷ்பங்களும் அறுகும் எடுத்துக்கொண்டு, இவர்கள் ஆற்றுக்கு வருவார்கள். மெதுவாக ஸ்நானத்தை முடித்துக்கொண்டு, பத்திர புஷ்பங்களால் காவேரியம்மனை வழிபட ஆரம்பித்து விட்டார்களானால், அவர்களுக்கும் அதே இரண்டு அல்லது மூன்று மணி நேரம் ஆகிவிடுகிறது.

ஆற்றிலே தண்ணீரில்லாத கோடை காலத்திலும், பெண்களுக்கு அதனிடத்தில் உற்சாகம் குறைவதில்லை. மரத்தாலோ பித்தளையாலோ செய்த ஊற்றுப்பட்டை எல்லோரும் வைத்திருப்பார்கள். அதை எடுத்துக்கொண்டு, இரண்டு மூன்று பெண்கள் சேர்ந்து ஆற்றுக்குப் போவார்கள். போய், ஊற்றுத் தோண்டி, தண்ணீரை இறைத்துவிட்டு, புதுத் தண்ணீர் ஊறியபின் அதில் குளித்து முழுகிவிட்டு, குடம் நிறைய அந்தத் தண்ணீரை இறைத்து மொண்டுகொண்டு வருவதில் பிறக்கும் ஆனந்தம், ஆறு நிறைய ஓடும் தண்ணீரில் குளிப்பதனாலுண்டாகும் ஆனந்தத்துக்கு எவ்வகையிலும் குறைந்ததன்று.

இந்த உண்மையை மனதில் வைத்துக்கொண்டு, இப்போது வைகை யாற்றங்கரைக்குப் போவோம். பாண்டியன் தமிழ் வளர்த்த மதுரையிலே, வைகைக் கரையிலே, மார்கழி தை மாதங்களில் விடியற் காலம் பெண்கள் நீராடுகிறார்கள். நீராடியபின், புடைவைகளைப் பிழிந்து உடுத்திக்கொண்டு, திருநீறு முதலியன அணிந்து, பத்திர புஷ்பங்களைத் தூவி ஆற்றை அருச்சித்து வணங்கி வேண்டுகிறார்கள். "இவ்வளவு உல்லாசமாக இந்த வைகையாற்றிலே விளையாடுகிற பேறு எங்களுக்கு இப் பிறப்பிலே கிடைத்ததற்கு, முற்பிறப்பில் நாங்கள் எவ்வளவோ தவம் செய்திருக்க வேண்டும். இனி வரும் பிறப்பிலும், இவ் வைகையிலே நீராடும் நற்பேறு எங்களுக்கு வாய்க்க வேண்டும்" என்று பிரார்த்திக்கிறார்களாம்:

**இன்ன பண்பின் இன்நைந்நீ ராடல்**
**முன்முறை செய்தவத்தின் இம்முறை இயைந்தேம்;**
**மறுமுறை அமையத்தும் இயைக,**
**நறுநீர் வையை நயத்தகு நிறையே!**

**பண்பின்-தன்மையுடைய. இன்-இனிமையான. முறை-பிறப்பு. இயைந்தேம்-கிடைக்கப் பெற்றோம். நயத்தகு நிறை-எல்லோராலும் விரும்பப்படுவதாகிய, ஆறு நிறைந்து போகின்ற நீர்.**

இந்தப் பிறப்பிலே தாங்கள் அனுபவித்த நல்ல விஷயங்களையும் பெற்ற இன்பத்தையும் அடுத்து வரப்போகும் பிறப்பிலும் பெற வேண்டுமென்ற ஆசையால், மக்கள் எவற்றையெல்லாம் விரும்பினார்கள் என்று இலக்கிய வாயிலாக இதுவரையில் பார்த்து வந்தோம். இனி இலக்கிய உலகத்தை விட்டு விட்டு, வாழ்க்கை யுலகத்துக்கு வருவோம். வந்து, நாம் வாழ்ந்துவரும் இந்தக் காலத்திலே பெரியோர் சிலருடைய கருத்துக்கள் எங்கெந்த வழிகளில் செல்லுகின்றன என்பதையும் சிறிது பார்ப்போம்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் *, மகா மகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையரவர்கள் ஒரு நோய்வாய்ப்பட்டுப் பெரிதும் துன்புற்றார்கள். சத்திர சிகிச்சை செய்து, ஒருவாறு அவர்களுக்கு உடம்பு குணமடைந்தது. அப்போது ஒரு நாள் அவர்களைப் பார்க்க வைத்தியசாலைக்குப் போயிருந்தேன். மிக்க துர்ப்பலமான நிலையிலிருந்தார்கள். இருந்தும், தமிழுக்காகப் பாடுபட வேண்டும், தமிழ் நூல்களை வெளியிட வேண்டும் என்ற உணர்ச்சியும் உற்சாகமும் அவர்களிடத்து அந்நிலையிலும் மிகுதியாக இருந்தன. அவர்களுடைய உடல் மெலிவைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தபோது, சொன்னார்கள் :

"என்னுடைய தள்ளாமையைப் பற்றித்தான் நான் இப்போது மிக்க கவலை கொள்ளுகிறேன். நான் செய்ய நினைக்கும் காரியங்களை, என் தள்ளாமை காரணமாக, செய்ய இயலவில்லை. ஆனால், எவ்வளவோ காரியங்களைச் செய்ய வேண்டும், எத்தனையோ நூல்களைப் பரிசோதித்துப் பதிப்பிக்க வேண்டும் என்ற ஆசைமட்டும் அதிகமாயிருக்கிறது. வெளியிட வேண்டிய தமிழ் நூல்களும் பல உள்ளன. இவற்றையெல்லாம் எண்ணும்போது, தள்ளாத இந்த உடலோடிருப்பதனால் என்ன பயன்? தெய்வாதீனமாக என் ஆயுள் முடிய நேர்ந்தாலும், எனக்குச் சந்தோஷம் தான். வேறு புதிய உடலை

* **இக் கட்டுரை எழுதியது 1941 இறுதியில்.**

எடுத்துக்கொண்டு, இங்கேயே வந்து பிறந்து, அபூர்த்தியாக இப்போது வைத்துள்ள தமிழ்ப் பணிகளை இதே நினைவுடன் பூர்த்திசெய்ய ஆசைப்படுகிறேன். இதையே எனக்கு அருள்செய்ய வேண்டுமென்று இறைவனை எந்நேரமும் பிரார்த்தித்து வருகிறேன்" என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட போது எனக்குப் பெரிய ஆச்சரியம் ஏற்பட்டது. பொதுவாக, மக்களெல்லோருமே தங்கள் இகவாழ்வுக்கு வேண்டிய சுகத்தைத் தேடுவதிலேயே கருத்தா யிருக்கிறார்கள். மறு பிறப்பைப் பற்றிச் சிந்திக்க நேரிட்டாலும், இவ்வகையான சுகமே அங்கும் அமைய வேண்டும் என்று விரும்புகிறார்கள். இகத்திலே தங்களுக்குச் சுகந் தராததாய், ஆன்ம சுகத்தை மட்டுமே தருவதாயுள்ள செயலில் ஈடுபடுவோர் மிக மிக அரியர். இதை ஊன்றிப் பார்க்கும்போது, தமிழ்த்தொண்டுக்காக மறுபிறவியெடுக்க வேண்டும் என்று ஐயரவர்கள் ஆசைப்படுதல் எவருக்கும் வியப்பை யுண்டாக்குவது இயல்பு.

வங்கக் கவிஞர் ரவீந்திரநாத தாகூர், சென்ற நூற்றாண்டின் பிற்பாதியிலும் இந்நூற்றாண்டின் முற்பகுதியிலும் இந்நாட்டில் நம்மிடையில் வாழ்ந்தவர். இந்தக் காலம் இந்திய சரித்திரத்தில் மிக முக்கியமானது. எத்தனையோ சமூகக் கிளர்ச்சிகளும், அரசியற் கிளர்ச்சிகளும், இலக்கியம், இசை பற்றிய கிளர்ச்சிகளும் இக்காலத்தே தோன்றின; சீர்திருத்தங்கள் எத்தனையோ. மேல்நாட்டு நாகரிகம் என்னும் புயல் நம்மிடையிலே சண்டமாருதமாக வீசிற்று. வீசி, நமது நாகரிகத்தை, அதன் வேர் முதல் நுனிக்கொழுந்து வரையில், ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது. இந்திய மக்கட் சமூகத்தின் புராதனப் பண்பாடு, சமயப் பண்பாடு, கலையுணர்ச்சி, யாவும் இந்தப் பெரும் புயலினாலே கலக்குண்டன. இந்தக் கலக்கம் தெளிவதற்குள்ள அறிகுறிகள் இப்போது தான் காணப்படுகின்றன. தெளிவு இன்னும் ஏற்பட

வில்லை; முழுத்தெளிவும் என்றைக்கு ஏற்படும் என்பதும் இப்போது சொல்ல இயலாது.

மேல்நாட்டு நாகரிகம் என்ற பெரும் புயல் எழுந்த காலத்திலேயே தாகூர் தோன்றி விட்டார். அது மிகக் கடுமையாகச் சுழன்று அடித்த போதும், அதன் நடுவில், சிறிதும் அசையாது நின்றூர் கவிஞர் தாகூர். அந்த நாகரிகத்தை அவர் அறவே தள்ளி விடவில்லை. அதனுல் ஏற்படக்கூடிய சில சௌகரியங்களை மட்டும் உபயோகித்துக்கொண்டார்; அதில் சிக்கிக் கொள்ளவில்லை. இந்திய மக்களின் புராதனமான நாகரிகத்தின் பெருமையை நன்ருக உணர்ந்து, அதைப் பிரகாசப் படுத்துவதற்கே தம் வாழ்நாளை அர்ப்பணம் செய்தார். மறுமையைப் பற்றித் தாகூரும் சிந்தனை செய்திருக்கிருர். செய்து, என்ன முடிவுக்கு வருகிருர் என்பதையும் இனிப் பார்ப்போம்.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம்; 1893-ஆம் ஆண்டு மே மாதம். ஷெலிதா என்னுமிடத்தில் தாகூர் கொஞ்ச காலம் தங்கியிருந்தார். மாலை வேளையிலே, ஆற்றில் ஸ்நானம் செய்துவிட்டுக் கரையிலே உலாவுவார். சில சமயம், படகிலேறி, நடு ஆற்றுக்குச் சென்று, நங்கூரம் போட்டுவிட்டு, மேல் தளத்திலே வானத்தை நோக்கிய வண்ணமாகப் படுத்திருப்பார். சூரிய வெளிச்சம் சிறிது சிறிதாக மறைந்த பின், இருள் சூழ்ந்துகொள்ளும். அப்போது, வானத்திலுள்ள நட்சத்திரங்கள் ஒவ்வொன்ருகப் பிரகாசிக்கத் தொடங்கும். அவற்றைப் பார்த்துக் கொண்டே, ஆனந்தமாகச் சிந்தனையில் ஆழ்ந்துவிடுவார். இவ்வாறு பல நாட்கள் அவர் ஆற்றின் மத்தியில் படகிலே இருந்து கழித்திருக்கிருர். ஆற்றையும், ஆற்றங்கரையையும், மாலைப் பொழுதையும், வானத்திலே தோன்றிய நட்சத்திரங்களையும், அந்நேரத்தில் தம்மைச் சுற்றிலும் நிலவிய அமைதியையும் அவர் வெகுவாக அனுபவித்திருக்கிருர். இந்த அனுபவத்தைத் தமது கடித மொன்றில் எடுத்துரைக்கிருர்:

"நட்சத்திரங்களை யுடுத்த வானத்தால் சூழப் பட்ட இந்த உலகத்திலே நான் மறுபடியும் வந்து பிறப்பேனு என்ற ஒரு கேள்விதான் தினமும் எனக் குத் தோன்றுகிறது. வங்காள தேசத்திலே, ஏகாந்த மான இந்த இடத்திலே, அமைதியான இந்த ஆற்றின் மத்தியிலே, சாந்தம் தவழ்கின்ற இதுபோன்ற மனோ கரமான மாலைப்பொழுதை நான் மறுபடியும் ஆனந்த மாய் அனுபவித்தல் முடியுமா?

"ஒருகால், முடியாமற் போனாலும் போகலாம். வேறோரிடத்தில் போய் நான் பிறக்க நேரிடலாம். என்னுடைய மனதும், இந்த எண்ணங்களோடு பிற வாமல், வேறு நினைவோடு அமையக்கூடும். இப்படிப் பட்ட மாலைப்பொழுதுகள் எத்தனையோ தோன்றக் கூடும். ஆனால், அவற்றால், இத்தகைய இன்பத்தை யும் ஆறுதலையும் நான் பெறுதல் இயலாததாகும்.

"தவிர, ஐரோப்பாவிலே போய் நான் பிறக்க நேர்ந்துவிட்டால் என்ன பண்ணுகிறது என்பதை நினைக்கத்தான் எனக்கு அதிகத் திகிலாயிருக்கிறது. இறுதியற்ற வானமும் உலகமும் பார்க்கும்படியாக, ஒருவன், தன் உடலை மூடாமல் திறந்து போட்டுக் கொண்டு, அந் நாட்டிலே படுத்திருக்க முடியுமா? இன்னும் சொல்லப்போனால், கீழே படுத்துக் கிடப் பது ஒன்று மாத்திரமே பெருங் குற்றமாய்ப் போய் விடுமே!"

தாகூர் இவ்விதம் சொல்வதைப் பார்த்து நாம் அதிசயிக்க வேண்டி யிருக்கிறது. தம்முடைய தினசரி வாழ்க்கையிலே மேல்நாட்டு நாகரிகத்தின் சின்னங்கள் பலவற்றை அவர் தழுவிக் கொண்டிருந்த போதிலும், அவருடைய உள்ளமானது அந்த நாகரி கம் கேவலமானதென்று கண்டு, அதை அப்படியே ஒதுக்கித் தள்ளுகிறது. "பகவானே! எனக்கு என்ன வந்தாலும் வரட்டும். ஆனால், ஐரோப்பாவில் அதா வது ஓர் ஐரோப்பியனாகப் பிறக்கும்படியான கொடு மையை மட்டும் எனக்குச் செய்து விடாதே!" என்று வேண்டுகிற பாவனையில் அவர் எழுதியிருக்

கும் வார்த்தைகளைப் பார்க்கும்போது, தேசபக்தி எவ்வளவு ஆழமாக அவருடைய இதயத்தில் ஊன்றியிருக்கிறதென்பதையும், நமது புராதனமான பண்பாட்டில் அவருக்கு எவ்வளவு அழுத்தமான பற்றுதல் இருக்கிற தென்பதையும், மறு பிறப்பிலும் இதையே பெற்று ஆனந்திக்க வேண்டு மென்பதில் அவர் எவ்வளவு ஆத்திரப்படுகிருரென்பதையும் நாம் உணர்கிறோம்.

இனி, கடைசியாக, இறைவனைத் தம்முடைய உள்ளத்திலே கண்டு, பிரபஞ்ச மெங்கும் வியாபித்திருக்கும் அவனுடைய விசுவரூபத்தைத் தரிசித்த அடியவ ரொருவருடைய மனம் எதை நாடி நிற்கிறது என்பதையும் தெரிந்து கொள்வோம்.

கடவுளுடைய திருவருளைப் பூரணமாகப் பெற்று அனுபவித்த அடியார், அப்பர் சுவாமிகள். அவர் ஒரு வரம் வேண்டுகிறார். பிறவி வேண்டாம் என்று அவர் கேட்கவில்லை; பிறவி வரட்டும் என்றே சொல்லுகிறார். இறைவன் இந்தப் பிரபஞ்ச மெங்கும் நீக்கமற நிறைந்து நிற்கிறான். ஒவ்வோர் உயிரிலும் உயிரற்ற பொருளிலும் அவனே உறைகிறான். இப்படி எல்லாவற்றிலும் அவன் வியாபித்திருக்கும் போது, 'எனக்கு இந்தப் பிறவி வேண்டாம், அந்தப் பிறவி வேண்டாம்' என்று சொல்ல நமக்கென்ன அதிகாரமிருக்கிறது? மிக மிக அற்பமான ஒரு புழுவாய்ப் பிறந்தால்தான் என்ன? அந்தப் புழுவுக்குள்ளும் இறைவனுடைய தெய்வ ஒளி பிரகாசிக்கத் தானே செய்யும்? ஆகவே, "நான் புழுவாய்ப் பிறக்க நேரிட்டாலும், அதைப்பற்றிக் கவலையில்லை" என்கிறார் அப்பர். ஆனால் ஒன்று: அந்தப் புழுவுக்கும் உணர்ச்சி உண்டல்லவா? இறைவனுடைய திருவருள் எங்கும் பிரகாசிக்கிறது; எல்லாம் அவன் செயலே யன்றி வேறில்லை; என்னுள்ளும் அவனே உறைகிறான் என்பதை அந்தப் புழுவாய்ப் பிறந்த போதும் உணர வேண்டும் என்கிறார். அதாவது,

அதன் உணர்ச்சியும் கடவுளுடைய திருவடிகளைத் தியானிப்பதாகவே அமைய வேண்டும் என்கிறார்:

**புழுவாய்ப் பிறக்கினும், புண்ணியா!**
**உன்னடி என்மனத்தே**
**வழுவா திருக்க வரந்தரல்**
**வேண்டும்: இவ் வையகத்தே**
**தொழுவார்க் கிரங்கி இருந்தருள்**
**செய்பா திரிப்புலியூர்**
**செழுநீர் புனற்கங்கை செஞ்சடை**
**மேல்வைத்த தீவண்ணனே!**

என்று அப்பர் சுவாமிகள் திருப்பாதிரிப்புலியூரில் பாடுகிறார். இறைவனுடைய பெருங்கருணையை நினைக்குந் தோறும் அவருடைய உள்ளத்திலே ஆனந்த வெள்ளம் கரை கடந்து பொங்குகிறது. ஆகவே, தமக்கு எந்தப் பிறவி வந்த போதிலும், அதில், இந்த ஆனந்தத்தைத் தாம் பெற வேண்டுமென்று ஆசைப்படுகிறார். இறைவனுடைய பெருங் கருணைக்கு அடையாளமாகிய அவனுடைய திருவடியை மறவாதிருந்தால் இந்தப் பேரானந்தம் தானே வரும். ஆகையால், அவன் திருவடியை மறவாத உணர்ச்சி தம்மிடத்திலே நிலைபெற வேண்டும் என்று அவர் கேட்கிறார்.

பல வகைப்பட்ட மக்களுடைய ஆசைகளை மேலே பார்த்தோம். காதலர்களுடைய எண்ணமானது அவர்களுக்குள்ளேயே சுழன்று கொண்டிருக்கிறது; ஒருவருடைய எண்ணம் மற்றவரை விட்டு அப்பாற் செல்லவில்லை. நண்பனிடத்தும் விலங்கினிடத்தும் பிறந்த அன்பிலே, இந்த எண்ணங்கள் சற்று விரிவடைந்திருப்பதைக் காண்கிறோம். கலையையும் அத

னால் விளையும் உயர்ந்த சமூகப் பண்பாட்டையும் இதயப் பண்பாட்டையும் இந்த எண்ணங்கள் தழுவி நிற்பதை தாகூர் வாழ்க்கையிலிருந்து அறிகிறோம். அப்பர் சுவாமிகளுடைய நிலையும் இதுவே. சமயமே அவருடைய கலையுணர்ச்சி யனைத்தையும் தழுவிக் கொண்டது.

புழுவாய்ப் பிறக்கினும், புண்ணியா !
உன்னடி என்மனத்தே
வழுவாதிருக்க வரந்தரல்
வேண்டும் !

3476

# டால்ஸ்டாய் நூல்கள்

1. இனி நாம் செய்ய வேண்டுவது யாது?

*மொழிபெயர்ப்பு: ரா. விசுவநாதன்*

2. டால்ஸ்டாய் சிறுகதைகள் (முதல் பாகம்)

3. டால்ஸ்டாய் சிறுகதைகள் (இரண்டாம் பாகம்)

*மொழிபெயர்த்தவர்கள்:*

*ரா. விசுவநாதன் கு. ப. ராஜகோபாலன்*

ஒவ்வொன்றும் தனித் தனி விலை ரூ. 1—0—0

---

4. படையெடுப்பு (மூன்றும் பாகம்)

*மொழிபெயர்த்தவர்: சுப. நாராயணன்*

5. இருளின் வலிமை (நாடகம்)

*மொழிபெயர்ப்பு: நா. வானமாமலை B.A.*

இவ்விரண்டும் தனித்தனி விலை ரூ. 1—4—0

---

6. டால்ஸ்டாய் கட்டுரைகள்

*மொழிபெயர்ப்பு: கா. இராமநாதன் செட்டியார்*

விலை ரூ. 1—8—0

*(தபாற் செலவு தனி)*

**சக்தி காரியாலயம்**

வடக்கு வெளி வீதி, மதுரை

# சக்தி மலர்

3470

சக்தி மலர்ப் பதிப்பு நூல்கள் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் ஏற்ற உயரிய நற்கருத்துக்களைத் தெளிவான எளிய நடையில் வெளியிட எழுந்தனவாகும்

க. கன்னிமான்
உ. நடந்த காவேரி
ந. சாதிப் பலாப்பழம்
ச. சீகாழிப் பள்ளு
ரு. ஒரு தும்மல்
சா. சிறு நெருஞ்சில்
எ. சாட்டையிலாப் பம்பரம்
அ. காதல்
கூ. ஆராரோ
க0. யாவரே காராளர்
கக. மறுமை யுலகம்

சக்தி காரியாலயம்
வடக்கு வெளி வீதி, மதுரை